# தாய்வீட்டுச் சீர்

## சிறுகதைகள்

WEST TAMBARAM, MADRAS

பூவை எஸ். ஆறுமுகம்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

முதற் பதிப்பு: மார்ச், 1967.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 2-50

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை-14.

# பதிப்புரை

தமிழில் சிறுகதை இலக்கியம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. தொழிற் சாலையிலிருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கில் பொருள்கள் உற்பத்தியாகி வெளிவருவது போல், ஒவ்வொரு நாளும் புதுப்புதுப் கதைகள் ஆயிரக்கணக்கில் தோன்றிக்கொண்டே யிருக்கின்றன. இவற்றில், தனித் தன்மையும், சிறப்பும் பெற்று வெளிவருவன ஒரு சிலவே. அந்த ஒரு சிலவற்றுள் பூவை எஸ். ஆறுமுகத்தின் கதைகள் அடங்கியுள்ளன.

பூவை, தனக்கென ஒரு தனித் தன்மை பெற்றவர். கிராமிய வசனங்களிலே ஒரு புது மெருகு சேர்த்து, கதை யைப் பொலிவு பெறச் செய்யும் சிறந்த திறமை அவரிடம் பொதிந்து கிடக்கின்றது.

பாத்திரங்களை நேரடியாகப் பேசவிட்டுக் கதையைச் சுவைப்படுத்திக் கூறும் அவருடைய நடை ஒரு கவர்ச்சி நடையே யாகும். தாய்வீட்டுச் சீர் என்ற இந்தக் கதைத் தொகுதியில் அந்தச் சுவை மலிந்துகிடக்கின்றது. வாழ்க் கையை இலட்சியமாக்கும் இந்தக் கதைகளைத் தமிழ் வாசகர் களுக்கு விருந்தாக வழங்குகிறேன்.

ஏ. திருநாவுக்கரசு.

# கதைகள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தாய் வீட்டுச் சீர் | ... | 5 |
| 2. | காதலிக்கிறேன்! | ... | 15 |
| 3. | உயிர்க் கழு | ... | 33 |
| 4. | தழுவாத துருவங்கள் | ... | 41 |
| 5. | ஞானப்பால் | ... | 55 |
| 6. | தம்பிக் கோட்டை வீச்சரிவாள் | ... | 61 |
| 7. | ரத்த வெள்ளம் | ... | 69 |
| 8. | அதோ, தெரு நாய் | ... | 77 |
| 9. | தேடிவந்த செல்வம் | ... | 82 |
| 10. | இதயம் எனும்... | ... | 94 |
| 11. | நல்ல மூச்சு | ... | 101 |
| 12. | அலகிலா விளையாட்டு | ... | 112 |
| 13. | கூடுவிட்டுக் கூடு | ... | 120 |
| 14. | போதம் | ... | 141 |
| 15. | தாம்பத்தியம் | ... | 150 |

# தாய் வீட்டுச் சீர்

தெரு வாசலில் போடப்பட்டிருந்த காவணத்தை மிதித்ததும், கைப்பிடியில் இருந்த குடையைச் சுருக்கிக் கட்கத்தில் வைத்துக் கொண்டு நிலைப்படியைத் தாண்டினார் மாசிமலை அம்பலம். கழுத்தில் உருமாலை சுற்றிப் போட்டிருந்த துண்டை எடுத்துமுகத்தைத் துடைத்துக்கொண்டார். மண்டை வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது; அவருடைய மனத்தை அழுத்திக் கொண்டிருந்த சுமை தலைக்கு மாறியது போலும்! ஒரு கணம், ஐயனார் சிலையென மலைத்து வீற்றிருந்தார். மறு விநாடியில் அவரது விழி வளையங்களில் நீர்த்துளிகள் ஊஞ்சலாடத் தொடங்கின. பெருமூச்சும் புறப்படத் தப்பவில்லை!.

"ஆயி!..."

பாசத்தின் அழைப்பு சமையற் கூடத்துக்கு ஓடிற்று. அவரது கண்கள் பின்புறம் திரும்பின. வேட்டித் தலைப்பை எடுத்துக் கண்களை ஒற்றி யெடுத்தார்; முகத்தையும் துடைத்துக்கொண்டார்; வலிய வரவழைக்கப்பட்ட சிரிப்பு இதழ்க் கரையில் ஒதுங்கியிருந்தது.

"அப்பாவா?...வந்திட்டீங்களா? சத்தம் காட்டாமக் குந்திக்கிட்டிருக்கீங்களே?..."

"இப்பத்தான் ரவை பொழுதுக்கு முந்தித்தான் வந்தேன். வயசு காலம் பாரு, ஒண்ணும் முடியலே. களைப்பாறினேன்; அவ்வளவுதான்!"

"குந்துங்க அப்பா; நீராகாரத் தண்ணி கலக்கிக்கிட்டு ஓடியாரேன். நீங்க ஊரணிக்குப் போய்த் திரும்புறதுக்குள்ளே, நான் சோறாக்கிப்பிடுவேன்."

அஞ்சுகம் நீட்டிய 'லோட்டா'வை நடுங்கும் கைகளால் வாங்கினுர் அம்பலம்; 'மடக் மடக்'கென்று குடித்தார். உள் வாசலில் கிடந்த நார்க் கட்டிலே மேலத் தொங்கலில் இழுத்துப் போட்ட வண்ணம் உச்சிச் சூரியனுக்குத் 'தண்ணீர்' காட்டிவிட்டு மீண்டும் அமர்ந்தார் அவர்.

''கருக்கலிலே பேராவூரணியை நாடிப் பறிஞ்சீங்களே, அந்தச் சங்கதி காயா பழமா அப்பா?'' என்று விஞவைச் சொடுக்கியதுடன் நிம்மதி பெருதவளாக, உன்னிப்புடன் தந்தையையே பார்க்கலாஞள் அஞ்சுகம்.

மாசிமலே அம்பலத்தின் கையிலிருந்த லோட்டோ நடுங்கியது. 'ஆத்தா காத்தாயி என்னே இன்னமும் சோதிக்கிறும்மா, அஞ்சுகம்!'' என்று தழுதழுத்த குரலில் அவர் பதிலளித்தார்.

'ஐயையோ, நான் இனிமே என்ன செய்யப் போறேஞே?... காலவினே என்னே இப்படிப்போட்டு ஆட்டிப்படைக்குதே?...' பெண் நெஞ்சம் விம்மி வெடித்தது.

'என்னேட தலேயை அடகுவச்சாவது உனக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசையைச் செஞ்சு ஐப்பசி பிறந்தடியும் உன்னே உன் மச்சான் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேம்மா!'

அஞ்சுகத்தின் உந்திக் கமலத்தினின்றும் உதித்து எழுந்த இவ்வார்த்தைகள் அவளது காதுகளில் முழங்கியன. 'கடைசீலே எல்லாம் பொய்க்கஞ கணக்காலே ஆயிப் போயிடும் போலிருக்கே?—'

கயல்விழிகள் இரண்டையும் மூடிக்கொண்டாள் அவள். அந்த இரண்டு விழிகளுக்குள்ளே இரண்டாயிரம் இனிய நற்கனவுகள் முகிழ்த்தன; மோனத்தவம் இயற்றிய ஆசை நினேவுகள் ஆர்ப்பரித்தன. 'எனக்கு எம் மச்சான் கையாலே மஞ்சத்தாலி முடிஞ்சிக்கிடுறதுக்கு அதிர்ஷ்டம் வாய்க்க ஏலுமா? ஆத்தா மூத்தவளே, நீயே எனக்குத் துணை...சதம்..சகலமும்!...' இப்படிப்பட்ட 'வேண்டுதலே'கள்தாம் ஒன்ரு இரண்டா?

மருதன்குடி வட்டாரத்திற்குள்ளே அழகிப் போட்டி வைத்தால், முதற் பரிசு அஞ்சுகத்துக்குத்தான் கிடைக்கும். பட்டிக்காட்டு மண்ணில் அத்தி பூத்தமாதிரி தென்படும் சிவப்பு நிறம் அவளுடைய மேனியை அண்டி அடிபணிந்தது. கனவு காணும் கண்கள்; கண்டவர்களைக் கனவு காண வைக்கும் அவை! அவளுக்கு 'முறை மச்சான்' முத்துலிங்கம் ஆணழகன். நாவற்பழக் கறுப்பு என்றாலும் நல்ல அழகு.

'ஆமா, இம்மாந் தொலைவு முத்துலிங்கமும் அஞ்சுகமும் இழைஞ்சு இடிச்சுப் பேசிச் சிரிச்சுப் பழகுறுங்களே. மெய்யாலும் இவுங்க ரெண்டு பேருக்குந்தான் கண்ணாலம் நடக்கப் போவுதாங்காட்டியும்?' என்ற முணு முணுப்பு ஊர்க்காட்டில் நிழலாடியது.

ஆனால் அவர்கள் இருவரும் எதையுமே பொருட்படுத்தவில்லை. ''இந்தாலே பாரு அத்தை மகளே! எங்க அப்பாவும் உங்க அப்பாரும் ஆதிநாளையிலே ஊர்க்கட்சி, காளாஞ்சி விசயமா மனத்தாங்கலை வளர்த்துக்கிட்டு, அதை மறக்காமல் வாழவச்சுக்கிட்டும் வரதாலே தான், ஊராருங்க இப்படிக் காதைக் கடுச்சுக்கிடுறுங்க. நான் இப்ப பேசுற தாக்கல் தகவலை சேலை முந்தானையிலே முடிஞ்சு வச்சுக்க. பொண்ணே!...நான் எப்படியோ நாடகமாடி, உங் கழுத்திலே முடிச்சுப் போட்டுப்புடுறேன். இந்த உரிமைக்கு உன்னோட அப்பாகிட்டேயும் உத்தாரம் வாங்கிக்க. நீ தாயில்லாப் பொண்ணு. உம் பேச்சுக்கு அட்டி ஏதும் சொல்லமாட்டாரு மாமன்!...நீ தெம்பு குலையாம இரு அஞ்சுகம்!''

கங்காணி தோட்டத்துக் கிணற்றடியிலும், குப்பாயி ஊருணியிலும், காத்தாயி அம்மன் திருச்சந்நிதானத்திலும் அஞ்சுகம் தன் ஆசை மச்சானின் உறுதிமொழிகளை உயிருடன் விளையாட விட்டாள்; அந்தத் தெம்பு மிகுந்த தேறுதலில் அவளுடைய இனிய கனவுகள் விளையாடின, அவள் சிரித்தாள்!

இடைப்பட்ட பொழுதிலே, இருதரப்புத் தந்தைமார்களுக்கிடையில் 'தூது' சென்றவர்கள் 'சூடு' பட்டார்கள்.

உச்சக் கட்டம் உருவாயிற்று; அல்ல, முத்துலிங்கம் தான் உருவாக்கினுன்.

"அப்பா!"

"என்ன தம்பி முத்து..? தொளி உழவு அலுவல் சாடாவுந்தான் முடிஞ்சு போச்சு. இனி ஆவணி பொறந் தடியும் ஒனக்கும் கண்ணுலம் காட்சி பண்ணிப் பார்க்க வேணும். நீ என்ன சொல்லுறே?"

"ம்!"

"சிதம்பரவிடுதி மணியகாரர் மகள் ஜாதகம் ஏகமாப் பொருந்திக்கிடக்குது, முத்து?"

"அப்பா வம்பு பேசலே நான், இப்பிறப்பிலே எனக்கு ஒருத்தி பெண்சாதியா வரவேணும்னு, அதுக்குத் தகுந்தவ நம்ம அஞ்சுகமே தான்! என்னேட இந்த நினைப்புக்கு நீங்க ஒப்பலேன்னு, நீங்க என்னை இந்த ஊர்ப்பக்கம் உசி ரோடவே காணமுடியாதாக்கும்!"

"என்னேடே கச்சை கட்டிக்கிட்டு வம்பாடினவன் வீட் டிலேயே சம்பந்தம் கொள்ளச் சொல்லுறே நீ? ஏலாது.."

வன்மம் வளர்ந்து, இருதரப்புக்களிலும் பணம் தண்ணீ ராகச் செலவழிந்த நாடகம் காட்சி பிரித்து விரிந்தது!

முத்துலிங்கம் போய்விட்டான் — வீட்டை விட்டு. ஒரு நாள், இரண்டு நாள் என்று நாட்களை நகர்த்திச் சிரித்தது காலம். காசி அம்பலகாரர் துடித்தார்; அவருடைய காசு பணம் கரைந்தது. நான்காம்நாள், கவலைக்கிணற்றில் விழுந்து மடிய எத்தனம் செய்த முத்துலிங்கத்தை ஈரம் சொட்டச் சொட்டத் தூக்கி வெளியே தரையில் போட்டார் கள். தந்தை சேதிகேட்டுப் பறந்தார். "மகனே, இப்பதான் என் புத்தி தெளிஞ்சிது!... உன்மனசுப் பிரகாரம் நட, நான் அட்டி சொல்லலே!" என்று கண்ணீர் கக்கினுர்.

அஞ்சுகத்தின் தங்கக்கழுத்தில் தங்கத் தாலிச் சரட் டைப் பூட்டினுன் முத்துலிங்கம்.

திருமணவினை முடியப் பெற்றதும் பெண்ணை அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை 'மறுவீடு' செல்வது நடைமுறைப் பழக்கம். அப்போது, பெண்ணுக்குத் தாய் வீட்டில் சீர் வரிசை வைப்பார்கள்.

ஒரு நாள் காசி அம்பலம் தம் மகனை விளித்தார்: ''தம்பி, உம் மாமன் மாசிமலை அம்பலம் ஒனக்கு ஆயிரம் ரூபாய் சீர் வரிசையும், நூறு சேருக்கு வெள்ளிச் சாமான் களும், முப்பது பவுன் நகை நட்டும் செய்கிறதாச் சொன்னரு. இது சம்பந்தமாய் ஆள் அனுப்பிக் கேட்டு விட்டதுக்கு, ஐப்பசி பிறந்ததும் தான் சீர் வரிசை வைக்கிற துக்கு நான் சொல்ல முடியும்னு பதில் சொல்லிட்டாராம்!... இப்படி ஒரு நடப்பு நமக்குள்ளாற இதுக்கு முந்தி நடந்திருக் குதா?...பணம் காசை ஒளிச்சு வச்சுக்கிட்டு, எனக்குக் குறைச்சல் பண்ண வேணும்னு கங்கணம் கட்டியிருக்கார் அந்த அம்பலகாரர்...கண்ணலம் நடந்து முடிஞ்ச கையோ டவே சீர் வரிசை வைக்கிற நம்ம குல வளமையையும் காற்றிலே பறக்கவிட்டுப்புட்டாரே! ம்...மாசிமலை என்னை மட்டும் ஏமாத்தலே, உன்னையும் சேர்த்தாக்கும் ஏமாத்திப் புட்டாரு!...இதை மறந்துப்பிடாதே!...நமக்குத் தகாத இடத்திலே கொள்வினை கொடுப்பினை வச்சுக்கப்பிடாதிங் கிறது எவ்வளவு நியாயமிங்கிறதையும் புருஞ்சுக்க தம்பி!''

முத்துலிங்கத்தின் உடல் துடித்தது; உள்ளமும் துடித் தது. 'மாசிமலை என்னை மட்டும் ஏமாத்தலே; உன்னையும் சேர்த்தாக்கும் ஏமாத்திப்புட்டாரு!' — இம்மொழியினுள் அவன் சுற்றினன். 'வெட்டுப்பழி குத்துப்பழியாக்கிடந்த விரோதத்தையும் கூட ஒதுக்கி வச்சிப்பிட்டு, என்னேட ஆசையை நிறைவேத்தினவுகளாச்சே எங்க அப்பா?... அவரோட மதிப்பு மரியாதையையும் விட்டுக் கொடுத்து எதிரி வீட்டிலே பரிசம் போடத் துணிஞ்சவருக்கு வேணு மிண்ணே தான் இப்படிபட்ட ஒரு இக்கட்டை மாமன்காரரு ஏற்படுத்தியிருக்க வேணும்! ஆமா!'

முத்துலிங்கம் தன்னுடைய இள மீசையை முறுக்கிவிட் டுக் கொண்டான். ''அப்பா!...நம்மளை ஏமாத்தி இழிவு

படுத்த நினைச்சிருக்கிற அந்த அம்பலகாரருக்கு நல்ல பாடம் சொல்லித் தந்திடுறேன். கொடுத்த வாக்குப்படி எப்ப சீர் வரிசை செய்கிருரோ, அப்பதான் அஞ்சுகம் நம்ம வீட்டை மிதிக்க ஏலும்!...நீங்க ஆத்திரப்படாதீங்க!...” என்று உறுதிப் பாங்குடன் பேசினுன் அவன்.

‘மச்சான்!...’

கண்ணின் மணிகள் கனவுகளை அலைக்கழிக்கவா அப்படித் தாரை தாரையாக நீரைக் கொட்டுகின்றன?

* * * *

மேய்ச்சலிலிருந்து மனை திரும்பிய பசுவுக்கும் கன்றுக்கும் தீனி போட்டுத் தண்ணீர் காட்டினுள் அஞ்சுகம். அந்தி வெய்யில் அவளது மேனியைப் பொன்னிறமாக்கியது. ‘அந்தி வெய்யில் கண்ணுக்கு ஓசத்தியாயும் அந்தமாவும் தான் இருக்கும். ஆனு, இன்னும் அரை நாழிப் பொழுது கழிஞ்சா, ஊரே இருண்டு போயிடுமே?...என்னேட வாழ்க்கை அந்தி வெய்யில் கணக்கிலே தான் தொடங்கிச்சு. அப்பா பிரமாத மாக கண்ணுலம் செஞ்சார். கார் ஊர்வலம், காந்த விளக்கு, விருந்து, மேளம் நாகசுரம் எல்லாந்தான் தடபுடலாயிருந் திச்சு. ஆனு, இப்ப என் நிலைமை?...ஒருவேளை. அப்பாவுக்குக் கடனே கிடைக்காட்டி, எங்கதி என்னுகிறது?...ஐயோயோ!...”

ஒருமுறை புரட்டாசித் திருநாளன்று அஞ்சுகத்தைப் பார்த்தும் பார்க்காதது மாதிரி மடங்கி விட்டான் முத்து லிங்கம். சற்று முன் சைக்கிளில் மெதுவாகச் சென்ற அவனை வாய் வலிக்க அலட்டினுள் அவள். திரும்பிப் பார்த்தும் கூட திரும்பி வராமல் சென்று விட்டான்!

அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. இரவு வந்தது. இருட்டும் சேர்ந்தது. ‘எங்கே இன்னும் அப்பாவைக் காணலே?...’ அவளது உயிரின் உணர்வு செயலிழந்து தவித் தது.

உச்சி வேளை கழிந்து, நீராடித் திரும்பினுர் மாசிமலை அம்பலம். மன உளைச்சலில் உழன்று கொண்டிருந்தாள்

அவள் தந்தைக்கு உணவு படைக்க 'வட்டி' கொணர்ந்தாள்; சோறிட்டாள்; குழம்பை ஊற்றினாள். கறித்தட்டில் 'தொட்டுக் கொள்ள' எதுவும் வைக்க மறந்து விட்டாள் அவள்.

''வெஞ்சனம் வைம்மா!''

அஞ்சுகம் தன் பல்லவியை ஆரம்பித்தாள். ''ஐப்பசி பிறக்கிறதுக்கு இன்னும் சரியா ரெண்டு பொழுதேதான் மிஞ்சிக் கிடக்குது. நீங்க அதுக்குள்ளே சீர் வரிசை வச்சு என்னை மாமியார் வீட்டுக்கு அனுப்பி வைக்கலண்ணா, அப்பாலே இந்த முதல் தீபாவளிக்கு அவரும் நம்ம வீட்டு மண்ணை மிதிக்கவே மாட்டாருங்க, அப்பா!'' என்று நைந்துருகினாள்.

''எனக்கு யாதொரு வழியும் தோணலையே ராசாத்திப் பொண்ணு!''

''ஏம்பா நீங்க நடிக்கிறீங்க? உங்களுக்கு உங்க கவுரவம் தான் ஒசந்ததாப்படுது போலே! என்னோட ஆசை மக்கி மடிஞ்சி மண்ணோட மண்ணாகப் போனா என்ன உங்களுக்கு?...என்னோட வாழ்க்கையிலே மெய்யாலுமே நீங்க அக்கறை வச்சிருந்தீங்கண்ணா சாகிறப்ப அம்மாவுக்குக் கையடிச்சுக் கொடுத்தாப்பிலவும், ஒட்டு வீட்டு மாமன்காரருக்கு வாக்குத் தந்தாப்பிலேயும் நீங்க எனக்குச் சீர் வரிசை வைக்கிறதுக்கு நெஞ்சார ஆசைப்பட்டீங்கண்ணா, மூணும் பேருக்குத் தெரியாம இந்தப் பெரிய வீட்டையே வித்துப்பிட்டு, என்னோட விசேஷத்தை மோக்ளாவா நடத்திப்பிடலாமே!...''

வீறு கொண்டு கத்தினாள் அஞ்சுகம். மாசிமலை அம்பலம் பிசைந்து வைத்திருந்த சோற்றுக் கவளத்தை வீசி எறிந்து விட்டு எழுந்தார். பொழுது ஓடியது. ஆனால், போனவர் திரும்பக் காணோம்! இரவு பூராவும் அவள் கொட்டக் கொட்ட விழித்திருந்தாள்! அவளுடைய மேனியிலும் முகத்திலும் கைகளிலும் குலுங்கிய நகைகள் அவளுக்குச் சுமையாகப் பட்டன. உள்ளே செய்து வைக்கப் பட்டிருந்த வெள்ளிச் சாமான்கள் அவளுக்காகப் பிரத்தியேகமாகத்

தயாராகியிருந்த அந்த சாமான்கள்-அவள் வரை சுமை தாங்கியாக இயங்க முடியவில்லே. எல்லாம் செஞ்சவுங் களுக்கு முடிவிலே ஒரு ஆயிர ரூவா புரட்டிக்கிடத்தான் பாதை மட்டுப்படலேயாக்கும்? எல்லாம் சுத்தப் புளுகு!... மாமன்காரரை வேணும்ணே நையாண்டியும், கிருத்திரு வமும் செய்யத்தான் அப்பாரு இம்மாம் பெரிய நாடகத் தைப் போடுறுருபோலே!...ஆமா!'

* * * *

'பலார்' என்று பொழுது விடிந்து விட்டது. "ஐப்பசி பிறந்து எம்மேலே அப்பாவுக்குக் கோபமாத்தான் இருக்கும்!" என்று மனம் புழுங்கிய அஞ்சுகத்தைத் தேடிக்கொண்டு மணியகாரரின் வில்வண்டி வந்து நின்றது.

"அம்மா அஞ்சுகம்!..."என்று வாஞ்சையுடன் அழைத்த வாறு வெளித்திண்ணேயில் அமர்ந்தார் மணியகாரர்.

"ஐயாவுங்களா? வாங்க!" என்று வரவேற்ருள் அஞ் சுகம்.

"இந்தாம்மா, இந்தப் பையிலே ஆயிர ரூபாய் இருக் குது. நல்ல நாளும் அதுவுமா உன்னே புருஷன் வீட்டுக்கு சீர்வரிசையோட அனுப்புறதுக்கு ஏற்பாடு பண்ணச் சொன் ஞரு.அவசர காரியமா அறந்தாங்கியிலே தங்கியிருக்காராம். நாளேக்கு விசேஷத்துக்குக் கட்டாயம் வந்திடுவார் அம்மா!" என்று சொன்ஞர் அவர்.

அஞ்சுகத்தின் கைகளில் ஆயிர ரூபாய் இருந்தது!

அப்பொழுது வாசலில் மற்ருெரு வண்டி வந்து நின்ற அரவம் கேட்டது. அரவம் தீண்டிஞற் போன்று திகைத்தாள் அஞ்சுகம் "அப்பா! ஐயையோ!" என்று அலறிஞள்.

மாசிமலே அம்பலத்தைக் கட்டிலில் கொணர்ந்து கிடத் திஞன் முத்துலிங்கம். கவிழ்ந்த தலேயுடன் நின்ருர் காசி அம்பலம். அவரது கைகள் மாசிமலேயின் நெற்றித் தழும்பில் வடிந்த ரத்தத்தைத் துடைத்தன.

''அப்பா!... அப்பா!... எம்மேலே கோவிச்சுக்கிட்டீங்களா? அதாலேதானு இந்த மூன்று நாளா உங்க மகளை மறந்து இருந்தீங்க?'' என்று விம்மினுள் அஞ்சுகம். தன்னுடைய ஆசை மச்சான்—மாமனுர் ஆகிய இருவரின் உருவங்களை அவள் மறந்து போய் விட்டாளா?

''அம்மா அஞ்சுகம், என்னை மன்னிச்சுப்பிடு தாயே!... உனக்குச் சீர்வரிசை செய்யிறத்துக்கு ஆயிர ரூபாய் சமாளிக்கக்கூட செகல் இல்லாத பாவியம்மா நான்! உனக்குத் தெரியாது!... நம்ம வீட்டை அடகு வச்சுத்தாம்மா உன்னேட கண்ணுலத்தைப் பெரிசா நடத்தி, உனக்கு நகை நட்டு, வெள்ளிச் சாமான்களையும் செஞ்சு வைச்சேன்!.. கடைசியிலே ஒண்ணும் தோதுப் படலேண்ணு, வீட்டையே வித்துப் புடவும் துணிஞ்சேன். ஆனு, வீட்டுப் பேரிலே கடன் தந்த ஆயிங்குடி கங்காணி, வீட்டை விலைக்கு வாங்கிக்கிட ஒப்பலே!... பணம் இல்லாம உங்கண்ணிலே முழிக்கப் படாதிண்ணு ரோசிச்சு கண்மறைவாக் கிடந்த நான் இப்ப எப்படி இங்கே வந்தேன்?... ஆ!..''

மாசிமலை அம்பலத்தின் விழிகள் சுழன்றன. அவர் நோக்கு அருகில் நின்ற தம் மாப்பிள்ளையையும் சம்பந்தியையும் துழாவியது. திகைப்பு வளர்ந்தது.

''அப்பா, என்ன சொல்லுறீங்க?... நீங்க கொடுத்து விட்டதாக நம்ம மணியக்கார ஐயா ஆயிர ரூபாய் தந்திருக்காங்களே. இந்தாப்பாருங்க, பணம்!'' என்று விவரித்து, ரூபாய்த் தாள்களைப் பிரித்துக் காட்டலானுள் அஞ்சுகம்.

''என்ன கூத்து இது?'' என்ருர் மாசிமலை அம்பலம். படுக்கையை விட்டு எழுந்திருக்க முயன்ருர்; முடியவில்லை. நரை முடிகள் இளங்காற்றில் அல்லாடின.

''சம்பந்தி! ஒண்ணும் அதிசயக் கூத்து கிடையாதுங்க. நாம வெளிப்படையா என்னதான் குரோதம் பாராட்டி வம்பு வளர்த்துக்கிட்டு சண்டை போட்டாலும் நம்ம மனசுங்களுக்குள்ளே நம்மளையும் அறியாம ஒருவகைப் பாசமும்

அன்பும் பெருக்கெடுத்துக்கிட்டிருக்கும். அந்தப் பாசமும் அன்புந்தான் கூத்து விளையாடியிருக்குது! புரியலையா?... கேளுங்க: நீங்க. ஆயிர ரூபாய்க்குச் சீர்வரிசைப் பணம் செய்யவேணும்னு மல்லுக்கு நின்னேன். ஆனா, உங்களுக்கு வகை உண்டாகல்லே! மனசு பேதலிச்சு நீங்க பைத்தியம் கணக்காச் சுத்தின சேதி எம் மகனுக்கு கிடைச்சுது. மாமன் சொன்ன வாக்கைக் காப்பாத்தாம நம்மளை ஏமாத்திறதாவது-அப்படிங்கிற ஆத்திரத்தைக்கூட அவன் மறந்து, தன் அம்மா மூலமா ஆயிரத்தைச் சேத்து மணியக்காரர் மூலமா அனுப்பிச்சிருக்கான். இந்தத் துப்பு எனக்குத் தெரிஞ்சுது. அவன் செஞ்ச இந்த நல்ல காரியம் எனக்கு இன்னொரு புதுப் பாடத்தையும் படிச்சுக் கொடுத்திச்சு. புத்தம் புதுத் தம்பதிகளை முப்பது முப்பத்தைஞ்சு நாள் பிரிச்ச தப்புக்காக மனசுநொந்தேன். முத்துலிங்கம் போட்ட நாடகத்தை நினைச்சுக்கிட்டே வண்டியிலே வந்துக்கிட்டிருக்கையிலே, நீங்க என்னோட வண்டியை மறிச்சுக்கிட்டு வந்து விழுந்தீங்க!... சுய ஞாபகம் இல்லாத உங்க போக்குக்கு இந்தப் பாவிதான் ஆதிகாரணம்! நீங்க என்னை மன்னிச்சிருங்க! தம்பி முத்துலிங்கம்! அம்மா அஞ்சுகம்! இந்தக் கிழவனாலே உங்களுக்கு எந்தச் சோதனையும் உண்டாகாது! சாமி ஆணை இது!"

காசி அம்பலம் கண்களைத் துடைத்துக்கொண்டார்!'

* * *

தாய் வீட்டுச் சீர்ச் சாமான்கள் நிறைந்த வண்டியைப் பின்தொடர்ந்த மாசிமலைத் தேவரின் கையில் வெற்றிலைப் பாக்குச் சூழ காட்சியளித்தது ஆயிர ரூபாய். மேளம் முழங்க நாதஸ்வரம் ஒலிக்க மாப்பிள்ளையின் மனையை மிதித்த வேளையில் மாசிமலையின் உள்ளம் நன்றியுணர்வினால் கசிந்தது: 'ஆத்தா விளையாட்டு வேடிக்கையாத்தான் இருக்குது; சீர்ப்பணத்துக்கு கெடுபிடி பண்ணினவுங்களே கடைசீலே சீர்ப்பணத்தையும் தந்திருக்கிறாங்களே!... இந்த ஆயிர ரூவாயை அடைச்சாத்தான் எனக்கு நல்ல மூச்சுவரும்!— என்மகளுக்கும் நிம்மதி அண்டும்!'

# உயிர்க்கழு

உதயத்தின் சூடு படர்வதற்கு முன்பாகவே, அடுப்பைச் சூடு பண்ணினாள்; அரிசி களைந்து போட்டுச் சோறு ஆக்கினாள்; பழைய சுண்டல் குழம்பையும் முருங்கக்காய்த் தாண்களையும் எடுத்துக் கிண்ணத்தில் வைத்தாள். சோற்றுச் சட்டியை நிரப்பி, வடுமாங்காய் இரண்டையும் உப்புக்கற்களையும் ஓரத்தில் வைத்து மூடினாள். ''மிச்சம் வச்சிடாமச் சாப்பிடுங்க, மச்சான்! அப்பத்தானுங்க மேலு அசதி தெரியாம, வேலே பார்க்கலாம்!'' என்று சொல்லிக் கணவனை வழி கூட்டி அனுப்பினாள், அஞ்சலை.

மருதமுத்து தன் குழந்தையை வாங்கி உச்சி மோந்து நீட்டினான். ''ராசாத்திக்குட்டி பத்தரம்..வர வர அறந்தாங்கி பெரிய பட்டணமாட்டம் ஆகிடுச்சு...எந்நேரமும் லாரி தொல்லேங்க மாளலே!...மக ஜாக்கிரதை!'' அவன் புறப்பட்டான். புறப்பட ஒப்பாதவன்போன்று புறப்பட்டான்!

அஞ்சலை நெடுமூச்சைப் பிரித்தாள். ராசாத்திக்குட்டிக்குப் பாலமுதம் ஈந்தாள். பிறகு, ஒட்டுத்திண்ணையின் முந்தலில் இருந்த சாம்பல் துணுக்கைக் கிள்ளி எடுத்துப் பல் துலக்கினாள். அப்பொழுது, சாலையைப் பிய்த்துக்கொண்டு ஓடிய லாரியினை ஒட்டிச் சென்ற அவ்வுருவத்தைக் கண்டதும், அவள் அரைக்கணம் அப்படியே மலைத்துச் சிலை வடிவம் ஆனாள்!..

''அந்த உருவம்!..''

எண்ணங்களின் இயல்பே கனவு காணுவதுதானே.

எண்ணங்களைக் கூட்டினாள் அஞ்சலை.. கனவின் தொடுவானமாக அந்த உருவம் அவளுள் தோன்றி மறைந்தது, நொடிப்பொழுதுக்கு முந்தி மின்னலாய்த்தோன்றி, மின்ன

லென மறைந்திட்ட பாவனையில்! உள்ளத்தே கிளர்ந்த நடுக்கம் உடலெங்கும் பரவ, அந்நடுக்கத்தின் ஊடும்பாவுமாக, காலத்தின் நடந்த கதை சிலிர்த்தெழ, அச்சிலிர்ப்பின் நிழலில் ஒடுங்கித் தங்கக்கூட மனமின்றித் தடுமாறிய அவளிடம் ராசாத்திக்குட்டி மறுபடியும் 'ங்கா'வுக்கு ஓடி வந்து நச்சரித்துத் தீர்க்கவே, அவசரம் அவசரமாக வாய் கொப்புளித்து விட்டு தலைவாசல் மண் தரையில் சாணத்திட்டை காலால் எற்றிவிட்டவளாக குந்தினாள்.

''அத்தே!...மனுசன் என்னமா லாரியை ஓட்டுகிறான், எமனாட்டம்!...ஆத்தாடி!. .''

கள்ளத் தெருப் பிள்ளையார் முகத்தில் காலைக் கதிரொளி அழகுடன் இணைந்தது.

ஏப்பம் பறித்தபடி, ராசாத்தி நடைபழகத் துடித்தது.

பழங் கஞ்சியை வார்த்து கும்பாவில் ஊற்றி, உப்புக்கல் தூவி, வெஞ்சனத்தை அகப்பையில் மொண்டுகொண்டு, நிலைப்படிக்கு அப்பால் உட்கார்ந்த பிறகுதான், ஏதோ, நினைவு வர, எழுந்து மாடத்திலிருந்த திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டு, மஞ்சள் தாலியை எடுத்துக் கண்களிலே ஒற்றிவிட்டு, நிம்மதி கொடி கட்டிப் பறக்க, உட்கார்ந்தாள். ''மச்சான் இந்நேரம் வெள்ளாத்துப் பாலத்தடிக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். .பாவம், உக்கார நிக்கக்கூட ஏலாதாம்'' ம்!. .வாழ்க்கையிங்கிறது சிலவுங்களுக்கு ஒரே குல்லுமாலு-செப்பிடு வித்தையாப் போயிடுது. .எங்களைப் போலவுங்களுக்கோ நித்த நித்தம் செக்காட்டாம் கணக்குத் தான்!...''

இரு வேறு துருவங்களில் வாழ்க்கை எனும் தத்துவத்தை அவளளவிலே எடை நிறுத்தபோது, ஒரு முனையில் தன் ஆசை மச்சானின் பிம்பம் தோன்ற, அதற்கு நேரெதிர் முனையில் அந்த லாரிக்காரனின் உருவம் தோன்றலாயிற்று. அவளையும் அறியாமல் தோன்றிவிட்ட ஒரு முடிவாக—திட்டமிடப்படாத ஒரு தோற்றமாகக்கூட அவள் எண்ணவேண்டியவள் ஆனாள்.

"அந்த உருவம்...!"

அஞ்சலைக்கு வேர்வை வழிந்தது. "அந்த ஆம்பளைக் கின்னு ஒரு துருசு. .ஒரு பதட்டம்...ஒரு ஆவேசம்!...ஆத் தாடி!. .நல்லவேளை, ஆத்தா என்னைக் காப்பாத்திஞ, அந்த ஆளுகிட்டேயிருந்து!...ம்!. ."

உருவம் என்றால், அதற்குப் பெயர் இருக்க வேண்டு மென்பது மரபு, விதி அல்லது நியதி!

ஆகவே, அந்த உருவத்துக்கும் பெயர் இருந்தது. அது: நாகப்பன்.

நாகப்பன் என்ற பெயரில் பசை இல்லாவிட்டாலும், அவனிடம் ரொக்கமாக இரண்டாயிரம் புழங்கியது. அண்டை அயலில் இருந்த அவன் ஒரு தரம் அஞ்சலையின் ஊரிலே தேர்த் திருநாள் வேடிக்கை பார்க்கச் சென்றிருந் கையில், பேசும் விழிகளை—பேசவைக்கும் கன்னங்களை— சிரிக்கும் இதழ்களை—சிரிக்க வைக்கும் முகவிலாசத்தைத் தரிசித்தான்.

அந்த லாவண்யத்துக்கும் பெயர் இருந்தது.

அதுவே அஞ்சலை!

"ஒட்டி விசாரிக்கப்போனு, அஞ்சலைப் பொண்ணு ஒரு வகைக்கு எனக்கு எட்டத்து முறைதானுக்கும்! சபாசுன்னு னும்!. .ஏ. .ஹே!" என்று மனம் குதிபோட, மெள்ள நடந்து, அஞ்சலையின் தாயிடம் பேச்சுக் கொடுத்து, அப்படி இப்படியென்று போன இடத்தில் ஒரு வாய்க்கு மோரும், ஒரு தரத்துக்கு வெற்றிலைச் சருகும் போட்டுக்கொண்டு, அந்த 'ஜோரிலே'யே பரிசத்துக்கும் அடிபோட்டுவிட்டான்.

அப்புறம்தான் வந்தது வினை.

ஆம்; வினைதான்!

எதற்கு?....

விதிக்கு!...

“நல்லவேளை; ஆத்தா மூத்தவ என்னைக் காப்பாத்தினு! இல்லாங்காட்டி, தனதிலே ஒரு பொண்ணோட 'ராசி'யிருக்குற இந்தக் கழுசறை ஆம்பளையை நம்பியில்ல நான் அந்தரத்திலே திண்டாடிப் போயிருக்க வேண்டியிருக்கும்!” என்ற அளவிலே அஞ்சலை மன நிம்மதி எய்தினுள்.

அதே மன நிறைவுக்கு, அமைதியும் அன்பும் கொண்ட மருதமுத்து உத்தாரம் தந்து, அஞ்சலையின் முன்றுனைப் பாக்கியத்தையும் ஏற்றுன்.

கஷ்ட ஜீவனம்தான்.

இருக்கட்டுமே!

முள் நிறைந்த ரோஜாதானே இதயம் ஈர்க்கும் நறுமணத்தை நல்குகிறது!....

“அஞ்சலை!” என்று குரல் கொடுத்தவாறு, பக்கத்துத் தெருக் கிழவி வந்தாள்.

இறங்கும்பொழுது.

சுடுசோறு சமைக்க எண்ணி அதற்கான ஏற்பாடுகளில் முனைந்திருந்தவளுக்கு ஏனே மனம் கிடந்து தவியாய்த் தவிக்கத் தொடங்கவே, அந்த அமைதியின்மையிலேயே மதியச் சாப்பாட்டு நினைவுகூட இற்றுப்போய், ராசாத்தியைத் தூளியில் போட்டுவிட்டு, அவள் தரையில் சாய்ந்து விழுந்தாள். “மச்சான் களைச்சு களை தாங்கிப் போய் வந்துப்புடும். ரெண்டு துணுக்கு மடவாக கருவாட்டை வெட்டி இப்பவே கொதிக்க வச்சாத்தான், ராவு பரியிற சமயத்துக்குச் சுடுசோறு போடலாம் மச்சானுக்கு!”

கிழவியின் குரல் மீண்டும் அழைத்தது.

“வாங்க ஆயா!”

“ஆபத்துச் சம்பத்துக்கு” உதவுபவள் இக்கிழவிதான். கைமாற்றுக் கடன் பத்து ரூபாய் நிற்கிறது. ராசாத்திக்கு கக்குவான் வந்து, சாப்பிட்டுவிட்டது பத்து ரூபாயை.

நாகப்பன் முறைப்படி ஒரு பெண்ணை கல்யாணம் கட்டிக் கொண்ட சேதியையும் இவளேதான் சொன்னாள்.

நாகப்பனைப்பற்றிய நினைவு ஊர்ந்த தருணம், அஞ்சலை யின் உள்மனத்தில் கலக்கம் எழுந்தது—வழக்கம்போலவே. "ஐயோ!..அந்தப் பாவி கடைசியிலே என்னை திமிரோட அப்படிக் கத்தினான்!..." அவளால் அந்த அதிர்ச்சியை எப்போதுமே தாங்க முடியாது. வேர்வை கொட்டிற்று.

ஆயாவுக்குக் கெடு மாற்றிச் சொல்லி அனுப்பி விட்டாள். வெள்ளாற்றுப் பாலத்தடியில் மருதமுத்துவுக்கு எடுபிடி வேலை. ஒரு பெரிய குத்தகைக்காரரிடம் இவனுக்குச் சஞ்சாயக் கூலி. அன்றாடப் பொழுதை ஓட்டுவதே எத்துணை பெரிய போராட்டமாகப் போய்விடுகிறது!..

போராட்டத்தின் வெற்றி—தோல்வி முத்திரை குத்தும் முழு உரிமையையும் தான் வைத்துக்கொண்டு இப்படி உலகத்தை ஆட்டிப்படைத்து வேடிக்கைகாட்டி வேடிக்கை பார்ப்பது ஆண்டவனுக்கே அழகாகத் தோன்றுகிறது போலும்!

குடிசையின் மேற்புறத் தட்டுப்பலகையில் வைத்திருந்த உண்டியல் கலயத்தை குதிகாலை எம்பி எடுத்தாள் அஞ்சலை; காலைப் பற்றி விளையாடியது குழந்தை. அணைவதற்குள்ளே பரிதிக் கோமானுக்கு ஒரு நப்பாசையா—பொற்கிரணங்களை வாரி வழங்கினான். உண்டியல் கலயத்தை எடுத்துப் பதன மாக ஏந்தியவள், மகளின் கைகளை மிதித்துவிடாமலிருக்க. ஒரு தப்படி தள்ளிக் காலை வைத்தவள் தடுமாறிவிட்டாள். படக்கென்று கை நழுவிவிட்டது கலயம். நாணயங்கள் சிந்திச் சிதறலாயின.

அவளுக்கு உயிர் போய்விட்டது.

"ஐயையோ!.."

உடலின் ரத்த நாளங்கள் கொதித்தன. "மச்சான்! எனக்கு மொதல் மொதலிலே குடுத்த ஆசைப் பரிசு ஆச்சே இது!"

மாங்குடி காளி கோயில் தேரோட்டத்தில் அஞ்சலையும் மருதமுத்துவும் சந்திக்க, இதுவே அன்பின் சந்திப்பாக உருப் பெற்று, பிறகு அதுவே தாம்பத்யப் பிணைப்பின் முதற்சங்கம மாகவும் உருமாறிய அன்று—அவன் அவளிடம் கை நீட்டிக் கொடுத்த பரிசில் அது. ''இதுதான் நமக்கு எல்லாம். சேமிக் கிற வளமை கைபழகிப் போனுக்க, அப்பாலே நமக்கு ஒரு குறையும் இல்லே!..!'' என்று சொல்லிக் கொடுத்தான் அவன்.

விழிக்கடையில் வழி மறித்து வழிந்த விழி வெள்ளத்தை அஞ்சலை கட்டுமானம் செய்ய முடியவில்லை. நெஞ்சம் எம்பி எம்பித் தணிந்தது. ''ஆத்தா மூத்தவளே! குதாவிடை ஏதும் செஞ்சுப்புடாதே!..'' நின்ற இடத்தில்—நின்ற நிலையில் தெய்வத்தைக் கைதட்டி அழைத்தாள்; கைகூப்பி, தன் கோரிக்கையை ஒப்படைத்தாள்.

அந்தத் தெய்வத்தின் செவிப்புலன் பழுதுபட்டு விட்டதோ?

சுவரிலே பதிந்திருந்த கண்ணுடியில் தெரிந்த தாலியின் எழிலை ரசித்துக்கொண்டிருந்த அஞ்சலை எப்படிப்பட்ட இடி யைத் தாங்க வேண்டியவளாகிவிட்டாள்!...

அதோ!—

''ஐயையோ, மச்சானே!...''

கூவி அழுதாள்; கூக்குரலிட்டுக் கூப்பிட்டாள்.

அவளது நேசத்தின் மச்சானை—நினைவின் நிழலை—உயிரின் துடிப்பை பிணமாகக் கிடத்திஞர்கள்!—மருதமுத்துவின் உயிர் எங்கே?...

''மச்சான்!...''

காலையில் பயணம் சொல்லிச் செல்கையில், அவன் புறப் பட ஒப்பாதவன்போல புறப்பட்டுச் சென்றுனே, பாவம்!— முடிவின் ஆரம்பம் அவனுக்கு அனுமானம் ஆகியிருக் குமோ—அப்படியெனில், அவன்தான் தெய்வமா?...

"தெய்வமே!..." மருதமுத்துவின் மேனியில் தன் மேனியை அணைத்து அழுதாள். "ராசாத்திக்குட்டி!... அப்பா..அப்பான்னு இப்பத்தானேம்மா மழலை பேச கத்துக் குட்டுவாரே...நாளைக்கு நீ அப்பாவைக் காட்டச் சொல்லிக் கேட்பீயேம்மா, நான் ஒனக்கு யாரைக் காட்டுவேன்! தெய்வமே...பாழத்த தெய்வமே...!" மங்கலநாண் அவளது விழிநீர்ப் பெருக்கில் புனித நீராடியது.

வந்தவர்கள் என்ன சொன்னார்கள்?

சிம்னியில் திரி அல்லாடியது.

"அஞ்சலை!..."

யார் அழைப்பது?

விதியா?

வினையா?

திரும்பினாள்.

நாகப்பன் நீர்மல்க நின்றான். கரங்கூப்பி நின்றான். "அஞ்சலை! என்னை மன்னிக்க மாட்டாயா?... எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தேன். முடியலே!...மருதமுத்து அண்ணாச்சியோட உசிரைக் குடிச்சுப்புடுச்சு லாரி!" அவன் தேம்பினான்.

வீறு பூண்டெழுந்தாள் அஞ்சலை.

"என்னை ஏமாத்தின உன்னோட வாழ்க்கையை என்னைக் காலும் ஒரு நாள் நாசமாக்காமல் இருக்கமாட்டேன் நான்" அப்படின்னு வீராப்புச் சபதம் செஞ்சபடியே நீ இப்ப என்னையே நாசமாக்கிப்பிட்டியே பாவி!...முன்னாடியே திட்டம் தீட்டித்தான் இந்தத் தீவினையை செஞ்சு, என் தாலியைப் பறிச்சுக்கிட்டிருக்கே!...நீ எமன்!...பாவி!..."

பத்திரகாளியா அவள்?

நாகப்பன் உயிர்க்கழுவில் துடித்தான். "சாமி சத்தியம் இது!...எப்பவோ ஏமாற்றத்திலே சொன்ன பேச்சு வச்சு நீ

இப்பிடி என்மேலே பழி சுமத்தாதே அஞ்சலை!...இந்தாப் பாரு, என் சம்சாரம் இந்தா நிக்குது...இது ஆணையாச் சொல்லுறேன்!...என்னையும் அறியாமல்—என்னையும் மீறி நடந்திருச்சு இந்த நடப்பு!...சட்டப்படி நான் குற்றவாளி; ஒப்புக்கிறேன்! ஆனல், நீ மாத்திரம் என்னை இப்படி ஏசாதே, தாயே...'' அவன் கதறினன்.

அஞ்சலை வீறும் வெறியும் கொண்டு நாகப்பனை நெருங்கினள். ''போயிடு...இல்லாட்டி நானும் உன்னை மாதிரி கொலைகாரியாகிப்பிடுவேன்!...''

நாகப்பன் வெலவெலத்துப் போனன்.

நாகப்பனின் மனைவி, அஞ்சலையை அண்டினள். அக்கா!..நீ எங்களை மன்னிக்கமாட்டே!...மன்னிக்கவும் ஏலாது!..'' என்று தேம்பினள். பிறகு தன் கணவனை நோக்கி, ''மச்சான்!...நீங்க முதலில் தாணவுக்கு ஓடுங்க; உங்க குற்றத்தை அங்கே சொல்லிப்புடுங்க...அப்பத்தான் நான் ஒங்களை மன்னிக்க ஏலும்!...ம்..ஓடுங்க!...'' என்று பணித்தாள். அவளது தாலியில் அவள் வடித்த கண்ணீர்த் துளிகள் சிதறின.

நாகப்பன் ஓடினன்!

விதியா அவன்?...

அஞ்சலை சிரித்தாள்!

ஊழிப் புயலா அவள்..?

பாவம், ராசாத்திக்குட்டி வீறிட்டு அழுதாள்!...

அனுமதித்திருந்த அந்த முப்பது நாட்களும் எப்படிக் கழிந்தன, ஏன் கழிந்தன என்ற முதல் கேள்விதான் சுதர்சனனின் இதயத் தளத்திலிருந்து மனத்தில் இயங்கி உணர்வு பெற்றுக் கேள்வியாகப் பரிணமித்து அவன் முன் கொக்கியிட்டு நின்றது. அந்தக் கேள்வி பிறந்த—பிறப்பித்தற்குரிய ஆதார பூர்வமான ஏதோ ஒன்று அவர் மனத்தைத் துளையிட்டுக் கொண்டிருந்தது. ஏதோ ஒன்று...! உள்ளமா? உணர்வா? உயிர்ப்பா? ஒரு கணம் அவர் நிலைமாறிச் சுற்றினார்; சுழன்றார். கைவிரல் இடுக்கில் சுழன்று கொண்டிருந்த வீட்டுச் சாவியைக் கொண்டு பூட்டைத் திறக்க வேண்டும் என்பதையும் மறந்து அவர் அப்பொழுது அடித்து வைத்த சிலையாகி நின்றார். சிலை நிலை; மூடிய கண்கள்; உணர்வு தடம் மாறிவிட்டது போன்ற உடல்; அதற்கு இணைந்து காட்டிக் கிடந்த உள்ளம். அவரது கண் முத்துக்கள் மாலை தொடுக்கத் தரைமீது அணிவகுத்தன. அவரிடமிருந்து பெருமூச்சு பவனி வந்தது.

உணர்வு விழிப்புக் காட்டியதென்றுதான் சொல்ல வேண்டும். ஆனாலும் சுதர்சனுக்கு மனதறிந்த தன்னுணர்வு இல்லை. விழிகளை இமைவிலக்கி உருட்டினார். அவர் தயங்கினார். திறந்த கதவுகளைக் கடந்து அவர் ஹாலில் நின்று கொண்டிருந்தார்.

அழகுக்கென நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலைக் கண்ணாடியை அப்போதுதான் புதிதாக வாங்கி வந்தவர் பார்ப்பது போல அவ்வளவு புதுமையுடன் பூரிப்புடன் பார்த்தார் பார்த்த அவர் பதறிப் போய்க் கண்ணாடியை அண்டினார்.

''சாந்தினி!''

வையம் நடுங்கியது. அவர் ஓலமிட்ட குரலில் அவர் நெற்றிப் பட்டையிலிருந்து ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. திரும்பினுர். கண்ணுடியின் தன் உருவம் மட்டுமே கண்ட அவரது உள்ளம் ஏமாற்றங் காட்டியது. அவர் அழுதார். சூன்யமான இதயத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டு அடி பார்த்து அடியெடுத்து வைத்தார்.

''சாந்தினி, நீ இங்கேயா இருக்கிருய்?''

ஆனந்த அலை அவர் கண் வட்டங்களில் அடிவருட அவர் அழைத்தார்; நெருங்கினுர் வெறிபிடித்தவராக. மறுபடியும் அவர் நெற்றியில் பலத்த காயம் கனிந்திருந்தது. மூச்சு விட்டு விட்டுப் புறப்பட்டது. உணர்வு விழிப்புத் தரவில்லை.

'ஹாலை' மையமிட்டு உத்தரத்தில் மாட்டியிருந்த அந்தப் புகைப்படத்தைக் கண்டதும் தான் சற்று முன்னர் அவர் அப்படி அலறினுர்; ஆபத்து வந்தது. அதுதான் சாந்தினி. அவர் உயிர்த்துணை. அவருக்கு உள்ளத்தின் உள்ளமாக, உயிரின் உயிராக, துடிப்பின் துடிப்பாக இருந்தவள் சாந்தினி. அவரது வாழ்க்கையின் பாதிப்பங்குரிமை பூண்டவள்; அவருடைய 'மறுபாதி' அவள். அவள் சாந்தினி!

போய் விட்டாள்!

சுதர்சன் நின்று கொண்டிருந்தார்.

குல்விளக்கு அணைந்து விட்டது!

அவர் இருட்டில் தத்தளித்தார்.

எங்கோ ஒலித்த மாதா கோயில் மணியின் நாத அலைகள் காற்றில் மிதந்து வந்து இரவு மணி எட்டு என்பதைக் காலத்திற்குக் காத்திருந்தவர்கட்குத் தெரிவித்தன. காலங் காட்டுவதில்தான் இந்தக் கடிகாரங்களுக்கு எத்தனை கடமை உணர்ச்சி ஒட்டியிருக்கிறது!

விடிந்தது, பொழுது.

அடுத்தநாள் சுதர்சன் மனித யந்திரமாக இயங்கத் துளி சக்தி பிறந்திருந்தது உடலில். எழுந்து நடமாடினுர். வெறும் உயிர்க்கூடு; அவ்வளவுதான்!

ஜன்னலுக்கடியில் தூசிபடிந்த தரையில் பரந்துகிடந்த வற்றை மேஜை மீது அவர் விசிறிப் போட்டது நினைவுக்கு வந்தது. கிழிக்கப்படாத உறையிட்ட கடிதங்களையும், கிழிக்காமல் பார்க்கக் கூடிய கார்டுகளையும் அவர் படிக்க வில்லை; தபால் அஞ்சலில் வந்திருந்த சஞ்சிகைகள் சில வற்றை எடுத்த எடுப்பில் பிரிக்கலானார். அங்கு வந்திருந்த நான்கு பத்திரிகைகளிலும் நான்கு பெயர்கள் 'சாந்தினி' வடிவில் அழகு காட்டி அச்சில் நின்றன. அவள் எழுதியிருந்த கதைகள் அந்தப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன. அவள் கதாசிரியை.

உலகத்திலே சாதாரணமாக 'ஜோடி—ஜோடி' என்று பேசிக் கொள்வார்கள். இருமனம் ஒன்று சேர்ந்த தம்பதி களுக்கே 'ஜோடி' என்ற சொல்லின் முழு அர்த்தம் நிலவ முடியும். அப்படிப்பட்ட இணைகளை உலகில் நடைமுறையில் காண்பது அபூர்வம். அத்தகைய தொன்றுதான் இந்த ஜோடி—சுதர்சன்-சாந்தினி! எண்ணாமல் தோன்றும் கற் பனைபோல் ஆனதோ என்னவோ இவர்கள் வாழ்வு வையத் திலே!

காதலர்கள் தம்பதிகளாகவில்லை. முன்பின் முகமறி யாதவர்கள் தம்பதிகளாயினர். மணப்பந்தலில்தான் அவர் கள் கண்ணாடியில் பார்த்துக் கொள்வதுபோல ஒருவரை யொருவர் முகம் கண்டார்கள்; அவர்கள் முகங்களிலே இத யங்கள் பிரதிபலித்திருக்க வேண்டும். ஜோடியென்றால் இது தான் எடுத்துக் காட்டு போலும்!

காலண்டர் தேதி காட்டி நின்றது. சொல்லி வைத்தாற் போலிருந்தது நாள். இதற்குச் சரியாக ஒரு வருஷத்திற்கு முன்னர்தான் அவள் அவர் மனைவியானாள்; அந்த ஆண்டு தான் எவ்வளவு சடுதியில் ஒரு கணம் போலப் பறந்து விட் டது! அப்போது சாந்தினி இருந்தாள்.

ஆனால், இன்றோ அவருக்கு ஒரு கணத்தைக் கடத்துவது ஒரு யுகமாகத் தோன்றியது. காரணம், சாந்தினி மறைந்து விட்டாள். அவளிருந்த இடம்......

சுதர்சன் அமர்ந்தது அமர்ந்த நிலையில் நாற்காலியில் கிடந்தார். அவர் மனம் எங்கோ ஓடியது; விரல்கள் தவழ்ந்து கிடந்த பத்திரிகைகளின் பக்கங்களைப் புரட்டின. அதன் ஒரு பகுதியில் எழுதப்பட்டிருந்த குறிப்பு ஒன்றைக் கண்ணோட்டமிட்டார் அவர்.

''எழுத்தாள ஜோடி என்று பெயர் பெற்ற சுதர்சன்-சாந்தினி தம்பதிகளில் திருமதி சாந்தினி அவர்கள் உயிர் நீத்தார் என்பதறிந்து மிகவும் வருந்துகிறோம். அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கிறோம்.''

சுதர்சன்-சாந்தினி எழுத்தாள தம்பதிகளாக வாய்த்தது-நிகழ்ந்தது கதைபோல; அது உண்மைச் சம்பவம்.

அன்று சுதர்சன், ஆசிரியர் வேண்டுகோள் விடுத்திருந்த பத்திரிகை ஆண்டு மலருக்குக் கதை எழுதி முடித்து விட்டு, நீட்டி முழக்கி உடம்பை நெளித்துக் கொண்டார். அப்பொழுது அவர் பெயருக்குக் கடிதம் ஒன்று வந்தது. 'லாவண்யா' என்ற எழுத்தாளரிடமிருந்து வந்திருந்தது அக் கடிதம். அதில்தான் சுதர்சனைக் காணப் பெரும் ஆவல் கொண்டு துடிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது கண்டு சுதர்சனுக்குப் பெருமிதம் பொங்கியது. ஒரே துறையில் இருப்பவர்கள் அறிமுகமாகிச் சந்திப்புக்கள் பரிமாறிக் கொண்டால் எழுத்துலகில் இலக்கியம் பற்றிய அபிப்பிராயங்களையும் பரிவர்த்தனை செய்து கொள்ளும் வாய்ப்பு கிட்டும். அத்துடன், ''லாவண்யா'' எழுதி வரும் கதைகள் சுதர்சனின் இதயத்தில் நல்ல இடம் பெற்றிருந்தன. சொல்லி வைத்தாற்போல அவர் கதைகள் வெளிவரும் ஒவ்வொரு இதழிலும் ஜோடியாக 'லாவண்யா'வின் கதைகளும் இடம் பெற்ற விந்தையை என்னவென்று கூறுவது? சந்தர்ப்பங்களா.....?

அவள் குறிப்பிட்ட வண்ணம் 'ராபின்ஸன் பார்'க்கில் சந்திக்கப் புறப்பட்டார் சுதர்சன். 'லாவண்யா' என்ற பெயர் அவரை நொடியில் திகைக்க வைத்தது. 'ஒருவேளை அந்தப் பெயரில் எழுதுவது நிஜமாகவே பெண்ணாக இருந்து விட்

டால்...ஆனால், ஓர் பெண்ணா இப்படி நெஞ்சுரம் கொண்டு 'பார்'க்கில் சந்திக்கும் அளவுக்குத் தைரியம் கொள்ள முடியும். ஆனால், தான் எண்ணுவதுபோல், பெண்ணின் புனை பெயரில் ஓர் ஆடவனே அக்கதைகளைச் சிருஷ்டித்திருந்தால்......என்று பலவாறு அவர் மனம் குழம்பியது.

நண்பரைப் பார்த்து வருவதாகத் தன் மனைவியிடம் சொல்லிப் புறப்பட்டார்: பூங்காவின் கோடியில் யார் வரவையோ எதிர் பார்த்திருப்பவள் போல ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்.

''நீங்கள்தான் சுதர்சன் அவர்களா?''

''ஆம்; நீங்கள்தாம் லாவண்யா...''

''இல்லை...அவள் என் தோழி. எதிர்பாராத சில காரணங்களால் அவள் இங்கு வர இயலவில்லை. உங்களைத் தன் இல்லத்திற்கு அழைத்துப் போகவே நான் காத்திருக்கிறேன்.''

சுதர்சனுக்கு மனம் என்னவோ போலிருந்தது. அந்தப் பெண்ணுடன் கூடச் சென்ற அவரை அந்தப் பெண் நாற்காலியில் அமர்ந்திருந்த யுவதி ஒருத்திக்கு அறிமுகப் படுத்தினாள்: ''இவள்தான் லாவண்யா; இயற் பெயர் சாந்தினி...'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

சுதர்சன் வியப்பு விரிந்த கண்களால் ஏறிட்டு நிமிர்ந்தார். அங்கு அவர் மனைவி முறுவல் கோலத்துடன் நாற்காலியில் அமர்ந்திருந்தாள்.

''சாந்தினி, நீதான் லாவண்யாவா? நான் பாக்கியசாலி.''

''நான்தான் பாக்கியசாலி; தாங்கள் எழுதும் கதைகளை என்னிடம் படித்துக் காண்பித்து என் அபிப்பிராயம் கேட்பீர்களே, அந்தத் தொடர்பு என்னையும் எழுத உந்தித் தள்ளிற்று. உங்கள் ஆசியில் வெற்றி கண்டேன். கதைகளை என் தோழியின் வீட்டு விலாசத்திற்கு அனுப்பி வந்தேன்;

உங்களை ஒரு நாள் திடீரென்று திகைக்கச் செய்ய வேண்டு மென்றே என் தோழியின் ஒத்திகையின் பேரில் இந்த நாட கத்திற்கு இசைந்தேன். வெற்றி கிட்டியது. . .இனி சாந்தினி என்ற பெயரில்தான் நான் கதைகள் எழுதுவேன். . .திருப்தி தானே. . .''

நினைவு ஏடுகள் புரண்டன. சுதர்சன் சுய நினைவு பெற் ருர். அவர் அமர்ந்திருந்த நாற்காலியின் பாதத்தில் கிடந்த சிறு பள்ளமொன்றில் கண்ணீர் வேலி படர்ந்து கிடந்தது. அவர் விம்மினுர்.

''ஐயோ, சாந்தினி...என்னைப் பிரிந்தாயே கண்ணே!...''

எதிரொலித்து முழங்கியது கட்டடம்.

* * * *

ஆபீஸ் முடிந்து வீட்டினுள் நுழைந்ததும் ஏன் நுழைந்தோம் என்றுதான் இருந்தது சுதர்சனுக்கு. அலுவ லகத்து வேலைகளுடன் ஒன்றிக்கிடந்த தருணம் அவருக்கு மனம் இதம்பட்டதைப்போலத்தான் இருந்தது.

அடுக்கி வைத்திருந்த கடிதங்களை ஒவ்வொன்ருகப் பிரித் தார். கடந்த முப்பது நாட்களாக வந்தவை அவை. வீடு வந்ததும் அவற்றையெல்லாம் உடைத்துப் பார்க்க உள்ள மில்லை. எதற்கும் மனம் ஒருமனப்படத்தான் வேண்டும் போலும்.

பத்திரிகைகளிலிருந்து வந்திருந்தவற்றை ஒருபுறமாக மேஜை ஓரத்தில் வைத்தார், அவை அவரது பதிலுக்குக் காத்திருக்க வேண்டியவை. ஆசிரிய நண்பர்கள் போட்டி போட்டுக் கொண்டு கதைகள் கேட்டிருந்தனர். சிலர்— செய்தி அறிந்தவர்கள்—சாந்தினியின் பிரிவுக்கு அனுதாபம் கூறியிருந்தனர். உறவினரின் கடிதங்கள் இந்தக் குழுவில் அங்கம் பெற வேண்டியவை.

இறுதிக் கடிதம்தான் சுதர்சனது உள்ளத்தில் ஏதோ ஒரு உளைச்சலை ஏற்படுத்தி விட்டது. அவரது ஒன்றுவிட்ட தமக்கை எழுதியிருந்தாள் கடிதத்தை. அதில் சுதர்சனது

இரண்டாம் திருமணம் பற்றிய சில குறிப்புகள் கண்டிருந் தன. அது—அந்தப் புத்திமதி—அக்கடிதத்தின் வாசகம்— ஏன்—அதன் ஒவ்வொரு சொல்லும் அது போது அவருக்கு உள்ளத்தைப் பற்றி எரியச் செய்தது, நெஞ்சம் பொறிபட்ட பஞ்சாகிற்று.

'உயிரும் உடலுமாக வாழ்ந்து விட்டு, சாந்தினியை மறந்து இன்னொருத்தியுடன் புதுவாழ்வு தொடங்குவதா? சாந்தினி, சத்தியமாக, நான் உனக்குக் கட்டிய மாங்கல்யத் தின் மீது ஆணையிட்டு...உன் நினைவு மேல் உறுதி கூறிச் சொல்கிறேன்: இனி நீ தான் என் வாழ்வு. ..வையம் எல் லாம். உன் இன்ப நினைவு ஒன்றே இனி என் வருங் காலம். . .சாந்தினி. . .' என்று அவர் மனம் பேசத் தொடங் கிற்று. அவர் காது கொடுத்துக் கேட்கத் தவறுவாரா?

கடிதங்கள் பறந்தன.

தன் சகோதரிக்கு அவர் போட்டிருந்த கடிதத்தின் பிரதி இது.

அன்புக்குரிய சகோதரி அவர்கட்கு, நமஸ்காரம்.

உங்கள் கடிதம் கண்டேன், உங்கள் புத்திமதிக்கும் நன்றி. தயவுசெய்து இனி என் சொந்த வாழ்வில் குறுக் கிடாதிருக்க வேண்டுகிறேன். சாந்தினி என் வரை இறந்து விடவில்லை; என்னுள் உயிரோவியமாக இதோ ஆனந்த நட மிடுகின்றாளே. அன்றும், இன்றும், ஏன் என்றுமே என் சாந்தினிதான் என் துணை. . .உயிர்த் துணை!

தங்கள்
சுதர்சன்.

* * * *

சுதர்சனுக்கு உடம்பு அனலாகக் காய்ந்தது. அவர் அடித்துப் போட்டாற்போலக் கிடந்தார் படுக்கையில். பக் கத்து வீட்டு நண்பர் வந்து இருந்து அவரை அடிக்கடி கவ னித்தார். அவர் ஓர் இலக்கிய ரசிகர்; சுதர்சனின் எழுத்துக்-

களை அவர் ரசித்துப் படிப்பார். சந்தர்ப்பங்களும் ஒன்று பட்ட குணங்களும் அவர்கள் நட்பை வளர்த்தன.

சுதர்சனுக்குப் பேச்சுமூச்சில்லை; விழிகள் திறக்கவில்லை. சாவிகொடுத்த கடிகாரம் அந்தச் சமயத்துக்கு ஏதோ ஓடுவதைப் போலத்தான் அவரது உடலும் இயங்கிக் கொண்டிருந்தது; ஆனால், அவருக்கு தன்உடம்பைப் பற்றிக் கவலையே இல்லை. அதைப்பற்றிக் கவலைகொண்ட ஒரே உயிர் சாந்தினி தான் போய்விட்டாளே! நாட்களைக் கழிக்க வேண்டுமே என்பதற்காக ஹோட்டல் சாப்பாடு, கடற்கரை, காரியாலயம் என மாறி மாறிச் சுழன்றது—அவர் திட்டம். அவர் திட்டத்தில் உடல் நலம் பேணுவதற்கான ஒன்றுமில்லை. அவர் படுத்து விட்டார்.

டாக்டர் வந்தார். 'டைபாயிட் ஜுரம்' என்றார் அவர். சுதர்சன் வியாதியின் பெயரைக் கேட்டதும் எதையோ எதிர் பார்த்திருப்பவர்போல ஒரு விநாடி மலர்ச்சி பெற்றார். ஆம் அவருக்கு உலகம் வெறுத்திருந்தது. ஏனென்றால் அதில் சாந்தினி மட்டும் இல்லாமலிருந்தாள்!

காலம் 'கடமை கடமை' என்று உயிரை விட்டுக் கொண்டிருந்தது. உலகத்திற்குக் கடமையில் அப்படி ஓர் உணர்வு இருப்பதாகத் தெரியவில்லை.

மனிதனுக்குத்தான் கடமை என்ற ஒன்று உண்டென்பதைப் பற்றிக்கூட ஐயப்பாடுதானே!

காலம், உலகம், மனிதன் விசித்திரமான மூன்று வட்டப் புள்ளி மையங்களா? அல்லது விந்தை மிக்க மூன்று துருவங்களா?

பதினைந்து நாட்கள் முடிந்தபின், அன்றுதான் சுதர்சன் மெல்லக் கண்களைத் திறந்தார். திறந்த விழிப்பார்வையில் பட்டுவிலகிய புது முகங்களைக் கண்டதும் அவர் உடலில் திகைப்பு ஊறியது.

"அக்கா, எப்போ வந்தே. மாலினியையும் அழைச்சுக் கிட்டு வந்தியா?" என்ற சொற்கள் அவர் உதடுகளினின்றும்

வெளிப்பட்டன பாதி உயிருடன்; மெல்லிய சன்னமான தொனியுடன். அவருக்கு மேல்மூச்சு வாங்கியது. வெளிறிப் போயிருந்த உதடுகள் மறுபடியும் மூடின.

"தம்பி, உடம்பை அலட்டிக்காதே. நாங்க வந்து ஒரு வாரமாச்சு; நீதான் லெட்டர் கூடப் போடலியே அப்பா; மாலினியும் மாமாவைப் பார்த்தாத்தான் ஆச்சு என்று பிடிவாதம் பிடித்தாள். அழைத்து வந்தேன்......தூங்கு. பின்னால் பேசலாம்...—" என்றாள் மங்களம்.

பலமுறை தன்னை இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ள தன் சகோதரி எழுதியிருந்த பல கடிதங்கள் அவருக்கு நினைவில் நுழைந் தெழுந்தன. அவர் முகம் மாற்றம் காட்டியது.

"எதுக்கு அக்கா இங்கே வரணும்: ஆமாம்; நண்பர் தான் எழுதியிருப்பாரு, அக்காவோடே மாலினியும் வரக் காரணம்..." திரும்பத் திரும்ப என் மறுமணம் பற்றி நச்சரிப்பதற்குப் பூடகமான பின் காரணம்—மாலினிதான் காரணத்திற் குரியவளாக"...மேலே அவர் நினைவுச் சங்கிலித் தொடர் சேரவில்லை.

ஜுர வேகம் தணிந்து வந்தது. மாலினி அவர் அருகேயே இருந்துகொண்டு அவரைக் கண்காணித்து வந்தாள்; வேண்டிய பணிவிடைகள் செய்தாள்; இதையெல்லாம் கண்ட சுதர்சனுக்கு மனம் குழம்பி வந்தது. அவளது இத்தகைய சிரத்தைக்குக் காரணம் என்னவா யிருக்குமென் பதையும் அவர் உணரலானார். வரவர, அன்று வந்த தன் தமக்கையின் கடிதங்களின் பொருளையும் இப்போது அவர் புரிந்து கொள்ளலானார்; எல்லாவற்றிற்கும் காரணம் மாலினி! அவள் தன் மாமா சுதர்சனுக்கெனக் காத்திருக்கும் கன்னி!

இம் முடிவைக் கண்டுபிடிக்க சுதர்சனுக்கு அதிக நேரமாகவில்லை. பெண் உள்ளத்தைப் பல கோணங்களில் ஆராயும் எழுத்தாளருக்கு இந்த மாலினியின் மனத்தைப் புரிந்து கொள்ளுவதில் வியப்பிற்குரிய தொன்றும் இல்லைதான்!

"தம்பி, பலமுறை உனக்குத் தபால் போட்டேன்; நீ பதில் ஒன்றுகூடப் போடவில்லை. மாலினியை மனசில் எண்ணித்தான் நான் உனக்குப் பலதடவை எழுதினேன். சதா அவள் உன் நினைவாகவே இருக்கிருள். உன்னைத் தன் கணவனுக அடையவேண்டு மென்பதே அவள் லட்சியக் கனவு. சாந்தினியின் இடத்திற்கு அவள் எவ்விதத்திலும் தகுந்தவள். வீட்டில் விளக்கேற்றி வை. உன் வாழ்வையும் வளம்பெறச் செய்வதில் சிந்தனை கொள் தம்பி. சாந்தினி இருந்த இடத்தில் நீ என் மாலினியை அமர்த்திக்கொண்டால், சாந்தினியின் ஆவி எவ்வளவோ சாந்தி பெறும். தம்பி—நல்ல முடிவு சொல். மாலினி வாழ, உன்னுடன் வாழ நல்ல முடிவு கூறு சுதர்சன்..."

அவள்-மங்களம்—இப்படிப் பேசினுள்.

சுதர்சன் வியந்து போனுர் சகோதரியின் ஆதாரமுள்ள அழகான பேச்சைக் கேட்டு.

"மாலினியை தன் இடத்தில் நிரப்பிக் கொண்டால் சாந்தினி மன நிம்மதி பெறுவாளா? நிஜமாகவா? என்றென்றும் நானும் மாலினியும் அவள் நினைவாகவே இருந்துதானே தீருவோம் அது கண்டு என் சாந்தினி புளகித்துப் போவாள் அல்லவா?" என்று பலவாறு ஓடின அவர் உள்ளத்தில்.

மாலினியைத் தான் மணப்பதென்ற ஓர் முடிவு அவர் உள்ளத்தில் உருப்பெற்ற தருணம் அது. பழைய புத்தகங்களைப் பிரித்துக் கொண்டிருக்கையில். சுதர்சனின் பார்வையில் டயரி ஒன்று பட்டது. அது சாந்தினியினுடையது. பிரித்தார், ஏடுகள் இதழ் புரண்டன; அதில் ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் ஏதோ எழுதியிருந்தது. படிக்கலானுர்.

"அத்தான் படுத்த படுக்கையாகக் கிடக்கிருரே. கடவுளே, என் கணவரைக் காப்பாற்று. எனக்குத் தாலிபாக்கியம் அருள். அவர் ஒருவரே இன்றைய என் கனவு. என்னைச் சுமங்கலியாக வாழச் செய். இல்லையென்ருல் சுமங்கலியாக மஞ்சளும் குங்குமமுமாகச் சாகச் செய்—தாயே...சாந்தினி

பிரார்த்திக்கிறாள்...இந்த அபலையின் பிரார்த்தனை கேட்கிறதா? அவர் பிழைப்பாரா ஆகா; நானே பாக்கியவதி!''

சாந்தினி இறப்பதற்கு முதல்வாரம் சுதர்சனன் உடல் நலமின்றி இருந்தசமயம், அவள் பெண் உள்ளம் பிரதிபலிக்கப்பட்டிருந்தது;அந்த டயரியில். அவள் பிரார்த்தனை-அவள் கனவு—அவள் உள்ளம்.—சுதர்சனுக்குக் கண்கள் இருண்டு வந்தன.

'ஆம்; அவள் பிரார்த்தனை ஈடேறியது. அவள் சுமங்கலியாகவே தான் உயிர்நீத்தாள். .சாந்தினி, நீ பெண் தெய்வம் உன்னை மறந்து என் சுயநலத்தில் மறுமணம் செய்துகொள்ளத் திட்டமிட்ட நான் பாவி. சாந்தினி, நீ என்னை மன்னித்துவிடு—'

மாலினியைத் தான் மணக்க இயலாதென்று கூறிவிட்டார் சுதர்சன். மாலினியின் விம்மல் ஒலியும், பெருமூச்சும் அவர் இதயத்தில் எதிரொலித்தன.

அடுத்த நாள் மாலினியும், அவள் தாயும் ஊருக்குப் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

சுதர்சன் படுக்கையை விட்டு எழுந்தார்.மேஜையில் வைத்திருந்த டானிக்கைச் சாப்பிட்டார்; கலக்கிவைத்திருந்த ஹார்லிக்ஸை சிறிது சென்று அருந்தினார். என்னமோ தோன்றியது; அச்சான பழைய கதைகள்'பைலை'எடுத்தார். அதன் முகப்பில் 'அன்புக் கணவருக்கு' என்ற குறிப்புடன் ஒரு கடிதம் இருப்பதைக் கண்டார். எழுத்துக்கள் சாந்தினியினுடையவை, மங்கலாகத் தெரிந்தன. நடுங்கும் கரங்களுடன், நீர் வழிந்த கண்களுடன், துடிக்கும் இதயத்துடன் சுதர்சன் அக்கடிதத்தைப் பிரித்தார். கடிதம் பேசியது.

''மதிப்பிற்குரிய அன்புக் கணவருக்கு,

மரணப்படுக்கையில் ஊசலாடும் என் இறுதிமொழிகள் இவை. நான் இனிப் பிழைக்க மாட்டேன். எனக்குப் பின் என் இடத்தை இட்டு நிரப்ப ஒருத்தி காத்திருக்கிறாள் என்று

அறிய எனக்கு எத்தனை மகிழ்ச்சி புரளுகிறது தெரியுமா? அவள்தான் மாலினி; எவ்விதத்திலும் அவள் என் மறுபதிப்பு. அவள் உங்கள் அன்புக்குத் தவங்கிடக்கிறாள். அவளை இரண்டாந்தாரமாகக் கலியாணம் செய்து கொண்டால் என் உள்ளம் அமைதிபெறும்.

இப்படிக்கு
அபாக்கியவதி சாந்தினி.''

மாண்ட தன் மனைவி தன் முன் நேருக்கு நேர் நின்று பணிப்பதாகப்பட்டது சுதர்சனுக்கு. அவர் உடலெங்கணும் ரோமாஞ்சலி கிளர்ந்தது.

அழுது அழுது வீங்கிக் கிடந்த முகத்துடன் தாயுடன் புறப்படத் தருணம் பார்த்து நின்ற மாலினியிடம் ஓடி அவள் பூங்கரம் பற்றி, ''மாலினி, இனி நீ என் துணைவி. என் சாந்தினியின் ஆணை; உன் சாந்தினியின் ஆணை...,எங்கே ஒரு முறை சிரி...'' என்றார் சுதர்சன் உணர்ச்சி சுழித்திட்ட குரலில்.

அழகு ரோஜாவாகக் காட்சி தந்தாள் மாலினி!

சுதர்சன்-மாலினி திருமணம் நடந்தது.

அன்று அவர்களது 'முதல் இரவு'. நிலவு சிரித்துக் கொண்டிருந்தது. முகில் கூட்டங்கள் கண்ணுமூச்சி விளையாடின. தென்றல் பூப்பந்தாடியது. இதமான வேளை; இன்பமான நேரம்.

வளைகுலுங்கும் நாதம் இழைந்து வந்தது. படியேறிச் சென்றார் சுதர்சன். அவர் உள்ளம் எம்பிக் குதித்தது. ஆனால், உள்ளே சென்றதும், அவர் கண்ட காட்சி அவர் நெஞ்சை இறுக்கிச் சாறு பிழியச் செய்தது. அங்கு அழுத கண்ணீருடன் துயரமே வடிவாக நின்றாள் மாலினி.

*　　　*　　　*

சுதர்சன் திடுக்கிட்டார்.

"மாலினி..",

"........."

"மாலினி..."

"மாமா, முதலில் என்னை மன்னிப்பீர்களா? நான் துரோகி. சாந்தினிக்குத் துரோகம் செய்து விட்டேன். அவள் எழுதியிருந்ததாக நீங்கள் நினைத்திருக்கும் அக் கடிதம்—என்னை மணந்து கொள்ளக் கோரியிருந்த அக் கடிதம் நான் எழுதியது. உங்கள் மனத்தை மாற்ற என் மனோதத்துவம் கற்பித்த யுக்தி; உங்கள் மீது நான் கொண்டிருந்த அந்தரங்கக் காதல் படித்துக் கொடுத்த பாடம்....அத்தான் என்னை மன்னியுங்கள். என் மனச்சாட்சி எனக்குத் தக்க தண்டனையைக் கடந்த சில நாட்களாக அல்லும் பகலும் எனக்குக் கொடுத்து விட்டது. மாமா..." என்று அழுதாள் மாலினி.

இந்த முடிவை சுதர்சன் எவ்விதம் எதிர்பார்த்திருப்பார்? அவர் கண்களில் கனல் பறக்க நின்று கொண்டிருந்தார். எதிரேயிருந்த அவர் முதல் மனைவி சாந்தினியின் போட்டோ அவரை ரம்பம் கொண்டு அறுப்பது போன்ற உள்ள வேதனை எய்தினார் அவர்.

"துரோகி" என்று ஓலமிட்ட அவர் தன் மனைவி மாலினியை ஓங்கிப் பிடித்துத் தள்ளினார். அவள் தரையில் தஞ்சமடைந்தாள்; ரத்தம் குமுறிப் பாய்ந்தது. அவள் கடைசி மூச்சும் பிரிந்தது.

* * *

மறுநாள் சுதர்சனுக்கு ஒரு கடிதம் வந்தது,

"அன்புக் கணவர் அவர்களுக்கு,

உரிமை பாராட்டி அழைக்கிறேன். உரிமையை அநுபவிக்கக் கொடுத்து வைக்காதவளாகி விட்டாலும்! 'உங்களை என் பதியாக என்றோ வரித்தேன். உங்கள்

மனைவி நான்' என்று என்னுள் ஒரேமுறை கூறிக்கொண்டாலும் போதும் என்ற துடிப்பு வெறியில் உழன்ற நான் வெற்றிபெற்றேன். சாந்தினி எழுதியதுபோல நான் அன்று உங்கட்குக் கடிதம் எழுதிவைத்தேன். குற்றம்தான்! அதை என் ஆயுட்காலம் முழுவதும் மறைத்து வைத்திருக்கலாம். என் மனச்சாட்சி என்னை வதைத்தது. ரகசியத்தை உங்களிடம் கூறினால், நீங்கள் எரிமலையாக வெடிப்பீர்கள் என்பதையும் அறிந்தேதான் இதோ, இந்தப் பாலை அருந்தி உங்களிடம் விடை பெறுகிறேன், உங்கள் மனைவியாக நின்று. என் பாக்கியம் அவ்வளவுதான்! என்னை மன்னியுங்கள். உங்கள் பாதங்களுக்கு என் கடைசி வணக்கங்கள்.

என்றும் தங்கள் அடியாளாகக் கனவு கண்ட அபலை

மாலினி''

*　　　*　　　*

அந்நாள் இலக்கியச் சந்தையில் புதிதாகப் பூத்த ஒரு கதைமலர் வாசகர்களது கவனத்தைக் கவர்ந்தது. ''மூன்று துருவங்கள்'' என்ற ஆசிரியர் சுதர்சனின் நூல் அது!

அதன் முதல் ஏட்டில் 'காணிக்கை' என்ற தலைப்பில் கீழ்க்கண்ட சில வரிகள் அச்சாகியிருந்தன:—

''தழுவாத மூன்று துருவங்கள் என்வரை—எங்கள் மூவர் வரை—தழுவும் துருவங்களாக வாய்ப்பு அண்டியும், அவை பிரிந்துவிட்டன. பித்தனாகி ஏங்கித்தவித்து நிற்கும் நான், என் மனைவியாக அங்கம் வகித்து உயிர் நீத்த என் முதல்மனைவி சாந்தினி, பின் என் இரண்டாம் மனைவியாக ஒரு கணம் நின்று நிறைவுற்றுப் பிறகு விடுதலைபெற்ற என் உயிர்த்துணை மாலினி ஆகிய என் இரு துணைவிகளின் இன்ப நினைவாக என்னுடைய இந்த 'மூன்று துருவங்கள்' எனும் தொகுதியை அவர்கட்குக் காணிக்கை செலுத்துகிறேன், ஃ

சுதர்சன்''

# தம்பிக்கோட்டை வீச்சரிவாள்

அங்காளம்மன் திருச் சந்நிதானத்தில் பவளக்கொடியின் கழுத்தில் திருப்பூட்டினன் சோலையப்பன். தன்னைத் தானே ஒருமுறை குனிந்து நோக்கிக்கொண்டான் அவன்; மகிழ்ச்சியின் சதங்கையொலி ஆனந்தப்பண் கூட்டிற்று; மணமாலை நெடி ஏறியது. அது அவனுக்கு வாகை மாலையெனக் காட்சி தந்தது. பவளக்கொடியின் பவள நுதலிடைப் பளிச்சிட்ட திலகத்தில் மங்கலநாண் நகை சிந்தியதோ? மெய்ம் மறந்திருந்த அவன் கணப் பொழுதை இடையோடவிட்ட பிறகு, அம்பிகையின் சபைமுன் விழுந்து வணங்கினன். குங்குமமும் திருநீறும் அவனுக்கு வாழ்த்துக்களைச் சீராகக் கொடுத்தன போலும்!

''பவளம்!...''

''ஊம்!...''

''பயணம் கட்டுவமா? சொல்லு புள்ளே!''

''ஓ!''

வேதனையை உள்ளடக்கிக் கொண்டவண்ணம் வெளிவந்தது குறுஞ்சிரிப்பு; அவள் நெடுமூச்செறிந்தாள். கரங்கள் சிரம் ஏற, சிரம்தாழ்ந்தாள். 'ஆத்தா மூத்தவளே! எங் கனுப் பலிச்சிருச்சு. எல்லாம் நீ ஏத்திவச்ச வெளக்கேதான்!'

சோலையப்பனும் பவளக்கொடியும் இதயத்தோடு இதயம் பிணைத்துக் கொண்டவர்கள்; ஆகவே, கையொடு கை சேர்த்து, களி நடம் புரிந்தவாறு புறப்பட எத்தனம் செய்தார்கள். பத்து நாழிகைப்பொழுது. என்றாலும், கோடை வெய்யில் கொளுத்தியது.

அது தருணம், யாரோ ஒருவன் விசை பாய்ச்சி வந்தான்; வேர்வை புனலானது; பதட்டம் வாயசைவில் கனிந்

தது. 'செங்கோட அண்ணாச்சி இதை ஒங்க கையிலே குடுத்திட்டு வரச் சொன்னிச்சு; ஒங்க கண்ணாலத்துக்கு எளுத வேண்டிய மொய்க்குப் பதிலாத்தான் இதை அனுப்பியிருக்குது; இந்தாங்க, வச்சுக்கிடுங்க!' என்று வாய்மொழிகளை உதிர்த்தான் வந்த தூதுவன். சோலையப்பனை ஜாடைமாடையாக ஓரக் கண் அமைத்துப் பார்த்தபின், பரிசுப் பொருள் பவளக்கொடியின் பூங்கரங்களை அலங்கரித்தது.

பவளக்கொடி மண் பொம்மையானாள்; திருமணப் பரிசிலென ஓடோடிவந்த 'தம்பிக்கோட்டை வீச்சரிவாள்' அவளைக் கண்டும் காணாததுபோல கள்ளப் புன்னகை விடுத்தது!

* * * *

'மருதங்குடி இனிமே எனக்கு விட்டுப்போனாப்பலதான்; எருக்கலக் கோட்டைதான் இனிமேலுக்கு எனக்குச் சதம்!'

இந்த ஓர் எண்ணத்தின் அடித்தளத்துடன் ஒட்டி உறவாடி விளையாடிக்கொண்டிருந்தது பவளக்கொடியின் மன உணர்வு.

முகம் நோக்கும் கண்ணாடியில் அவளுடைய அகம் தெரிந்தது. அந்த அகத்தில் 'அகத்தின் அகமாக' ஓர் உருவம் தோன்றியது. கறுக்கு மட்டையின் விளிம்பு போன்ற மீசை; செங்காயாகக் காணப்படுகின்ற தக்காளியின் மேனி; மிளகாய்ப் பாத்தியின் இடைவெளியில் நெளிநெளியாகப் பரந்தோடிக் கிடக்கும் குறுமணலின் வளைவு கொண்ட சுருட்டை முடி; காவிரி வண்டலில் வளரும் வாழையின் செழிப்புப் போன்ற உடற்கட்டு. 'மச்சான்! நீங்களும் நானும் தாராடிசாமி வாய்க்காலடியிலே சுத்தித்திரிஞ்சு வளர்ந்தோம்; நம்ம நேசத்திலே பாசம் கூடி வளர்ந்திச்சு; நான் 'சமைஞ்ச பொண் ஆனேன்; வந்திச்சு வெனை; ஒங்களுக்குப் போட்டியா வந்தானே அந்தச் செங்கோடன்!... கள்ளத் தோணியிலே அக்கறைக்குப் பறிஞ்சவன் கள்ளத்தனமாகவே இங்கணே வந்து குதிச்சுப்புட்டானே!...

பசையோட வந்தான்; ஆனுக்க, பாசி புடிச்ச சொத்து அது!. . ஆத்தாளேச் சொக்குப்பொடி தூவி தன்னக் கட்டிப் புட்டு, என்னையும் வசியப்படுத்தித் தன் சொந்துச் சொகமா ஆக்கிக்கிடப் பார்த்தான். நடந்திச்சா? ம்!. .சொந்த அக்கா மவ உரிமையில்லே கொண்டாடப் பார்த்தாரு அவரு!...பாவிப்பயமவன்!'

அழித்தெழுத முடியாத விதியின் எழுத்தை அழித்து எழுத முற்பட்ட செங்கோடன் அன்றைக்குக் கூப்பாடு போட்டான்; உடன் பிறந்த பாசத்துக்குப் பணிந்த பவளக் கொடியின் தாய், அவனது மன விருப்பப்படியே திருவுளச் சீட்டுக் குலுக்கிப் போட்டு, மகமாயியின் ஆக்கினேப் பிர காரமே நடப்பதாக உறுதி மொழிந்தாள். உடுக்குகள் முழங்கின; சூடன் எரிந்தது. செங்கோடன் ஒருபுறம்; இன்னொரு சரணையிலே சோலேயப்பன் இவ்விருவரது ஒட் டாத உள்ளங்களின் நடுவெளியை ஆடுகளமாக நர்த்தனம் புரிந்துகொண்டேயிருந்தாள் பவளக்கொடி. அந்த நர்த்தன வெறியில் கதிகலங்கினார்கள் காதலர்கள் இருவரும். அதே வேளேயில், அவளும் நிலே தடுமாறினாள்; சித்தம் குலேந்தாள். மகமாயியின் சந்நிதியில் எழுத்தாணி கொண்டு கிறுக்கப் பட்ட ஒலே நறுக்குகள் இரண்டு குலுக்கிப் போடப்பட்டன. பூசாரி ஒன்றை எடுத்தான். தீர்ப்புப் படிக்கப்பட்டது: 'செங்கோட அம்பலத்துக்குத்தான் பவளம் சேரோணும்னு ஆத்தா பெரியவ மகமாயி சொல்லிப்புட்டா!' என்றான் பூசாரி. பனே ஏறி விழுந்தவனே கடா ஏறி மிதித்தமாதிரி சோலேயப்பன் துடித்தான்; துவண்டாள் பேதை. துவண்ட வளின் கனவு மீண்ட விந்தை நிகழ்ச்சியை நினேக்க நினேக்க அவளுக்கு அதிசயமாகவே பட்டது. 'நான் என் ஆசை மச்சானே அடைஞ்ச விதமே மலேப்பாத்தான் இருக்குது- அல்லாம் ஆண்டவன் செயலேதான்!'

* * * *

'பவளம்!. .'

'மச்சானுங்களா?'

ஆமா!'

'ம்!'

நிலவுக் கன்னியின் சீதளப்பார்வையில் பட்டுத்தெறித்தனர் பவளக் கொடியும் சோலையப்பனும். முதல் இரவின் மோனத் தவம் அவர்கள் இருவரையும் தாலாட்டிற்று. அழைத்துக் கொண்டவர்கள் 'கமுக்கமாக'ச் சிரித்துக் கொண்டார்கள்; சிந்தை பறிபோன நெஞ்சில் காலம் புரண்டது; ஓடியது. மண்ணை நம்பினான் சோலையப்பன்; பொன் விளையாவிட்டாலும், பணம் விளைந்தது. சாண் வயிறு நிரம்பியது. பவளக்கொடி சோலையப்பனை நம்பினாள். இதயம் நிரம்பிய சிரிப்பு விளைந்தது. தாம்பத்தியம் சிறந்தது.

ஒருநாள்.

பவளக்கொடியின் நினைவு கடந்தநாளைய நிழலில் ஓய்வு கண்டது. சோலையப்பன் இருந்திருந்தாற்போலக் கேட்டான்: 'ஏலே பவளப் பொண்ணு! நம்ம கண்ணுலத் தண்ணைக்கு ஆத்தாளுக்கு முன்னடி யாரோ ஒருத்தன் தம்பிக்கோட்டை வீச்சரிவாளை செங்கோடன் கண்ணுலப் பரிசாத் தரச் சொன்னதாகச் சொல்லி, உங் கையிலே குடுத்தானே, அது சங்கதி அப்பாலே எதுவும் மட்டுப்படலையே? அந்த அரிவாள் ஏது?. .என்னோட சன்ம வைரியான அந்தச் செங்கோடன் நம்ம கண்ணுலத்துக்குத் துளியளவு குந்தகம் கூட செய்யாமத் தப்பினது மெய்யாலுமே அதிசயக் கூத்தாட்டந்தான் தோணுது. இல்லையா, புள்ளே பவளக் குட்டி...?'

பவளக்கொடியின் இதழ்கள் சிரித்தன; கண்கள் அழுதமை ஓர் உண்மை நடப்பு வெளிப் போந்தது. 'மச்சான் மச்சான்! கேளுங்க அந்தக் கூத்தை!. .நான் அந்த முரடன் செங்கோடனுக்குச் சொந்தமாகோணும்மின்னு ஆத்தா மூதவிப்புப் பேசி முடிவு சொன்ன அதே ரவ்வையிலே நான் ஊங்க குடிசையை விட்டுப்புட்டு வெளிக் கிளம்ப வேளை கண்டுக்கிட்டிருந்தேனா? அப்ப வந்தாரு அந்த ஆம்பளை. எங் கையை

லாந்திப் பிடிக்க முனேஞ்சப்ப, நான் உள்ளே பறிஞ்சு வந்தேன்; எங்கையிலே தம்பிக்கோட்டை வீச்சரிவாள் இருந்திச்சு. அதை அவரு கையிலே நீட்டினேன்; இதாலே என்னைக் கண்டதுண்டமாக்கிப் போட்டுப்புட்டு, அப்பாலே எங் கையைப் பிடிண்ணு சொன்னேன்; நான் உங்க சொத்தாகி ரொம்ப காலமாச்சுதின்னும் பொய்ச் சத்தியம் செஞ்சேன். 'பூ,' கசங்கின பூவா?'ண்ணு காறித் துப்பிப்புட்டு நழுவிஞரு செங்கோடன். எங்கவூட்டுச் சொத்தான அந்த அரிவாளைப்பத்தி அடியோட எனக்கு நெனைப்பே அத்துப் போச்சு; அந்தச் செங்கோடன் நாணயமா அதை அனுப்பி வச்சிருக்காரு, தன் பரிசுபோல்!...முரட்டுப் புத்தியும் திருட்டுப் புத்தியும் எப்பத்தான் அந்த ஆம்பிள்ளைக்கு மாறப் போவுதோ?...ஒருவாட்டி செயிலுக்குப் போயும் பாடம் படிச்சுக்கலீங்களே, மச்சான்! பாவம்!'

பவளக்கொடியின் கண்ணீர் பூமாலை தொடுத்தது.

'எம்மேலே அந்த ஆளுக்கு உண்டான வஞ்சனைகூட மாறிப் போச்சுப்போலே, பவளம்!' என்று இறங்கு குரலில் வெளியிட்டான் சோலையப்பன்.

'ம்!' என்று நெடுமூச்செறிந்தாள் பவளம்.

*　　*　　*　　*

ஏழு பொழுது.

பவளக்கொடி வாசலுக்கு வந்தாள்; சிந்தித் சிதறிக் கிடந்த பனங்கறுக்கு மட்டைகளைப் பார்த்தபிறகு, உள்ளே சென்றாள். தம்பிக்கோட்டை வீச்சரிவாளை எடுத்து வந்து மட்டைகளின் 'கறுக்குகளைச் சீவி வீசி, பிறகு, அவற்றைக் கொண்டு 'நார்' திரிக்க வேண்டுமென்பது அவளது உள்ளக் கிடக்கையாகும். மேற்குச் சீமையிலிருந்து நார் வாங்கிக் கொள்முதல் பண்ண நாடார் வண்டிவந்து, சாலைச்சந்தைப் பேட்டையில 'முகாம்' போட்டிருப்பதை அவள் அறியமாட்டாளா, என்ன?

உள்ளே சென்றவள் வெளியே வந்த போழ்தில், பவளக் கொடியுடன் வேதனையும் நெட்டுயிர்ப்பும் துணை சேர்ந்து வந்தன. 'ஆமா, அந்த வீச்சரிவாள் ராத்திரிக்கூட கண்ணுக்கு மெய்ப்பனையாத் தெரிஞ்சிதே?...இப்ப காணலேயே?..அசலூர் போயிருக்கிற மச்சான் நாளைக்கு மடங்கித் திரும்பினடியும் கேட்டாக்க, மலைச்சுப் போயிடுவாகளே?'

பெண்மைச் சத்தியின் கண்டெடுப்புப் பொருளான வீரத்தைத் துணையிருக்கச் செய்துவிட்டு உள்ளே படுத்தாள் பவளக்கொடி. 'மச்சானுக்கு லாவார நோக்கம்தான் ஓசத்தி; கஞ்சிதண்ணி வளியாக் கெடச்சிருக்குமில்ல?. .ம், எங்கே சத்தரம்ணு இம்மா நேரம் விளுந்து கெடக்கும்?... நாளைக்கு வந்ததும் வசமாக் கஞ்சி காச்சி ஊத்தவேணும்!'

இரவு, நிலவின் கால வரம்பு கழிந்த நேரம். இருட்டின் நிறம் அச்சம் விளைத்தது.

பவளக்கொடி இருந்திருந்தாற்போன்று எழுந்து அமர்ந்தாள். கண் இமைக்கும் நேரத்துக்கு முன் அவள் கேட்ட 'அந்தச் சத்தம்' இதயத்தில் எதிரொலித்தது. மாமரக் கதவைத் திறந்துகொண்டு, வாசல் தட்டியை நகர்த்திவிட்டு வெளியே வந்தாள் பவளக்கொடி; 'ஆ!' என்று கூச்சலிட்டாள்! கையிலிருந்த சுவரொட்டி விளக்கு அல்லாடியது!

அங்கே செங்கமலம் நின்றாள். அவளுக்கு எதிரே செங்கோடன் நின்றான். அவன் கையிலிருந்த 'தம்பிக்கோட்டை வீச்சரிவாளின் முனையிலே குருதித் துளிகள் வழிந்தன. செங்கமலம் வலது கையை இடது கையினால் இறுகப் பிடித்துக் கொண்டிருந்தாள். வலது கையின் முழங்கைப் பகுதி அப்படியே வெட்டப்பட்டிருந்தது!

பவளக்கொடி ஒரு கணம் சிலையானாள். காலையில் செங்கமலம் தன் வீட்டை நாடி வந்த நடப்பு நினைவில் குதிர்ந்தது.

'பவளக்கொடி அக்கா, நீ முதலிலே என்னை மன்னிச்சுக்க. உன் வூட்டு இந்த அரிவாளை நானேதான் திருடிக்

கிட்டுப் போயி, இந்த ஆம்பிள்ளை கையிலே குடுத்தேன். இதைக் கொண்டாந்தாத்தான் என்னைக் கண்ணாலம் கட்டிக் கிடுறதாச் சொன்னாரு. நீங்க உங்க மாமன் மகனான இந்த முரட்டு மனுசன் மேலே வச்சிருந்த நல்ல அன்பாலே இவரைத் திருத்திறதுக்கு என் ஒருத்தியாலேதான் ஏலு மின்னு சொல்லி, எப்படியாச்சும் இவரை நான் கட்டிக்கிட வகை பண்ணவேணும்னு கேட்டுக்கிட்டீங்களே, அதுக்காவத் தான் நானும் மனசு ஒப்பினேன். இந்த ஆள் இட்டப்படி உங்க அரிவாளையும் களவாடிப் போய்க் குடுத்தேன். அந்த அரிவாளைக் கேட்ட நோக்கம் எங்க சின்னமாமன் மூலமாக் கிடைச்சிது. அக்கா, உன்னோட நல்ல மனசு புரியாம, உன்னோட அரிவாளைக்கொண்டே உன்னையே சீவிப்பிட இந்தப் போக்கணங் கெட்ட மனுசன் ரோசிச்சிருந்த துப்பும் வந்திச்சு. அதனாலேதான், நான் ஓடியாந்து வாசலிலேயே படுத்துக்கிட்டேன். பழிவாங்க வந்த பதட்டம் அவரோட கண்ணை மறைச்சிது. என் நெனைப்புப்படி என்னையே அந்த ஆளு வெட்டினாரு. ஆனா, கைதான் துண்டுபட்டிச்சு!...” என்று விவரித்தாள் செங்கமலம். ரத்தத் திவலைகளை மிதித்தபடி அவள் புறப்பட்டாள். அவளை மறித்தான் செங்கோடன்.

‘செங்கமலம், என்னை மன்னிச்சிரு. நான் பாவி!’ என்று அலறினான் செங்கோடன்.

செங்கமலம் நிற்கவில்லை.

அடுத்த வினாடி, ‘ஐயோ!’ என்று ஓலம் பரப்பினாள் பவளக்கொடி.

தம்பிக்கோட்டை வீச்சரிவாள் கிடந்தது!

செங்கமலம் நின்றாள்!

செங்கோடனின் வலது கை துண்டு பட்டு விழுந்தது.

‘மச்சான்!’

செங்கோடன் நிதானமான பாவனையுடன் நேரிடைப் பார்வையைச் செலுத்தினான்.

பவளக்கொடி விம்மினாள்.

'பவளம். நீ என்னை மன்னிச்சிடுவே. அதுவே போதும். யாரோ ஒரு ராசா தன் தப்புக்குத் தன் கையை வெட்டிக் கிட்டானும். எனக்கு நம்பிக்கை வராது. இப்ப நம்பு றேன். என்னை நீ மன்னிச்சிரு!...இந்த நொண்டியைக் கட்டிக்கிறதுக்கு அந்த அழகுப் பொண்ணு எப்பிடி ஒப்பும்? நான் போயிட்டு வாரேன்!' என்று கூறிப் புறப்பட்டான் செங்கோடன். விழிநீர் வழி விட்டது.

'மச்சான்!' என்று சொன்னவள் செங்கமலம். அவளு டைய இடது கை, செங்கோடனின் வலது கையைத் தடவிய படி இருந்தது.

# ரத்த வெள்ளம்

புலர்ந்த பொழுதின் கண்களில் மஹேஸ்வரி விழித்தாள். அவளுடைய கண்களில் 'பெட் காப்பி' விழித்தது. மாலை போட்டாற் போன்று கழுத்தைச் சுற்றிக் கிடந்த பட்டுத் துணியைச் செம்மைப்படுத்தியவாறு காப்பியைப் பருகினுள் அவள். ரேடியோவில் ஒலித்த செய்திகளும் அன்றையச் செய்தித்தாளில் படித்த யுத்த நிலவரங்களும் அவளது நெஞ்சத் தளத்தில் அலை மோதியவாறு இருந்தன. எழுந்து நடந்தாள். ஹாலின் ஒரு பகுதியில் இருந்த பீரோவில் பதித்திருந்த கண்ணுடி முன் வந்து நின்ருள். செக்கச் சிவந்த நெற்றியின் மையத்தில் கறுப்புக் கோடுகளாக மயிரிழைகள் சில சுருண்டு கிடந்தன. அவற்றை ஒதுக்கி விட்டாள். மேலாடையை இழுத்து விட்டுக் கொண்டாள். நெற்றிப் பொட்டு வெகு துலாம்பரமாகப் பொலிந்தது.

விண்ணில் பறந்த ஆகாய விமானச் சத்தம் பயங்கரமான ஒலியைக் கிளப்பியது.

அவள் சிந்தனை அப்பொழுது, தரைப்படை அதிகாரியாகப் பணி செய்து கொண்டிருக்கும் தன்னுடைய அன்புத் தமையன் ரமேஷ் பாபுவை நினைவூட்டியது. 'அண்ணு இன்னும் சற்றைக்கெல்லாம் வந்துவிடக் கூடும்' என்ற திட்டமான ஞாபகமே அவளுக்குப் புதிய தெம்பை வரவழைத்துக் கொடுத்திருக்க வேண்டும். சுவரில் பெரிதாகத் தொங்கிய தன் தந்தையின் படத்தை எட்டி நின்று பார்த்துவிட்டு நடந்தாள். ரமானந்தபாபு காலமாகி வருஷங்கள் சில ஆகிவிட்டனவே.

துயரத்தின் சாம்பல் துகள்களைத் தட்டிவிட்டு அவள் குஷன் சோபாவில் அமர்ந்தபோது, தாய் தந்தை இழந்த தனக்கு தன்னுடைய அண்ணனே உயிரும் உலகமுமாகத்

தோன்றி வரும் உண்மையை அவள் வழக்கம் போல எண்ணிஞள்; வழக்கம் போல மகிழ்ந்தாள்; வழக்கம் போலப் பெருமைப்படவும் செய்தாள். செய்தித்தாள் மீண்டும் பார்வையில் விழுந்தது. 'சீனுக்காரனுக்குச் சொல்லிக் கொடுத்த பாடத்தில் பங்கு கேட்டான் பாகிஸ்தான்காரன், பாவம்! பாடம் சொல்லிக் கொடுத்ததை உலக நாடுகள் பூரணமாகப் புரிந்து கொண்டுவிட்டன. ஆனல் இவர்களுக்கு மட்டும் இன்றல்ல, என்றைக்குமே பேராசைப் புத்தி போகாது போலிருக்கிறது. அண்ணன் அடிக்கடி எழுச்சி கொண்டு சூள் உரைக்கிறமாதிரி, நம் பாரதத்தின் மண்ணில் ஒரு துளியைக் கூட அயலான் எடுக்க விடவே மாட்டோம்...' பரம்பரையாக நாட்டுப் பற்றுக்கொண்ட குடும்பத்தைச் சார்ந்த ரத்தம் அதற்கே உரித்தான இயல்புடன் தன்னுள் பேசிக் கொண்டது.

வாசலில் கார் ஒன்று வந்து நின்றது.

எட்டிப் பார்த்தாள் மஹேஸ்வரி. எஸ்...எஸ்...அண்ணுவே தான்!.....அண்ணுவோடு கூட...மற்ருருவர்...யாரவர்...?

ரமேஷ் பாபு மிகுந்த, மலர்ச்சியுடனும் ராணுவ கம்பீரத்துடனும் படி ஏறி வந்து கொண்டிருந்தான். உடன் வந்தவன் இளந்தாடி மீசையுடன் அழகாகத் தோன்றிஞன். ஆகாய விமானப் படைக்குரிய உடுப்புக்கள் மின்னின.

வந்த நண்பனை வரவேற்று அமரச் செய்தான் ரமேஷ் பாபு.

"அண்ணு!" என்று விளித்துக் கொண்டே முத்துச்சுடர் சிந்தச் சிரித்துக் கொண்டே ஓடி வந்த மஹேஸ்வரி, புதிய விருந்தாளியின் இனிய முகத்தைக் கண்டதும், வரவேற்புப் பண்பு துலங்க கைகளைக் கூப்பி "வணக்கம்!" என்று சொன்ஞள்.

வந்தவனும் பதில் வணக்கம் செலுத்திஞன். அவன் ஓரக்கண் அவளை கள்ள விழிப்பார்வை பார்க்கத்தவறவில்லை.

''மஹேஸ்வரி! இவர் என்னுடைய புதிய நண்பர். பெயர் சுந்தர்சிங். பைலட் ஆபீஸராக இருக்கிறார். இப்படிப் பட்ட ஆர்வமிக்க இளைஞர்களால்தான் நம் தாய்த் திருநாட்டின் கௌரவம், மதிப்பு எல்லாம் திக்கெட்டும் முழங்கி வருகின்றன!...இவர்களது தாய் நாட்டுப் பற்றைக் கண்டால் நம் எதிரிகள் அசந்து போய் விடுவார்கள்!''

''ரொம்ப சந்தோஷம்.....நம் நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவர் கடமையும் நேரிய முறையில் செயலாற்றப்பட்டால், அப்புறம் நமக்கென்ன கவலை?'' என்று அவள் பதில் மொழிந்து கொண்டிருக்கையில், ரமேஷ் பாபு தன் தோழனைப் பார்த்து புன்னகை பூத்தவனாக ''எஸ்...ஷி இஸ் மை ஸிஸ்டர்! என் பெற்றோர்கள் எனக்கு வைத்துச் சென்றிருக்கிற விலை மதிக்க முடியாத சொத்து இவள். பெயர் மஹேஸ்வரி!...பி. ஏ. பட்டதாரி,'' என்று அறிமுகத்தை முடித்தான்.

சுந்தர்சிங் ஒயிலுடன் இளந்தாடியைத் தடவி விட்டுக் கொண்டான். மஹேஸ்வரி கொண்டுவந்த டீயை அருந்தினான்; நன்றி தெரிவித்தான். அவனுடைய சிரிப்பும் பேச்சும், பழகுவதற்கேற்ற நல்ல நண்பன் அவன் என்பதை எடுத்துக் காட்டின.

பதன்கோட் முதலிய இடங்களில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய வகையில் எதிரிகளின் ஊடுருவல்கள் நிகழ்ந்து வரும் விவரத்தை எச்சரிக்கை செய்தது ஒலிபரப்பி. பாரதப் பிரதமர் எதிரிகளுக்கும் எதிரிகளின் உளவாளிகளுக்கும் எச்சரிக்கை விடுத்திருந்த பேச்சும் ஒலித்தது.

இரவுப் பொழுது ஊர்ந்தது.

ரமேஷ்பாபு வெளியில் போனவன் வரவில்லை.

அப்போது சுந்தர்சிங் காரில் வந்து இறங்கி உள்ளே நுழைந்தான். மஹேஸ்வரியுடன் வெகு சகஜமாக உரையாடி மகிழ்ந்தான். பேச்சுப் போக்கில், ஒரு நாளாவது ஆகாய விமானத்தில் ஏறிப்பார்த்து, சில நிமிஷங்களேனும்

பிரயாணம் செய்ய வேண்டுமென்பது என் நீண்ட நாளைய ஆசை!'' என்று தன் மனத்தைத் திறந்து காட்டினுள் அவள்.

அதற்கு அவன், ''அதற்கென்ன? நாளைக்கே அதற்கு ஏற்பாடு செய்து விடுகிறேன், மஹேஸ்வரி!'' என்று குதூகலத்துடன் கூறினுன். அப்போதும், அவளது பருவச் செழிப்பின் எழிலை ரகசியமாகப் பருக அவன் தவறவில்லை; அவள் கொடுத்த சாயாவையும் பருகினுன் அவன். நாட்டின் நிலை பற்றி இருவரும் பேசினுர்கள்.

பிறகு அவளிடமிருந்து அவன் விடைபெற்றுப் புறப்பட்ட நேரத்தில் ரமேஷ்பாபு வந்தான். நண்பனிடம் பேசி விட்டு வழியனுப்பி வைத்தான். பிறகு தன் சகோதரியை தனியே அழைத்து ''மஹேஸ்வரி! நீ நாளைக்கே உன் கணவனுடன் வாழ வேண்டிய குமரிப் பெண்; அந்நிய ஆடவர்களுடன் நான் இல்லாத சமயங்களில் பழகுவதை இனி தவிர்த்து விடவேண்டும். இது என் கருத்து. உன்னை நீ விரும்பும் இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விட வேண்டுமென்பதே என்னுடைய பெருங் கவலையாக இருக்கிறது சகோதரி!'' என்று பவ்யமாகத் தெரிவித்தான்.

அதற்குள் அவள் முகம் சலனம் அடைந்தது. என்றுலும் அதைப் பெரிதாக்காமல், எப்போதும் போல சகஜமாகச் சிரித்தபடி, ''இப்படி வேலி கட்டிப் பேசுகிறீர்களே?... வந்தவர் உங்களுக்கும் சிநேகிதர்! அதுபோல எனக்கும் சினேகிதர்.....நட்புக்காகவே நட்புஎன்ற ரீதியில் அவருடன் நீங்கள் இல்லாத சமயத்தில் பேசியது தவறு என்று எனக்குத் தோன்ற வில்லை. படித்த பண்பாடுடைய குடும்பம் நம்முடையது என்பதை நான் பரிபூரணமாக அறிந்தவள் தான் அண்ணு! அதே போல, என்னை நானே காத்துக் கொள்ளவும் தவற மாட்டேன். நம் குடும்பத்தின் பரம்பரைப்பேரையும் புகழையும் காத்து வரவும் தவறமாட்டேன் அண்ணு!'' என்ருள் அவள். பேச்சில் உறுதிதொனித்தது.

அவ்வுறுதியே தனக்குக் கிடைத்த நம்பிக்கையாகக் கொண்டு ஆறுதல் பெற்ற ரமேஷ்பாபு இரவு தங்கையுடன்

உணவு கொண்டான். தமையனின் முகத்தில் நிலவிய அமைதி அவளுக்கு உற்சாகமாக இருந்தது.

அடுத்த நாள் அவசரமாக வந்த அழைப்பின் பேரில் அவன் பணிபுரியும் பிரிவைச் சேர்ந்த அலுவலகத்திற்குக் காலையிலேயே கிளம்பி விட்டான் ரமேஷ்பாபு. பகல் கழிந்து இரவு வந்தது. அப்போது இரவு சரியாக எட்டு மணி. அதுவரையில் ரமேஷ்பாபு வீட்டிற்கு வரவில்லை. மஹேஸ்வரிக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் மட்டும் தனித்து இருந்தாள்.

அப்போது அந்த நேரத்தில் அவளைத் தேடிக் கொண்டு பைலட் ஆபீஸர் சுந்தர்சிங் வந்தான். வழக்கம் போல உபசரிப்பு நடந்தது.

மஹேஸ்வரி எதிர் ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். முதல் நாள் இரவு தன் சகோதரன் தன்னிடம் எச்சரிக்கை விடுத்த உபதேசங்கள் அவள் மனத்தில் மீண்டும் எதிரொலித்தன. 'மற்றவர்கள் எப்படியோ?...இவர் தங்கமானவர்!...ஒரு நிமிஷம் பழகினால் புரியாதா, என்ன?' என்று உள்ளூற நினைத்துக் கொண்டாள்.

பத்துமணிக்கு விமான கூடத்திலிருந்து ஒரு விமானம் புறப்படவிருப்பதாகவும் அதில் அவள் விருப்பப்படி கொஞ்ச நாழிகை பிரயாணம் செய்து பத்து நிமிடத்தில் கீழே இறங்கி விடலாம் என்றும் அவன் சொன்னான்.

அவளுக்கு தன் நீண்ட நாளைய ஓர் ஆவல் நிறைவேறப் போவதில் ரொம்பவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. தன் தமையன் இல்லாத நேரத்தில் எப்படிப் புறப்படுவது? அதுவும் இரவில் என்று சற்றே தயங்கினாள்.

''நீங்கள் புறப்படுங்கள், மஹேஸ்வரி. மிஸ்டர் பாபு என்னுடைய அருயிர்ச் சிநேகிதர். என்னுடன் வருவதை அவர் ஆதரிக்கவே செய்வார். பத்து நிமிடத்தில் நீங்கள் உங்கள் வீட்டுக்குத் திரும்பிவிட முடியும்!'' என்று அமைதிப் படுத்தினான்.

மஹேஸ்வரி அவனுடன் காரில் புறப்பட்டாள்.

விமான கூடத்தில் விமானம் புறப்பட ஆயத்தமாக நின்றது.

மஹேஸ்வரியை விமானத்தின் உள்ளே அழைத்துச் சென்றுன் சுந்தர்சிங்.

மஹேஸ்வரி சுற்றிலும் பார்வையைச் செலுத்திஞள். எங்கும் ராணுவ வீரர்கள் சூழ்ந்திருக்கக் கண்டாள்.

''இங்கே உட்காருங்கள்,'' என்று ஓர் ஆசனத்தைச் சுட்டிஞன் சுந்தர்சிங்.

அவன் உட்கார்ந்து கொண்ட அந்த ஆசனத்தின் தலைப்பில் 'சுந்தர்சிங்' என்ற பெயர் இல்லை. 'அஹமத் அலி' என்றிருந்தது.

மஹேஸ்வரிக்கு வேர்த்தது. மறுபடியும் கூர்ந்து அக் கூட்டத்தைப் பார்த்தாள். அவ்வீரர்களின் முகங்களில் சூதும் சூழ்ச்சியும் விளையாடக் கண்டாள். ''உங்கள் பெயர்— உண்மைப் பெயர் என்ன?'' என்று உரத்த தொனியில் வினவிஞள் அவள்.

''ஏன், சுந்தர்சிங்தான்!'' என்று நகைப்புடன் பதிலிறுத்துவிட்டு, இந்தியாவின் வரைப்படத்தை ஒரு முறை ஆவலுடன் பார்த்தபடியே ஒரு விஞடி தாமதம் செய்யாமல், விமானத்தைக் கிளப்புவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து விசைகளை முடுக்கி விட்டான்.

'இவன் என்னை ஏமாற்றி விட்டான். இவன் நம் எதிரி! பாவி!' என்று ஒரு நொடியில் மஹேஸ்வரிக்குப் புரிந்து விட்டது. வீறு கொண்டாள்; அவளது ரத்தம் துடித்தது. தாய் நாட்டினைக் காக்க வேண்டுமென்ற கடமை யுணர்ச்சியோ அப்பொழுது அவளுக்கு உயிர்ப்பாகத் தோன்றியது. இப்படிப் பட்ட புல்லர்களின் நயவஞ்சகப் போக்குகளுக்கு உடனடியாகச் சாவு மணி அடித்துவிட வேண்டுமென்று எழுச்சி பெற்ருள். மறுபடியும் சுற்றிச் சூழ நோக்கிஞள். எதிரே

இருந்த ஒரு சிறு பெட்டியில் கைத் துப்பாக்கி ஒன்று தென் பட்டது. விரைந்து அதை எடுத்தாள். இமைப் பொழுதில் அவள் கைவிரல்கள் துப்பாக்கியின் குண்டுகள் தீரும்வரை இயக்கிக் கொண்டே இருந்தன. எதிரிகளின் தலைகள் ஒவ் வொன்றாகச் சாய்ந்தன! உயரக் கிளம்பிவிட்ட விமானத்தை ஓட்டிய அந்தப் பாவியை நோக்கிக் கடைசி முறையாகச் சுட் டாள். அவ்வளவுதான்! பொங்கி வழிந்து பரவிக் கிடந்த ரத்த வெள்ளத்தின் மத்தியில், அந்த 'பைலட்' அகமத் அலி சுருண்டான். விமானம் நிலை தப்பி தலைகுப்புற விழுந்தது.

மஹேஸ்வரி மீண்டும் விழி திறந்து பார்த்த தருணத் தில், தான் ராணுவ ஆஸ்பத்திரியில் படுக்கையில் கிடத்தப் பட்டிருப்பதை மெல்ல மெல்ல உணரலானாள். அருகில் ரமேஷ்பாபு நீர் நிரம்பிய கண்களுடன் நின்றிருக்கக் கண் டாள்.

''அண்ணா! உங்கள் தங்கை என்றென்றும் உங்கள் தங் கையாகவே இருந்து கண்களை மூடிக் கொள்ளப் போகிறேன். அண்ணா! அன்று நீங்கள் செய்த எச்சரிக்கை இவ்வளவு தூரம் பயன் தருமென்று நான் நினைக்கவில்லை. தோழன் போல பொய் வேடம் புனைந்து வந்த எதிரியின் இம்முடிவு நம் எதிரி களுக்கு ஒரு பாடமாகவும் ஒரு எச்சரிக்கையாகவும் அமை யட்டும்!...என்னை ஈன்றெடுத்த என்னுடைய அருமை மிகு தாய்த்திரு நாட்டுக்கு கடைசி நேரத்தில் நானும் ஒரு அணி லாக இருந்து துளியளவு பணி செய்ய முடிந்ததே என்ற கடமை நிறைவுடன் நான் விடை பெற்றுக் கொள்கிறேன் 'அண்ணா!' என்று தாழ்ந்த குரலில்—ஓங்கிய உணர்ச்சிப் பெருக்குடன் பேசினாள் மஹேஸ்வரி.

''அம்மா மஹேஸ்வரி! உன்னை என் தங்கையாகப் பெற் றது என் புண்ணியம்! நீ இப்படிப்பட்ட வீரச் செயல் புரியா மல் இருந்திருந்தால், இந்நேரம் நம் எதிரிகள் ராவல்பிண் டியை அடைந்து நம்மவர்களுக்குப் பலத்த சேதங்களை விளை வித்திருப்பார்கள் அம்மா!...சகோதரி! உன்னுடைய தாய் நாட்டுப் பணி தாய்க்குலத்திற்கு ஓர் உதாரணமாகும். உன் னுடைய அற்புதப் பணியைப் பாராட்டி உனக்கு பாரத சக்

கரம் வழங்கியிருக்கிறது நம் அரசாங்கம்! நம் குடும்பத்தின் பெயர் இனி சரித்திரத்தில் வாழும் சகோதரி! நீ என்றென்றும் என்னுடைய பாசமென்னும் நந்தா விளக்கின் அற்புத ஜோதியாவாய்'' என்று போற்றினன் ரமேஷ்பாபு. விருதுச் சக்கரத்தை தங்கையின் மேலங்கியில் செருகினன். அதைப் பார்த்து அனுபவித்துத் தன்னிறைவு பெற்ற கடமையின் பொலிவுடன் அவளுடைய கண்கள் செருகிக் கொண்டன.

தாயின் மணிக்கொடி அந்த வீராங்கனைக்கு அஞ்சலி செலுத்தியது!

# அதோ, தெரு நாய்!

குழந்தை வீரிட்டு அழுதது; அழுகை சப்தம் கேட்டு விழித்தெழுந்த காவேரி மகளுக்குப் பால் கொடுத்துவிட்டுத் திரும்பினாள். உச்சிப் பொழுதாகி யிருந்தது. தன் 'மச்சா'னை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தாள். வேலன் சுரணை தவறிய தூக்கத்தில் கிடந்தான். நாலு நாளாக அடித்த காய்ச்சல் அன்றைக்குத்தான் ஒருமாதிரி தணிந்திருந்தது.

"மரம் வச்சவன் தண்ணி ஊத்தமாட்டானான்னு சும்மா குந்திக்கிட்டு இருந்தாச் சோறு எப்படிக் கிடைக்கும்? நாலு வீடு தேடிப்போனா எந்த மவராசியாச்சும் மனசு இளகிப் பிடிசோறு போடாமலா போயிடுவாக? ஆனா, மச்சானுக்கு உடம்பு காயலா இல்லாட்டி வழக்கம்போலப் பிச்சைக்குப் புறப்பட்டிருக்கலாமே இம்மா நேரத்துக்கு; வயத்துப் பாட்டுக்கும் திறமாக் கிடைச்சிருக்குமே—"

இந்த ரீதியில் அவள் மனத்து எண்ணங்கள் சங்கிலிக் கோர்வை பின்னின.

அவள் பிச்சைக்காரி. வேலன் அவளுடைய கணவன். தம்பதிகளின் வாழ்க்கைச் சுவடு குழந்தை. இந்த மூன்று நபர்களும் வறுமைப் பறையறிவிப்பின் வஞ்சனைக்குள்ளான தரித்திர நாராயணர்கள்; யாரோ சொல்லியிருக்கிறாரே அது மாதிரி அவர்கள் 'தெய்வக் குழந்தைகள்!' ஆம்; சிருஷ்டிச் சிக்கலுக்கு எடுத்துக்காட்டு.

வேலன் கபோதி. வாழ்வின் ஒளி வளர்பிறையாகப் பரிணமிக்க வேண்டிய பருவம்; என்றோ ஒளி கிறுக்கிப் பாய்ந்த மின்னல் அவனது பார்வையைப் பறித்துச் சென்றுவிட்டது. அவன் துடித்துப் போனான்; காவேரி நிலை குலைந்தாள்.

"மச்சான்"

வேலன் திடுக்கிட்டெழுந்தான்.

"புள்ளையைக் கெட்டியமாய்ப் பார்த்துக்கங்க. நான் ஓடிப்போய் ஏதாச்சும் கிடைக்குதான்னு பார்த்துக்கிட்டு வாரேன்" என்று சொல்லி மகளைப் புருஷன் மடியில் பிடிப்பாக வைத்தாள். அதற்குள் என்ன நினைப்போ? தகப்பனிடம் தவழ்ந்த குழந்தைக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு மீண்டும் விரைந்தாள் காவேரி. அவள் தாய்!

ஊர்ச் சத்திரத்தில் ஏழைகளுக்குச் சாதம் வடித்துப் போடுவதாகச் செய்தி காவேரிக்கு எட்டியது. அவ்வளவு தான்; சோறு கிடைக்கப்பெற்ற பஞ்சைபோலக் கவளச் சோற்றுக்கு விழுந்தடித்துக்கொண்டு ஓடினாள்.

பொன் விளைந்த பூமியில் வறுமைத் தாண்டவத்தின் பிரதிநிதிகள் போன்று பந்தி பந்தியாக உட்கார்ந்திருந்த ஏழைபாழைகளுடன் அவளும் ஒருத்தியாகப் போய் அமர்ந்து கொண்டாள்.

பரிமாறுபவன் வரிசைக் கிரமமாகச் சோறு போட்டுக் கொண்டுவந்தான். அதைத் தொடர்ந்து பின்னால் குழம்பும் கறியும். அத்துடன் மேல் பார்வைக்கு ஓர் 'மேஸ்திரி'.

"இன்னிக்கு நரி முகத்திலேதான் முழிச்சிருக்கணும். சாப்பாடு நல்ல வேட்டை. மச்சானுக்கு இது தெரிஞ்சாத் தெகச்சுப் போயிடும்.?" இது அவள் ஆசைக் கனவு.

"ஆனா புள்ளேதான் பாவம் கத்தித் தீர்க்கப்போவுது' என்று வேறு கவலை கொண்டாள்:

காவேரியின் முறை வந்தது. சோறு, கறி, குழம்பு எல்லாம் வாங்கிக்கொண்ட பிறகும் அவள் போகவில்லை. பக்கத்திலிருந்தவர்கள் போய்விட்டார்கள். என்ன தோன்றிற்றோ, "எசமான்" என்று அழைத்தாள்.

"ஐயா, எம் புருஷனுக்குக் கண்ணுகடை தெரியாது சொரமுங்க. அவராலே நடக்க முடியலே. அவருக்கும்

சேத்து இந்தச் சட்டியிலே சோறு—'' என்று மென்று விழுங்கினாள் அவள். இகலோகத்திலே பரலோகப் பரம் பொருளைத் தரிசிக்கக் 'க்யூ' நிற்கும் பக்தன் தன் பிரார்த் தனை ஈடேறக் கருணைபுரிய வேண்டும் என்று யாசிப்பது போலக் காவேரி இரக்கப் பார்வையுடன் மேஸ்திரியைப் பார்த்தாள்.

''சீ, பிச்சைக்கார நாயே! பொய் வேறே சொல்லியா ஆளை ஏமாத்தப் பார்க்கிறே. பாவமாச்சேன்னு பார்த்தாக் காலமில்லே பாரு. உன் கையில் இருக்கிற சோறுகிலும் நிலைக்கணுமின்னு இப்பவே ஓடிடு, இல்லாத போனால்...'' அடியுண்ட நாகம்போலச் சீறினான் அவன். உண்மையைத் தானே காவேரி சொன்னாள்? ஆனால் ஏழை சொல் அம் பலம் ஏறுமா?

ஏழைப்பட்டுக் கோழைப்பட்ட அந்தப் பிச்சைக்காரி 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று கிடைத்த உணவுடன் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். வழியில் மழை வேறு பிடித்துக்கொண்டது. இடியும் மின்னலும் பின்னிப் பிணைந் தன; வெந்த இதயம் வேதனைப்பட்ட நிமித்தம் இயற்கை காட்டிய அனுதாபமா?

அவள் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. ஆசை மச்சானும் அன்பு மகளும் அவளுடைய கனவின் விழிப்பில் மிதந்து சுழன்றனர்.

குளிரில் நடுங்கியவாறு குழந்தையை அணைத்துக் கொண்டு வேலன் நின்றிருந்தான்.

''மச்சான் சோறு கிடைச்சது, பார்த்துக்குங்க. மரத்து ஒண்டலிலே சட்டி இருக்கு, நான் ஓட்டமாகப் போய்த் தண்ணி கொண்டாரேன்'' என்று விரைந்தாள். ஆனால் தண்ணீருடன் திரும்பியதும் காவேரி கண்ட காட்சி புலன்க ளனைத்தையும் ஒடுங்கச் செய்துவிட்டது!

''ஐயையோ! பூராச் சோத்தையும் நாய்க்குட்டி தின்னு முடிச்சுட்டுதே...''

சட்டியைக் காலி செய்த பூரிப்பால் நாய் மெல்ல நகர்ந்தது. அவளுக்கு நாய்மீது ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. காவேரி கீழே கிடந்த 'சுக்கான் கல்' ஒன்றை எடுத்துப் "பாளத்த நாயே, கயிட்டப்பட்டுச் சம்பாதிச்ச சோத்துக்கு எமனுவா வந்தே" என்று ஓலமிட்டுக் கல்லை வீசப் போனுள்.

"காவேரி. எனக்குக் கண்ணு கிடைச்சிட்டதே தெரியாதா?" என்று கூவினுன் வேலன்.

காவேரி, "என்ன? கண்ணுப் பார்வை வந்திருச்சா?" என்ற அதிசயக் கேள்வியுடன் கணவன் சமீபம் ஓடினுள். அவள் கையிலிருந்த பெரிய கல் நழுவிற்று. ஆனல்—! அங்கே அவளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. மச்சானின் கண்கள் முன்போலவே மூடியிருந்தன. மின்வெட்டு அபகரித்துச் சென்ற பார்வை, ஒருசமயம் சற்றுமுன் வெடித்த மின்னலால் திரும்பிவிட்டதோ என்ற சபலம்தான் அவள் ஆசைக்குக் காரணம். கடைசியில்?

வேலன் சிரித்தான்.

குழந்தை 'வீல்' என்று கத்தியது.

காவேரி கண்ணீர் பெருக்கினுள்.

"காவேரி, எம்மேலே ஒனக்கு ரொம்பக் கோவமாங் காட்டியும்? பாவம், அந்த நாய்மேலே எதுக்கு அம்பிட்டு எரிச்சல்? நீ கொண்டாந்த சோறு இப்ப அந்த நாய்க் குட்டிக்குக் கிடைக்கணுமின்னு இருக்கும்போல, அதே சொத்தை நம்ப செல்லக்கண்ணு தின்னிருந்தா, நீ இவ்வளவு கோவப் படுவியாக்கும்."

சற்றும் சலனமற்றுப் பேசிக்கொண்டே போன கணவனது புது வேதாந்தமும், வக்கணையும் அவளுக்குப் புதிராகப் பட்டன. வாழ்க்கையே ஒரு புதிர்தானே!

அவள் மறுபடியும் பிச்சைக்குப் புறப்பட்டாள்; இல்லையென்ருல் மச்சானுக்குச் சாப்பாட்டுக்கு வழி?

''எலே காவேரிப் பொண்ணு''

அவள் திரும்பினாள்.

''காவேரி, நம்ப பாக்கியந்தானே இன்னிக்கு நம்ப புள்ளே உசிரு தப்பிச்சுது. நீ போனதும் மகளைப் படுக்க வச்சிட்டு நானும் படுத்தேன். இது என்னடான்னு தவழ்ந்து அது போக்கிலே வீதி முக்கத்துக்குப் போயிருச்சாம். காத்து வேறே பிச்சு அடிச்சதில்லே அந்தச் சமயம் திடுமின்னு வேகமாகக் காரை ஓட்டியாந்த ஐயாவுக்கு, நம்ப கண்ணு குறுக்கே கிடந்தது கண்ணிலே தட்டுபட்டிருக்கு. சடக்கின்னு காரை நிப்பாட்டிப் புள்ளையைத் தூக்கிட்டாராம். அப்பத்தான் மகளைத் தடவிப் பார்த்தேன். காணலை பதறிப்போய் வெறிப்பிடிச்சவன் கணக்காகத் தட்டுத்தடுமாறி நடந்தேன். உன் குழந்தையான்னு கேட்டு மகளைக் கொடுத்தாரு அந்த மவராசன். நான் கதறினதைக் கண்டு முதலாளி போலே...நானு என்னத்தைக் கண்டேன்... அவரு ரொம்ப இரக்கப்பட்டாரு. ஆனா, பாவம் அவருக்கு ஒரு குஞ்சு குட்டி இல்லாதது ஒண்டிதான் பெருங்கவலை. கடைசியாக் கோயில் பட்டைச் சோறு, வடை ஒவ்வொண்ணைப் பேரு சொல்லித் தந்தாரு. இந்தமட்டும் மக தப்பினது நம்ப புண்ணியந்தானே? அந்தச் சந்தோசத்திலே எனக்குக் கண்ணு கிடச்சுட்டுதுன்னு சத்தம் போட்டேன். நம்ப கண்ணுப்பொண்ணைக் காட்டிலுமா எனக்கு என் கண்ணுப் பார்வை உசத்தி? இன்னிக்கு நமக்கு அளந்தபடி இம்பிட்டுத்தான். பாவம் அந்தத் தெரு நாய்...!'' என்று வேலன் உணர்ச்சி வசப்பட்டவனாகக் கூறினான்.

முள் முனையில் ஊசலாடிய காவேரியின் தாய் மனம் அப்போதே நிம்மதி பெற்றது. தன் மகளை அப்படியே வாரியெடுத்து உச்சி மோந்தாள். உடனே காவேரியின் நீர் மண்டிய விழிகள், சற்றுமுன் தன் கல்லுக்குப் பலியாகிவிட இருந்த அந்த நாய்க்குட்டியை இரக்கத்துடன் துழாவித் தேட ஆரம்பித்தன!

# தேடி வந்த தெய்வம்

"அக்கா!" என்று கூப்பிப்பிட்டுக் கொண்டு வந்தாள் கமலா. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த நான் மெல்ல ஏறிட்டுப் பார்த்தேன். என் கண்களிலிருந்த நீர்த்திரை மறையவில்லை.

தொடர்ந்த இருமல் வந்து விட்டது. என் மெல்லிய உடலெல்லாம் தாளாத நோவு.

நான் கமலாவுக்குச் சொந்த அக்காளல்ல; ஆனாலும் நாங்கள் இருவரும் பழகிய முறை அப்படிப்பட்ட 'அக்கா—தங்கை' பாந்தவ்யத்தை எங்களிடையே வித்திட்டிருந்தது. இப்போதைக்குக் கமலாதான் எனக்கு உடன் பிறந்தாளாகவும், படுத்த படுக்கையாகக் கிடந்த கடந்த நாலுமாதமாக என்னுடன் கூடவே இருந்து பணிவிடை புரியும் உயிர்த் தோழியாகவும்-ஏன் பெற்றவளாகவும், உற்றவளாகவும்-ஆக எல்லாமாகவும் நிறைந்திருக்கிறாள்!..

இரவு மணி பன்னிரெண்டு. எனக்கு வேளைப் பிரகாரம் கொடுக்க வேண்டிய மருந்தைக் குலுக்கினாள்; எனக்குக் குமட்டியது. அவுன்ஸ்கிளாசில் விளக்கு வெளிச்சத்தில் கணக்கிட்டு அளவு மருந்தை ஊற்றி என்னிடம் நீட்டினாள். மருந்தைத் தரையில் கொட்டி விட்டு கிளாசை மேஜை மீது 'டங்' கென்று ஆத்திரத்திரத்துடன் வைத்தேன். அவள் முகத்தில் என் மீது கொண்ட கோபத்தின் விளைவு. அவளுக்கு எதற்குமே உரிமையுண்டு. நான் என்ன செய்யட்டும்? என் நிலை ..இதற்கு விடிவு...!

"அக்கா. என்றுமில்லாமல் ஏன் இப்படி மருந்தைக் கொட்டிவிட்டாய்? மருந்து குடித்து அது உடலில் சார்ந்தால் தானே உன் நோய் ஜல்தியில் குணமாகும்; உடம்பிலும் ரத்தம் ஊறும்."

‘‘என் சீக்குக் குணப்படவா? ஏன்? யாருக்காக? ஆமாம்; என் உடம்பு சீக்கிரமே தேற வேண்டுமென்று அல்லும் பகலும் அனவரதமும் கவலைப்பட்டு உருக்குலைந்து நிலைகுலைந்த, சீர்குலைந்த காலமும் ஒன்று இருந்தது வாஸ்தவம்தான். அது அன்று! என்றோ ஓர் நாள். ஆனால் இன்றல்ல; இனி என்றுமே இல்லை. இனி என் தேகம் சுகமடைய வேண்டவே வேண்டாம். சுகப்பட்டு, என் கண்முன் என் வீட்டில் என்னைக் கைப்பிடித்தவர் இன்னொருத்தியுடன் நடத்தப் போகும் காதல் நாடகத்தை இந்த ஜன்மத்தில் இந்தக் கண்களால் நான் பார்த்துக் கொண்டிருக்கவா? ஊஹூம்; ஒருக்காலும் மாட்டேன். அதற்குள் என் உயிர் உடலைவிட்டுப் பிரிந்துவிடும். மங்களம் என்று எனக்கு எந்த வேளையில் பெயர் வைத்தார்களோ என் வாழ்வு அமங்களமாக முடியப் போகிறது!’’ என்று பித்துப்பிடித்தவளைப் போலக் கத்தினேன்.

மறுபடியும் இருமல் வந்து விட்டது. ரத்தமும் சளியுமாகத் தட்டு நிரம்பியது. இருமிய வேதனை கண்ணீருக்கு வழிவகுத்தது. ஐயோ..! தலையணையில் சாய்ந்து கொண்டேன். கமலாவைப் பார்த்தேன். அவள் கண்களில் கண்ணீரைக் கண்டேன். ‘‘அக்கா’’ என்று என்னை அப்படியே கட்டிக் கொண்டு என் தலையை மிருதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

இரவு வளர்ந்தது; பிறை நிலா விண்ணில் சிலம்பம் பழகிக் கொண்டிருந்தது. மின்னும் நட்சத்திரங்களுடன். ஊதல் காற்று வேறு..

‘‘கமலம்!’’

‘‘அக்கா’’

‘‘பார்த்தாயா, இன்னும் ‘அவர்’ வீட்டுக்கு வரவில்லை. கொண்ட மனைவி குலை உயிராக காய்ச்சலில் எமனுடன் போராடிக் கொண்டு சாகக் கிடக்கிறாளே என்ற கவலை துளியாவது அவருக்கு இருந்தால் இப்படி அவர் வீட்டை மறந்து என்னையே மறந்து இருப்பாரா...?’’

"உன் வீட்டுக்காரரர் வரமாட்டார் என்றுதான் தோன்றுகிறது; அக்கா!"

"இன்றைக்கா? அல்லது என்றுமேயா?"

"வீணாக ஒன்றை ஒன்பதாகப் பெருக்கி உடலைப் போட்டு அலட்டிக் கொள்ளாதே, அக்கா. வேளை கெட்ட வேளையில் இப்படிப்பட்ட மன வேதனை கூடவே கூடாது என்று டாக்டர் சொன்னதை மறந்து விடுகிறாயே...! இன்று தான் அக்கா, அவர் வரமாட்டார். பட்டணத்துக்குப் புறப்பட்டாராம் உன் கணவர். என் அப்பா பார்த்தாராம்; சொன்னார். நாளை, மறுநாள் வந்து விடலாம்..."

என்மேனி முழுமையும் மின்னொளி பாய்ந்தது: பதை பதைத்தேன். என் கணவர் பட்டணத்துக்கு என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் போனதைப் பற்றிக்கூட மனசை அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால். இரண்டு நாள் முந்தி, அவர் செய்த சபதம்தான் என்னைத் தூண்டிலிட்டு இழுத்து வேதனைப் படுத்தியது. உயிர் விளிம்பில் தொட்டும் தொடாமலும் என் உடம்பு உறவாடிக் கிடந்தது. எவ்வளவு அபாக்கியவதி இந்த அபலை...!

மலைக்கோட்டை மணி நடுநிசியில் இரண்டு முறை ஒலித்து முடங்கியது.

'இவர் பட்டணம் போயிருக்கிறார். ஆம், அவர் சபதத்தை நிறைவேற்றப் பட்டணம் போய்விட்டார். ஆண் பிள்ளை அவர். நானோ பெண்; பேதைப் பெண்..'

என் உள்மனம் நினைவுச் சரத்தைத் தொடுத்துக் கொண்டே போயிற்று. மனத்திற்கு ஓய்வு ஏது? ஒழிவு ஏது? சலனம், சலனம்தான் போலும். சலனம் என்றால் சாந்திக்கு வழி இராதா?

கீறல் பட்ட இசைத்தட்டு ஒலிப்பதிவைத் திரும்பத் திரும்ப ஒப்புவிக்குமல்லவா? அதே போல அந்தச் சம்பவம் என் நினைவில் தொப்பென்று குதித்து நின்றது.

'மங்களத்துக்கென்ன, அவளைப் பார்த்து விட்டால் அவள் அழகில் சொக்கிப் போகாமல் எந்த மாப்பிள்ளையும் தப்ப முடியாது!'

என்றே ஓர் தினம், என் திருமணத்தின் முன் என் பெற்றோர்கள் எனது கல்யாணம் பற்றி இப்படி விமரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். அது நினைவுக்கு வருகிறது. நிஜமாகவே நான் அப்போதெல்லாம் அழகின் உருவாகத் தான் திகழ்ந்து கொண்டிருந்தேன். அது ஒரு காலம்; இன்பப் பொழுது அது. அப்போதுதான் என்னை சேகரன் வலைவீசிப் பிடித்தார். என் அழகு அவரைக் கொள்ளை கொண்டதாம். எனக்கும் அவரைப் பிடித்துவிட்டது. கண்நிறைந்திருந்தார். பி. ஏ. நடுத்தரக் குடும்பத்தினர். தேடிப்போன மூலிகையாக பெண்பார்க்கப் போன பயணத்தில் நான் சிக்கினேனாம்; வலை தானாகவே விரிக்கப்பட்டதாம். கண்ணி வைத்து விசிறிப் பிடித்துக் கொண்ட வெற்றியில் எனக்குக் கூடப் பங்கு உண்டாம். ஏனென்றால் நான் அவரின் மறுபாதியாம்-- இதை யெல்லாம் நினைத்துக் கொண்டால் இப்போது அழுகை முட்டி வருகிறது. அந்த என் உயிர்த்துணைவர்தானா இன்று என்னை இப்படி வெறுத்து ஒதுக்கி விட்டார்? கால மலரின் இரண்டு இதழ்கள் உதிர்வதற்குள்ளாகவே மலர் வாடி விடுவதா, என்ன?

என்னவோ தோன்றியது: திரும்பினேன்; பார்த்தேன். வீட்டின் முன்பகுதித் தோட்டத்தில் அப்போது தான் முகையவிழ்ந்திருந்த மலரின் மதுவை உண்டு திளைத்துவிட்டு, மற்றொரு மலருக்குத் தாவியோடிக் கொண்டிருந்தது வண்டொன்று.

வண்டு! எண்ணினேன். என் பதி தோன்றினார். முதல் மலரைப்பற்றி நினைத்தேன். என் நிலை நினைவில் கிளை விட்டது. சந்தர்ப்பங்கள் எப்படி எப்படி யெல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் கருக்கொண்டு விடுகின்றன?

காபியும் கையுமாக கமலா என் சமீபம் வந்தாள். நான் அழுது கொண்டிருந்ததைக் கண்டு விட்டாள். நான் கண்

ணீரைத் துடைத்துக்கொண்டேன். கடவுள் போல அவள் மட்டும் கடந்த நாலு மாதமாக என்னுடன் இல்லையென்ருல்...என்ருே பிறந்த நட்பு-அவளுக்குத்தான் நான் என்ருல் எவ்வளவு பிரியம்...! என்றென்றும் அவளுக்குக் கடமைப் பட்டவள் நான்.

ஆனுல் என்றென்றும் என்னுடன் உயிருக்குயிராக இருக்க வேண்டிய, இருக்கக் கடமைப்பட்ட, இருப்பதாக அக்கினி சாட்சியாக உறுதி சொல்லி என் கைத்தலம் பற்றிய என் புருஷன்— அவர் நிலை, தற்போதையப் போக்கு, அவர் ஆசை, முடிவு, எல்லாவற்றையும் விட அன்று என்னிடம் வீருப்புடன் போட்ட அந்தச் சபதம்...! அம்மம்மா! ஐயையோ...! பெண்ணுகப் பிறந்தாலே எந்நாளும் துயர் தாஞே என்பதற்கு நான் ஒருத்திதான் எங்கள் வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதியாகி இருப்பேஞே? மங்கையராகப் பிறந்திட மாதவம் செய்திட வேண்டுமம்மா என்று எங்கள் பெருமையைப் பாடிய கவிமணியின் திருவாக்குக்கு நானும் பெருமை பூணும் பாக்கியம் பெற்றிருக்கப்படாதா? தெய்வமே!

சபதம்!

சபதமா அது?

அன்று உண்டு முடித்துப் படுத்தவள்தான். ஆனுல் மறுநாள் உடம்பில் காய்ச்சல் கண்டது: காய்ச்சலும் சாதாரணக் காய்ச்சலாக இல்லை. 'டபிள் நிமோனியா' வேளைக்கு வேளை மருந்துக்கு மருந்து ஊசிக்கு ஊசி அவர் பணத்தை தண்ணீராகத்தான் செலவழித்தார். ஆபீஸில் கொடுத்த சம்பளப் பணம் டாக்டரிடம் கைமாறியது. வீட்டிலிருந்து தூது சென்ற தந்தியின் பலனுக அவருக்கு 'பாங்க் டிராப்ட், ரூபாய் ஐநூறுக்கு வந்தது. பணம் வந்த மாயம் அறிந்து தாஞே என்னவோ, என் ஜுரமும் விஷமாக ஏறியது. நாட்கள் மாதங்களாயின. காய்ச்சல் முறைதவருமல் என்னைப் பற்றிக் கொண்டது. ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாயையும், என் கணவரின் அயராத உடல் உழைப்பையும், இடை

வெளியாக ஓடிச் சென்று விட்ட மூன்று மாதங்களையும் விழுங்கி விட்டு 'ஏனோ தானோ' வென்று என் உயிர்மட்டும் உடலில் ஒட்டிக் கொண்டிருந்தது.

உலகத்தை அன்று தான் நான் திரும்பிப்பார்த்தேன். பலபல நாட்களுக்குப் பின்-பலபல யுகயுகாந்திரங்களுக்குப் பிறகு, அன்றுதான் முதன்முதலாக பார்ப்பதுபோல என் துணைவரை மலர விழித்துப் பார்த்தேன், ஆசையுடன். ஆசைக் கனவுகளுடன்-புனர்வாழ்வு பெற்ற பூரிப்புடன்-புதுவெள்ளத்தின் மிதப்புடன். ஆனால்—இத்தனைக்கும் என் உரிமையாளர் பதிலுக்கு ஒரு புன்னகை இழையைக்கூட உதிர்க்கவில்லை. அவர் முகம் வெறுப்பின் கோளமாகக் காணப்பட்டது. அந்தக் கோளத்தின் உருண்டை வடிவிலே எதிர்பாராத,ஏமாற்றத்தை என் பதியிடம் வெறுப்பு விரக்தி ஈடுபாடிழந்த போக்கு, பெரியதொரு துன்பப் பிளவு ஆகியவைகளின் உருவங்களிலே கண்டேன் நான்! உலகம் நிலை பெயர்ந்து அதில் நான் வீழ்ந்தழிந்து விட்டமாதிரி துடித்துப்போனேன். அதுவேதான் என் தாம்பத்தியத்தின் திரும்பு முனையாக அமையுமென்று அன்று நான் என்ன கண்டேன் பேதை?

நான் ஒருத்தி இருப்பதையே மறந்து விட்டார். அப்படித் தான் சொல்லின அவரது அன்றாட நடவடிக்கைகள். இல்லையென்றால், செத்துப்பிழைத்த மனைவியிடம் ஆசைக்கு, ஆறுதலுக்கு ஒரே ஒருதேறுதல் வார்த்தைகூடவா அவருக்குப் பஞ்சமாகி விட்டது? என் கணவர் என் முன் புதிராகத்தான் தோன்றினர். என் வாழ்வின் உயிர்ப்பேய் அப்பொழுது புதிராகத்தானே இபங்கியது..? ஆனால் என் விதி...! இல்லையென்றால் எப்படி அன்றைக்கு நான் அவரிடம் அந்தச் சபதத்தைக் கூறியிருக்க முடியும்...?

ஏதோ ஓர் தெம்பு ஊறுயது; மெவறு கனன்றது; நான் என் கணவரின் தனியறைக்குப் போனேன். அவர் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். நான் வந்ததை அவர் அறிவார்; அறிந்தார். என்னை அவர் முகங்கொடுத்துப் பார்க்கக்கூட இல்லை. எனக்கு நாத் துடித்தது.

''...உங்களை ஒன்று கேட்க வேண்டுமென்று ரொம்ப நாளாக யோசித்துக் கொண்டிருந்தேன். உங்களிடம் ஏதோ ஒரு பெரிய மாறுதலை நான் இப்போதெல்லாம் காணுகிறேன். ஏன் அப்படி?'' என்றேன் துயரம் சுருதி சேர்ந்த குரலில்.

''..நானும் உன்னிடம் சொல்ல வேண்டுமென்றுதான் இருந்தேன். நீ முந்திவிட்டாய்..நான் விரைவில் வேறொரு கலியாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்...'' என்று ஒரு பெரிய இடியை என் தலையில் அலக்காகத் தூக்கிப் போட்டார்.

செந்தழலில் நான் வெந்தேன்; இறவாமல் இறந்து கொண்டிருந்தேன்.

''வேறொரு திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா? நான் உயிருடன் இருக்கும்போதா? என் உயிர் உடலில் இருக்குமட்டும் மற்றொருத்திக்கு ஒருநாளும் இந்த மங்களம் உரிமையை விட்டுக்கொடுக்கமாட்டாள் என்பதை மறவாதீர்கள்...'' என்று அலறினேன்.

''உரிமையா? யார் உரிமை? அது யார் கொடுத்த உரிமை? நீ இனி என்றுமே என் ஆசை மனைவியாகப் பள்ளியறை நாட முடியாது...உன் கண் முன்னுலேயே அடுத்த மாசம் நான் வேறொரு திருமணம் செய்து கொள்ளுகிறேன். நன்ருகப் பார், என் சபதம் நிறைவேறுவதை!'' என்று வெறியுடன் முழங்கினுர் அவர்.

''சபதமா செய்கிறீர்கள்? அப்படி உங்கள் கல்யாணம் நடந்தால், அது என் சாவின் அஸ்திவாரத்தில்தான் நடக்குமென்கிறதை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்...'' என்று பதில் சபதம் போட்டுவிட்டு நான் ஓடி வந்து படுக்கையில் விழுந்து இரவெல்லாம் அழுது தீர்த்தேன். இப்படிப் பட்ட இரவுகளுக்கு என் வரை கணக்கேது?

பட்டணத்தில் என் கணவரின் முறைப்பெண் ஒருத்தி இருக்கிருளாம். ஆரம்பத்தில் அவளைத்தான் மணப்பதாக இருந்ததாம். ஆனுல் அந்தப் பெண்ணைவிட என் அழகுதான்

அன்று என்னிடம் அவர் அப்படித் தஞ்சமடையச் செய்தது! ஆனால், இன்றோ. .

அவர் அந்தப் பட்டணத்துப் பெண்ணைக் குறிவைத்து, மணம் முடிக்கத்தான் நேற்றுப் பட்டணம் போயிருக்கிறார் போலும்! அவர் சபதம். .ஐயோ...! ஆனால் நான்...என் உரிமை...!

* * *

"மங்களம், நிஜமாகவே உனக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். உன்னை மனைவியாக அடைய நான் பூர்வ ஜென்மத்தில் மிகவும் புண்ணியம் செய்திருக்க வேணும். .!''

ஓர் நாள், உணர்ச்சிக் குமிழ் பறிக்க என் கணவர் கூறிய வார்த்தைகள் இவை என்பதை நான் எப்படி மறப்பேன்?

அன்று என் கணவர் படுத்த படுக்கையாகிப் போனார். மரணப்படுக்கையில் அவரின் உயிர்க்கூடு ஊசலாடியது. அவர் நிலை எனக்குப் பயத்தை ஊட்டியது. அழுதேன் மாளாமல்; புலம்பினேன் விடாமல். அம்பிகையின் முன் என் மாங்கல்யத்தை வைத்துப் பூஜை பண்ணித் தீபங் காட்டினேன்; தெய்வத்தை வேண்டிக் கொண்டேன்; காணிக்கை பிரார்த்தித்தேன்.

இரவு காலங் கடந்துங்கூட, அவரின் தலைமாட்டில் உட்கார்ந்து, அவரது நெற்றியைத் தடவிவிட்டுக் கொண்டிருந்தேன். அவர் அப்பொழுது சற்றே கண்ணயர்ந்தார். எனக்கும் தூக்கம் சொக்கியது. தூங்கிப்போனேன். தூக்கத்தில் நான், "தெய்வமே, என் மீது கருணை வை, எனக்குத் தாலி பாக்கியத்தை அருள் செய்; என் கணவரின் உடலைச் சீராக்கு தாயே. இல்லையென்றால். .பூவும் மஞ்சளுமாய் முதலில் என்னை உன்னிடம் கூட்டிக்கொள். .என் புருஷன் இல்லையென்றால் என் வாழ்வும் இல்லை. .கடவுளே'' என்று பலவாறு அரற்றிக்கொண்டிருந்தேனும். என்னை எழுப்பிய என்னவர் நான் கூறியதை அப்படியே என்னிடம் ஒப்புவித்ததைக் கேட்கவே, எனக்குப் புல்லரித்தது.

அவர் கண்களில் நீர் வழிய, "மங்களம், நிஜமாக உனக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்; உன்னை மனைவியாக அடைய பூர்வ ஜென்மத்தில் நான் மிகவும் புண்ணியம் செய்திருக்க வேணும்.." என்றார் என்னை நோக்கிய வண்ணம். அந்த என் அதிபர்தானு இன்று இப்படி என்னை விலக்கிவைத்து, வாழாவெட்டியாக்கச் சபதம் போட்டுச் சென்றிருக்கிறார்?

*   *   *

உச்சிப் பொழுது.

கமலா மருந்து கொணர்ந்தாள். கையில் வாங்கியவள் குடிப்பதற்கு யோசித்தேன். அதே சடுதியில் எதிரே நோக்கினேன். ஆ! என் தலை சுழன்றது; நான் சுழன்றேன். எதிரே நின்ற நிலைக்கண்ணுடியில் பிரதிபலித்த என் உருவத்தைப் பார்த்தேன். ரத்தமே அற்றுப்போய், பார்க்கவும் கூசும் முகத்துடன் குச்சி போன்ற வெறும் உயிர்க்கூட்டைத்தான் அப்பொழுது கண்ணுடியில் கண்டேன். அழுகை வெடித்துக் கிளம்பிற்று. ரோஜாவாக இருந்த நான் எப்படி மாறிப் போய்விட்டிருக்கிறேன்..! நான் உண்மையிலேயே மங்களம் தானு...? மது தீர்ந்து வெறுமையுடன் நிற்கும் மலர், தன்னைத் துறந்து வேறு மலருக்குத் தாவிச்செல்லும் வண்டைக் கண்டு பெருமூச்செறிய, அம்மலரைக் கண்டு நான் மனங்கலங்கியதும் நினைவுக்கு வந்தது. அப்பொழுதுதான் எனக்குப் புரிய ஆரம்பித்தது என் கணவரின் மாற்றத்துக்கு—மாற்றம் போதித்த சபதத்துக்குக் காரணம்! என் கணவர் என்னைச் சீந்தாததன் காரணங்களை அப்போதுதான் என் பெண் நெஞ்சம் உணரத் தொடங்கியது. அனைத்துக்கும் காரணம் எனது அழகு முழுதும் தேய்ந்தழிந்து போனதுதான்..! இதைத் திரும்பவும் மனசில் நினைக்கும் போதில், என் ஆவி பிரிந்துவிட்டால் போதுமென்றிருக்கிறதே..! அந்தோ..!

*   *   *

அந்தக் கதை! கையில் பிரித்து வைத்திருந்த அந்தக் கதை என் நெஞ்சலைகளைப் புரட்டிவிட்டவாறு என் நினைவின் சுருதியாய் இயங்கிக் கிடந்தது.

வாய்த்த கணவனின் கடைசி ஆசையைப் பூர்த்தி செய்யவேண்டி, வாய்த்த மனைவியே அவனைத் தான் விரும்பியதாசி வீட்டுக்கு இட்டுச் சென்ற நளாயினி கதை அதில் இருந்தது.

கதையை எண்ணினேன்; என் கதையையும் எண்ணினேன்.

அன்று, என் உயிருள்ளமட்டும் என் உரிமையை விட்டுக் கொடுக்க முடியாதென்று அவரிடம் செய்த சபதம் என்னை இப்போது கேலி பண்ணியது. கொண்ட பதியின் இன்பமே தன் இன்பம் என்று கருதிய அந்தப் பெண் தெய்வம் நளாயினியின் கதை என் மனத்தை அரித்தது; சித்திரவதை செய்தது. அந்த நளாயனி மாதிரி நானும் ஓர் பெண் தெய்வமாக ஏன் ஆகக் கூடாது...? மின்னல்; முடிவு! என் மனச்சாட்சியின் வேதனை, என் முடிவில் நிம்மதி கண்டதோ?

"கமலா, கமலா!"

"அக்கா"

"கமலா, இன்றைக்கு ராத்திரி மெயிலுக்கு நான் மெட்ராஸ் போகவேண்டும். என் புருஷனிடம் போய் என் தவறுக்கு மன்னிப்பு வேண்டி, நானே முன் நின்று அவர் விரும்பும் பெண்ணுடன் அவர் கலியாணத்தை முடித்து வைக்கப் போகிறேன். கமலா, ஆச்சரியப்படுகிறாயா? என்னிடம் இனி அவர் என்ன இன்பத்தை எதிர் பார்க்க முடியும் என்று சிந்தித்துப் பார். உனக்கு என் இந்த மாற்றத்தின் காரணம் பதில் கூறும்." என்றேன்.

'பூம்...பூம்!'

வாசலில் டாக்ஸி ஒன்று ஹாரன் கொடுத்து நின்றது. அடுத்த கணம் நான் என் கண்முன் கண்ட காட்சி...! "ஐயோ!" என்று அலறினேன்.

என் உயிர்த் துணைவரை தோளுடன் அணைத்துத் தாங்கிய வாறு டிரைவர் மெல்லப் படுக்கையில் படுக்கவைத்தார். அவரையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த என் இமைகளில் கண்ணீர்க்குளம் சுரந்து வழிந்தது.

அவர் கண்ணைத் திறக்க அரைமணியானது. அப்பொழுது தான் எனக்கு நல்ல மூச்சு வந்தது; உயிர் மீண்டது. ஓடிப் போய் என் தாலியை விளக்கொளியில் புன்னகைத்த தேவி யின் முன் வைத்துக் கும்பிட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு, கணவரிடம் ஓடினேன்.

''மங்களம்...!''

''உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள். நான் இன்று கமலாவுடன் உங்களைப் பார்க்கப் பட்டணம் புறப்பட விருந் தேன். நானே இருந்து உங்களுடைய திருமணத்தை நடத் தத்தான் புறப்பட்டேன். ஆனால் இப்படி உங்களை உடம் பெல்லாம் காயக் கட்டுகளுடன் காண்பேன் என்று கனவில் கூட எண்ணவில்லை நான்...'' என்று விக்கலுக்கும் விம்ம லுக்குமிடையே கூறினேன்.

''மங்களம், நீ என் தேடிவந்த தெய்வம். முன் ஒரு நாள் நான் சாகக் கிடந்தபோது, உன் தாலிப் பலம் தான் என்னைக் காப்பாற்றியது. இன்றும் அப்படித்தான். உன் தாலிதான் என் உயிரை உன்னிடம் மீட்டுச் சேர்த்தது. இல்லையென்றால் நான் கார் விபத்தில் இந்நேரம் செத்திருப் பேன். விபத்தில் அகப்பட்டு அடிபட்ட என்னை ஆஸ்பத் திரியில் சேர்த்து இரண்டு மணி நேரம் கழிந்துதான் எனக்கு நினைவு வந்தது. அங்கு வந்த வயதான கிழவி ஒருத்தி என் நிலைக்கு இரங்கி "பாவம், எந்தப் புண்ணியவதியின் தாலி மகிமையோ பையன் இந்தமட்டும் தப்பிச்சிருக்கிறான். தலைக்கு வந்தது தலைப்பாகையோடே போயிட்டுது..." என்று உணர்ந்து சொன்ன சொற்கள் என் கண்களைத் திறந்துவிட்டன. மங்களம், என் குற்றத்துக்குத் தண்டனை அடைந்துவிட்டேன். இல்லையென்றால், பெண் பார்க்கப் போன வழியில் இப்படி விபத்து நேர்ந்திருக்குமா? மங்களம்

என்னை மன்னித்துவிடு. கடந்த நாட்கள் கண்ணீருடன் கழியட்டும். அடுத்த வாரம் உன்னைப் பட்டணம் கூட்டிப் போகப் போகிறேன், உன்னைப் பழைய என் மங்கள்மாக்க, என் டாக்டர் நண்பர் ஒருவர் உறுதி சொல்லியிருக்கிருர்..''

அவர்—என் கணவர் என் தலைமயிரை அன்புடன் கோதிவிட்டார். இந்த இன்ப ஸ்பரிசம் என் மீது பட்டு எவ்வளவு யுகங்களாகிவிட்டன! முழு உரிமை பூசிய கண்களுடன் என் கணவரை..ஆம்! என் கணவரை ஆனந்தத்துடன் ஆழ்ந்து பார்த்தேன். என் கண்களில் கண்ணீர்; அவர் கண்களில் கண்ணீர். என்னையே நான் மறந்தேன்.

அப்பொழுது 'தபால்' என்ற ஒலி கேட்டது; ஓடினேன். தபால் ஒன்று வந்தது; அது என் துணைவருக்கு. பிரிக்கச் சொன்னுர்; படித்தேன்.

சேகர் அத்தான் அவர்களுக்கு

நீங்கள் என்னை இரண்டாந்தாரமாக மணந்துகொள்ள, என் அப்பாவிடம் பெற்றுவிட்ட உரிமையை அறிந்தேன். உங்களை அடைய நாளெல்லாம் கனவு கண்ட சமயம் ஒன்று இருந்தது மெய். ஆனுல் அவ்வுரிமை அன்றே மங்களம் அக்காளுக்குச் சார்ந்ததாகிவிட்டதே..! ஒரு பெண்ணின் கண்ணீர்த்தளத்தில் வாழ்வைத் தொடங்க எந்த இதயமுள்ள இன்னெரு பெண் இதயமும் சம்மதிக்காது. இன்னெருத்தியின் கூந்தலிலிருந்த பூவை ஒரு பெண் தன் தலையில் சுமந்து கொள்ள விரும்பமாட்டாள்; அதில் பூர்ண மலர்ச்சியும், மணமும் இராது. அப்பாவின் உரிமை இனி உங்கள் வரை செல்லுபடியாகாது. என் மீது உங்களுக்கு உண்மை அன்பிருந்தால், தயவுசெய்து அந்த அன்பு பூராவையும் மங்களம் அக்காளுக்கு அளித்து, அவளுக்கு மறுபிறவி அருளுங்கள். கைப்பிடித்த கணவராகிய உங்கள் கடமை அது. நீங்கள் அவளுக்கு அன்று தெய்வ சாட்சியாகப் பூட்டிய தாலியின் ஆணை அது. அவளது உரிமை அது!

இப்படிக்கு,
லலிதா.''

நான் ஏந்தி நின்ற என் தாலியின் மீது எங்கள் இருவரின் ஆனந்தக் கண்ணீரை அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பித்துக்கொண்டிருந்தோம்!

# இதயம் எனும்

"வணக்கம்!"

"வணக். . .கம்!"

"இந்தாருங்கள், காப்பி!"

"இருக்கட்டும்!"

"ஆறி விடப்போகிறது!"

"நல்லது!"

"ஆறினால் தான் பிடிக்குமா?"

"யார் சொன்னார்கள்?"

"நீங்கள் தான் சற்றுமுன் சொன்னீர்கள்!"

"ஏதோ ஞாபகம். சூட்டில் சுவை காண்பவன் நான்!"

"காப்பி எப்படி?"

"உ. . .ன். . .உங்கள் பெயரைப் போலவே இனிக்கிறது!"

"அப்படியென்றால், என் பெயர் உங்களுக்குத் தெரியுமா?"

"பெயர் தெரியாவிட்டால் என்ன? உங்கள் அழகு தெரிகிறதே, அது போதாதா?. . ."

"என் பெயர் அங்கயற்கண்!"

"நேர்த்தியான பெயர்ப் பொருத்தம்!. . .என் பெயர் சோமசுந்தரம்!. . ."

"நான்மாடக்கூடலிலுள்ள தெய்வத் தம்பதிகள் பெயர் எனக்கு நினைவு வருகிறது!"

''அப்படியா? மகிழ்வு. நல்ல சகுனந்தான்!''

என் பேரில் இவ்வள்வு அன்பும் அக்கறையும் கொண்டிருக்கும் உங்களை நான் பதியாகப் பெறுவதென்ருல், பூர்வ ஜென்மத்தில் நான் மிகவும் பாக்கியம் செய்திருக்க வேண்டும், அத்தான்!''

''நீ சொல்வது மெய்யென்ருல், அந்தப் பாக்கியத்துக்கு உரிமை கோர எனக்கும் அதிர்ஷ்டம் என்றுதானே பொருள்?''

''என்னை வெகுவாக உயர்த்திப் பேசுகிறீர்கள்!''

''நான் உன்னை உயர்த்திப் பேச வேண்டியதில்லை. நீயே உன் எழில் மூலம் உயர்ந்து விட்டாய். உன்னுடைய தூய அழகும் துல்லியமான நேசமும் எழில் விளங்கும் துணிவுமே என்னை உன்பால் மனம் இழக்கச் செய்து விட்டன!''

''பாலும் பழமும் சாப்பிடுங்கள், அத்தான்!''

''இந்த இரட்டை வடச் சங்கிலி உன் மேனிக்கு எத்தனை அந்தமாக இருக்கிறது?. ..ஆஹா. ..!''

''அ. ..த்தான்!''

''. ..கயற் கண். ..ணி!''

''அ. ..த். ..!. ..''

* * * *

''சற்றே பொறுங்கள்; உங்கள் ஷர்ட் காலரைச் சரி பண்ணி விடுகிறேன், அத்தான்!''

''ஒகோ!''

''இந்தாருங்கள், டிபன்!''

''நான்தான் இப்போது மூச்சுப் பிடிக்கச் சாப்பிட்டு விட்டேனே!''

''அது மத்தியானத்துக்காக்கும்!''

''அப்படியா? உண்ட மயக்கம்...!''

''தொண்டருக்கும் உண்டென்று ஆபீசில் கும்பகருண சேவகம் செய்து விடப் போகிறீர்கள்!''

''அப்படியெல்லாம் இருக்க மாட்டேன். அச்சம் தவிர்த்திடுவாய் நீ!''

''ஏதேது?...கவிகளை அனுபவித்து வரப் பழகிய நீங்கள் இனிமேல் கவிகள் எழுத ஆரம்பித்து விடுவீர்கள் போலிருக்கிறதே?''

''ஏன் முடியாது? உன்னைப் போன்ற அழகி பக்கத்தில் இருந்து விட்டால், பக்கத்துக்குப் பக்கம் பாடல்களாக எழுதிக் குவித்துவிட மாட்டேனா?''

''சரி; மணி பத்து அடிக்கிறது!''

ஆல்ரைட்!...சாயங்காலம் ஐந்தரை மணிக்கே வந்து விடுகிறேன் 'சாந்தி'க்குப் போகலாம்!

இன்று மாதக் கடைசியாயிற்றே, அத்தான்?

''திருமகள் என்னை ஆட் கொண்டிருக்கையில், எனக்கு எல்லா நாளுமே முதல் தேதிதான்!

* * * *

''இந்தா சம்பளம்!''

''பூமணம் மூக்கைத் துளைக்கிறதே?''

''இந்தா பொம்மை!.....உனக்குத் துணைக்கு வேண்டுமல்லவா?''

''நீங்கள் பெரிய யூகக்காரர்தான், அத்தான்!''

''அங்கயற் கண்ணே, என்ன நீ சொல்கிறாய்?''

''இதுபோல இன்னும் நாலைந்து பொம்மைகள் இப்போதிருந்தே வாங்கத் தொடங்குங்கள் என்று சொல்கிறேன்!''

''இப்பொழுது உடம்புக்கு எப்படி இருக்கிறது, கயற் கண்ணி?''

''அசதிதான் தாளமுடியவில்லை, உங்கள் தலைவலி சரி யாய் விட்டதா?''

''ஓ!''

''என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்? நீங்கள் காலை யில் அடுப்படியில் நின்று சமைத்ததை என்னால் நினைக்கக் கூட முடியவில்லையே, அத்தான்?''

''எனக்காக நீ ஆயுள் பூராவும் சமையற்கட்டில் தவ மிருக்கத் தயாராயிருக்கிறாயே?. .போன மாதம் அடகு வைத்த உன்னுடைய கைவளையை மீட்டு வந்து விட்டேன் கயற்கண்!''

''நல்லது! அ...ம். ..மா!''

''கயற்கண்ணி!...கயற்கண்ணி!''

''ஒன்றும் இல்லை. ..வலி எடுத்தது!''

''டாக்டரம்மாவை...''

''இன்னும் நாள் இருக்கிறது!''

''இங்கே பார்!''

''என்ன, மாம்பழமா?...அடடே, கொய்யாப் பழம் வேறா?. ..ஆ! ஆப்பிள்!...''

''எல்லாம் உனக்காக!''

''ஊஹூம், உங்களுக்காக அத்தான். . . . .உங்களுக் காக...!''

* * * *

''அத்தான்!''

''உம். ..!''

"இன்று கிழமை என்ன?"

"வியாழன்!"

"தேதி. . .?"

"இருபத்தாறு!. . ."

"மாதம்...?"

"ஜூலை...!"

"இன்று உங்களது பிறந்த நாள் ஆயிற்றே?"

"நினைவு பெற்றுவிட்டேன், கண்ணே!"

"நீங்கள் எனக்கு எவ்வளவு பரிசுகள் வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள், நான் உங்கள் உடமையான இந்த ஒரு வருஷ காலத்திலே!. . .அதேபோல, நானும் உங்களுக்குப் பிறந்த நாள் பரிசு ஒன்று வாங்கித்தரப் போகிறேன். இன்று மாலை நீங்கள் ஆபீஸ் சென்று திரும்பியவுடன், என் பரிசு உங்களுக்கெனக் காத்திருக்கும். அத்தான்!..."

"அப்படியென்றால், என் பிறந்த நாளின் நினைவால் நானும் உனக்கு ஒரு பரிசில் தருவேன்!"

"நீங்கள் தந்துள்ள இந்த அன்பெனும் வாழ்வுப் பரிசில் ஒன்று போதுமே, அத்தான்!"

பேஷ்!...பேஷ்! இந்தப் பரிசிலையும் நீ வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். அந்தி மாலைப் பொழுது வரட்டுமே, பார்க்கலாம்!"

"உங்கள் இஷ்டம்!"

"அங்கயற்கண், காது லோலாக்குகள் எங்கே?"

"குளிக்கும்போது திருகாணிகள் தளதளவென்றிருந்தன. கழற்றி வைத்திருக்கிறேன்; சற்றுப் பொறுத்துப் போட்டுக் கொள்வேன், அத்தான்!"

''சரி, நேரமாகிறது. நான் அலுவலுக்குப் போக வேண்டும்!''

''பாயஸம் தயாராகி விட்டால், இலை போட வேண்டியதுதான்!''

''பாயஸமா?...''

* * * *

''மிஸ்டர் சோமசுந்தரன், உங்களுக்கு 'போன்கால்...!'

''ஆமாம், நான்தான்!...என்ன, அங்கயற்கண்ணியை கஸ்தூரிபாய் ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறீர்களா?...சரி; இதோ, புறப்படுகிறேன், ஸார். உங்கள் அன்புக்கு மெத்த நன்றி!''

* * * *

''தம்பி, பதட்டப்படாதே, அநேகமாக, இன்று அல்லது நாளை சுகப் பிரசவம் ஆகிவிடுமாம்!...நிதானமாகப் போய்ப் பார். உன்னுடைய பிறந்த நாள் பரிசாக உன்னிடம் இந்த ஸில்க் ஷர்ட்டை கொடுக்கச் சொன்னது அங்கயற்கண்!...''

* * * *

''ஆண் குழந்தை, ஸார்!''

* * * *

''கண்ணே! இந்தப் பட்டுப் புடவை உனக்கு!...என் பிறந்த நாளின் நினைவுக்கு ஓர் அடையாளம் வேண்டாமா?...''

''வேண்டும், அத்தான், வேண்டும்!''

''ஏய்...ராஜா...ராஜா!...சிரிடா...சிரி!...ஏ...!''

''ஐய, எனக்குக் கூச்சமாயிருக்கிறது அத்தான்!''...நாளு உங்கள் குழந்தை...?...''

* * * *

"நமஸ்தே, அம்மா!..."

"வாருங்கள், சேட்!"

"வணக்கம், ஐயா!"

"வாருங்கள்...வாருங்கள்!"

"அம்மா, இந்த டோலக்குகள் இரண்டும் உன்னுடையது. மறந்திருக்க முடியாது. ஒன்று நீ அடகு வைத்தது. உன் புருஷனுக்குப் பிறந்த நாள் பரிசு வாங்கவே இப்படிச் செய்தாய். உன்னுடைய இரண்டாவது லோலக்கை உன் கணவர் என்னிடம் வைத்தார். நீ ஆஸ்பத்திரியிலிருந்து திரும்புவதற்குள்ளே இதைத் திருப்பிக் கொண்டுவிடலா மென்கிற எண்ணம். உனக்கு ஒரு பதில் பரிசு கொடுக்கவே இந்தத் திட்டம். உன்னுடைய அன்பே உங்கள் இருவரையும் மீறிய நிலையில் பாகப் பிரிவினை பெற்று, இருவேறு கால்வாய்களாக ஓடி, இப்போது சங்கமமாகியிருக்கிறது."

"நான் மொழியாலும், இனத்தாலும் பிறந்த நாட்டாலும் தமிழர்களாகிய உங்களிலிருந்து பிரிந்து, அந்நியமாகத் தோன்றினாலும், பாசத்துக்கோ-மனிதத் தன்மைக்கோ எவ்விதமான வித்தியாசமும் கற்பிப்பதற்கில்லை! எனக்கும் பிள்ளைகுட்டி உண்டு. பாசத்தைப் பற்றிப் புரியும்; தமிழ்ப் பண்பையும் அறிந்திருப்பவன்!...புருஷன்-பெண்சாதியாகிய உங்களுடைய தனித்தனி மனசையும் நான் ரொம்பவும் புரிந்து கொண்டேன். உங்களுக்கு நான் தந்த பணத்துக்கு ஈடு வேண்டாம். அன்புக்கு ஈடு கிடைக்குமோ?...மிஸ்டர் சோமசுந்தர்!...உங்கள் தேவைக்கு மிஞ்சிப் பணம் இருக்கையில், கொண்டு வாருங்கள். நான் இப்போது வியாபாரியாகவரவில்லை. இதுவே என் ஆறுதலை உயிர் வாழ வைக்கக் கூடியது!..."

# நல்ல மூச்சு

"தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் காற்றாகப் பறந்துகொண்டிருந்தது; அதைவிட இன்னும் வேகமாகப் பறந்துகொண்டிருந்தது ராமசேகரனின் நெஞ்சம்; சென்னையிலிருந்து அறந்தாங்கியில் அப்படியே 'தொபுகடீர்' என்று குதித்துவிட ஆசைப்பட்டான். ஆனால் இன்னும் அவன் ரயிலில்தான் பறந்து கொண்டிருக்க வேண்டி வந்தது. பெரிய ஸ்டேஷன் ஒன்றில் ரயில் நின்றது. அவன் கண்களை நித்திரையிலிருந்து எழுவது போலப் 'படக்'கென்று திறந்தான். பார்வை தெரியவில்லை. கண்ணீர் வெள்ளம் மறைத்தது. டவலை எடுத்துத் துடைக்கப் போனான்; டவல் தெப்பமாக நனைந்தது. கம்பார்ட்மெண்ட் கதவண்டை சென்றான்.

"ஸார் கொஞ்சம் வழி" என்ற குரல் அவனை நகர வைத்தது. யாரோ ஓர் இளைஞன் பூட்ஸ் சத்தம் கணீரென்று ஒலிக்கக் கீழே குதித்தான். அவன் மனம் அதிர்ந்தது.

"பாலு.."

"அப்பா..."

"இப்படி இனி நீ குதிக்கப்படாது..தெரிஞ்சுதா.."

"ஆகட்டும்..நீங்கள் அப்படி இருங்கள்.:உங்களுக்குக் காபி வாங்கிவறேன்.."

"டேய்..அத்தோடு உன் பெண்டாட்டியை மறந்துடாதே...ஜானகிக்கும் சேர்த்து வாங்கிண்டு வந்துடு..."

பெஞ்சியில் அமர்ந்திருந்த கிழவர், அந்த இளைஞன், அவன் மனைவி மூவருமாகக் காபி சாப்பிட்ட மகிழ்ச்சியுடன் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ரயில் புறப்பட்டது. செங்கல்பட்டு ஸ்டேஷன் கண்ணுக்குத் தள்ளி ஒதுங்கி விட்டது. பெட்டியின் வழிக் கதவைச் சாத்திவிட்டு, அதன் மீது சாய்ந்து கொண்டிருந்தான் ராமசேகரன். வெளியே காய்ந்த நிலவில்—வீசிய தென்றலில்கூட அவனுக்கிருந்த நெஞ்சின் பளுவும் தலைக் கனமும் ரவை கூடக் குறையக் காணோம். பெஞ்சியை ஒட்டியிருந்த பலகை இடுக்கில் அவன் பார்வைக்குச் சரியாக அந்தக் கிழவரின் உருவம் பளிச்சென்று தெரிந்தது. அவனுக்கு மறுபடியும் அழுகையும் ஆத்திரமும் முட்டிக் கொண்டு வந்தன. 'அப்பா' என்றான் தன்னை மறந்து. அவன் அப்பா தோன்றினார். அவனுக்கு நெஞ்சு நடுங்கியது. சட்டைப் பையிலிருந்த அந்தக் கார்டைப் பிரித்தெடுத்தான். தந்தையின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் உடனே வருமாறும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

இமயமலையே தலையில் சுமத்திவிட்டாற் போலிருந்தது அவனுக்கு. டவலினால் முகத்தைத் துடைத்துக்கொண்டான். விடு விடு என்று நடந்து மேலே 'பெர்த்'தில் துண்டை விரித்துப் போட்டான். மூன்றுமவர் தன் முகத்தைப் பார்க்காத அளவுக்கு முகத்தை ஒருக்களித்துக் கொண்டு படுத்துக் கொண்டான். அவ்வளவுதான்; உறக்கம் கொள்ளவில்லை. எப்படி முடியும்?

அடுத்த நாள் ராமசேகரன் தந்தையைப் பார்த்த போதுதான் நல்ல உயிரும் நல்ல மூச்சும் வந்தது!

* * * *

"அப்பா.."

"வந்திட்டியா ராஜா!"

"எப்படி அப்பா இருக்கு உடம்புக்கு..?"

''உன்னைப் பார்த்ததும் பூரா சொஸ்தப்பட்டாப்பிலே இருக்குது, ராமு.''

''அப்பா..''

''தம்பி..''

ராமலிங்கம் சிறு குழந்தை போல விசித்து விசித்து அழுதார்; அவர் கை விரல்கள் மகனின் முகத்திலும் நெற்றியிலும் இழைழயோடிக் கிடந்தன. அவற்றில் கண்ணீர் கண்டது.

''ராமு, நீ அழுதியா...?''

''...ஊஹூம்; இல்லே...இல்லே...''

''பொய் சொல்றே...! நீ எனக்குப் பிள்ளையாகப் பிறந்த கேட்டுக்கு உனக்கு நான் இந்த ஐயாயிரம் ரூபாய் கடனை வைத்துவிட்டுப் போகப்போறேனேன்னு நீ அப்படி நெஞ்சு குமுறி அழுகிறியா?... 'சொத்து பத்து அம்மன் சல்லி வேணும்; கடன் கப்பியாச்சும் வைக்காமப் போகப்படாதா நம் அப்பன்'னு நீ ஆத்திரப்படுறியா?...மெய்தான்...! தம்பி...உன் தலைமேலே கடனைச் சுமத்திப்பிட்டுத் திடுதிப்பின்னு இந்தப் படுபாவி கண்ணை மூடப் போறேனேன்னு நானே மனசாலே எண்ணுறப்போ, இப்பவே மூச்சு நின்னுடும் போலிருக்குது...இந்தக் கண்டத்திலிருந்து உன்னைக் காப்பாற்றவழிதான் ஒண்ணும் புலப்படல்லே...ராமு...என்னை நீ மன்னிப்பியா?''

ராமலிங்கம் ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினார்; ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு முறை இருமினார்; வார்த்தைக்கு வார்த்தை துளித்துளிக் கண்ணீர் விட்டார்.

''ஐயோ அப்பா...பேசாதீர்கள் உடம்பை அலட்டிக்கக் கூடாது..சாயந்திரம் டாக்டரை அழைச்சிட்டு வாரேன்... இனியும் நீங்க வாயைத் திறந்தா, அப்புறம் உங்களுக்கு முன்னாடி நான்தான் வாயைப்பிளக்கவேண்டி வந்திடும்... அப்பா! உங்களுக்கு நான் மகனாகப் பிறந்த புண்ணியத்திலே

தானே இந்த மட்டும் நானும் ஒரு மனிதனுக ஆகியிருக்கேன். .உங்கள் உயிரைக் கொடுத்து, என் உயிரை நிலைக்க வைத்தீர்கள். உங்கள் பெற்ற பாசத்துக்கு அடையாளமாக அம்மா உங்கள்கிட்டே உறுதிமொழி வாங்கிக் கொண்டதுக்கு அத்தாட்சியாக என்னை நீங்கள் மணக்கோலத்தில் நிறுத்தினீர்கள்...பி. ஏ. பட்டம் உங்களால்தான் அப்பா வந்தது. .இல்லையென்ருல் இந்த உத்தியோகம் எங்கிருந்து கிடைக்கும்?...இத்தனை பாக்கியமும் உங்களால்தானே அப்பா என்னைத் தேடி வந்தன?. .என் நிமித்தம் நீங்கள் பட்ட கடனுக்கு, ஒரு விதத்தில் நானேதான் அப்பா பொறுப்புடையவனுக ஆகிறேன்...அப்பா...கடன் கடன் என்று நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் மனசு குளிரும்படி, நானும் என் கடமையைச் செய்து முடிக்க கடன் பூராவையும் சீக்கிரம் அடைத்துவிடுகிறேன்...அப்பா, என்னிடம் உழைப்பு இருக்கிறது...பட்டணத்தல் பெரிய பணக்கார நண்பருடன் சேர்ந்து பிஸினஸ் செய்யத் திட்டம்...எண்ணி ஆறு மாசத்துக்குள் கடனைக் கட்டிப்பிடலாம்...நாம் யாருக்கும் எந்தக் கெடுதலும் பண்ணவில்லை. தெய்வம் கருணை செய்வார் அப்பா...'' என்ருன் ராமசேகரன் விம்மலுக்கும் விக்கலுக்கு மிடையில்.

மகனின் முகத்தில் பிரதிபலித்திருந்த உறுதி தந்தைக்கு ஆறுதல் சொன்னது போலும்!...கணப்பொழுது நிம்மதியாக இருந்தார்.

பதுமையாக உட்கார்ந்திருந்தான் ராமசேகரன்..

''அத்தான்.''

அத்தானுக்கு உரியவள் வந்தாள். பட்டணத்தில் குடியும் குடித்தனமுமாகத் தம்பதிகள் இருந்தார்கள். ஒரு வருஷம் கணக்காவதற்குள், மைதிலிக்கு டைபாய்ட் ஜுரம் வந்துவிட்டது. சேதி கேட்டு அவன் அப்பா ஓடோடி வந்து டாக்ஸியில் ஊருக்கே அழைத்துச் சென்று விட்டார். ''பட்டணமாகு என்ன? லண்டனுகு எனக்கென்ன? என் கண்ணுக்கு நேரே வைத்தியம் நடந்தால்தான் என் மனசுக்கு

நிம்மதி...'' என்று சொல்லிவிட்டார் மகனிடம். உடம்பு குணமானது; ஓய்விலிருந்தாள். இப்போது வயதான காலத்தில் தன் தந்தைக்குத் தன் மனைவியின் பணிவிடை பலனளிக்குமே என்று வீட்டோடு விட்டுவைத்திருந்தான் ராமசேகரன்.

''அத்தான், பிரயாணக் கோலத்தைக்கூட இன்னும் மாற்றவில்லையே...மாமாவை நான் கவனிக்கமாட்டேனா? நீங்கள் போய்க் குளியுங்கள். வெந்நீர் இறக்கி வச்சிருக்கேன்...''

''மைதிலி, அப்பாவுக்கு வேளை மருந்தைக் கலக்கிக் கொடு; ஆகாரத்தையும் கொடு. நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன். அப்புறம் உன் உத்தரவுப்படியெல்லாம்...'' என்றான்.

ஆனால் அவனிடம் வழக்கமாகக் காணப்படும் இரண்டு கைவிரல் மோதிரங்கள் ஐந்தும், மைனர் சங்கிலியும் காணப்படவில்லை. அதற்குப் பதிலாகப் பத்து ரூபாய் நோட்டுக் கட்டுகள் இருந்தன.

டாக்டர் வந்து போனார். இஞ்செக்ஷன் ட்யூப்களும் மருந்து பாட்டில்களும் வந்து போயின.

ராமலிங்கம் நினைவு மீண்டிருக்கும் போதெல்லாம், தம்பி...தம்பி..'' என்று மகனை வாய் ஓயாமல் அழைத்தார்; மருமகளையும் கூப்பிட்டார். இருவரையும் ஜோடியாக ஒரு நிமிஷம் பார்த்துக் கொண்டேயிருப்பார்; உடனே அவருக்குக் கண்ணீர் குழகுழக்கும்.

சென்னையிலிருந்து திரும்புகையில், அவன் ரயிலில் கண்ட அந்தக் கிழவரை எண்ணிக்கொள்வான். அவர் மகனுக்கு அன்புடன் கட்டளையிட்ட விவரங்களை நினைத்தபோது, அவருடன் தன் தகப்பனாரையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வான்.

*   *   *   *

ராமசேகரனுக்குக் கண்ணீர் சுரந்தோடியது.

''தம்பி..''

''அப்பா..''

''தம்பி,—இனிமேல் நான் பிழைப்பேன் என்பதில் துளியும் நம்பிக்கையில்லே. உன்னைக் கண்ட சந்தோஷத் திலே ஏதோ கொஞ்சம் தெம்பு ஊறியிருக்குது. அத்தோடே மருமகப்பெண்ணின் சிச்ருஷையின் தெம்பு வேறே..ஆனு நான் சாகறதைப் பற்றியா கவலேப்படுறேன்...? இல்லே! ஆனு, சாகற போது, வீணுக உன் தலேயில் நான் பட்ட ஐயா யிரம் ரூபாய் கடன் சுமையை அல்லவா சுமத்தி விட்டுக் கண்ணே மூடப் போகிறேன் இந்தப்படுபாவி...! நான் சாவதற் குள் கடனேக் கட்டுவதற்கு முடியாமல் போய் விட்டதே என்று நினேக்க நினேக்கத்தான் அனலில் மெழுகாக நெஞ்சு உருகுது...நான் கண்ணே மூடுறதுக்குள்ளே நான்பட்ட கடன் தீரவில்லே யென்ருல், என் நெஞ்சு கொஞ்சமும் வேகவே வேகாதே!''

கண்கள் நீரைப்பெருக்க, தன்னே மறந்த நிலேயில் ராமலிங்கம் பிதற்றிக்கொண்டிருந்தார். கட்டிலே விட்டுப் புரண்டு தரைக்குச் சாயும் நேரத்திற்கு, ''அப்பா!'' என்று ஓடித் தாங்கிக்கொண்டான் ராமசேகரன்.

''ஐயோ! கடன் தொல்லேயே அப்பாவின் உயிருக்கு எமனுகிப் போயிடும் போலிருக்குதே...!''—அவன் இதயம் கொந்தளித்தது.

*　　*　　*　　*

மேஜை மீது பரப்பிக்கிடந்த கடிதங்களேப் பார்த் தான். எல்லாம் ராமசேகரிடமிருந்து அவனுடைய நண்பர் களுக்குச் செல்கின்றன. ஒன்றை மட்டும் மறுபடியும் உறை யினின்றும் பிரித்தான்.

''அன்பார்ந்த உயர்திரு சோமநாத் அவர்களுக்கு ராமசேகர் வணக்கம்.

என் எதிர் காலம் உங்கள் அன்பில், பெருந்தன்மையில் ஊசலாடுவதாகச் சொல்லியிருக்கிறேன். சோதனை வந்து விட்டது இப்போது. என் தந்தை, தான் பட்ட ஐயாயிரம் ரூபாய் கடனை என் மீது சுமத்திவிட்டுச் சாக நேரும் போலிருக்கிறதே என்ற வேதனைக் கொந்தளிப்பில் தினமும் ஒவ்வொரு விஞடியும் செத்துக்கொண்டிருக்கிருர். அவர் உயிரை நிம்மதியுடன் பிரியச் செய்யாவிட்டால், மகன் என்ற கடமையை விட்டுத் தவறியவனுவேன்...! அவர் மன நிம்மதியுடன் கடைசி மூச்சைவிட மார்க்கம்...? ஆம்; அது உங்கள் கையில் இருக்கிறது. என் பேரில் நம்பிக்கை வைத்து ஐயாயிரம் ரூபாய் அனுப்புவீர்களாளுல், என் தந்தை உயிருடன் இருக்கும் போதே, நச்சரிக்கும் கடன் காரர்களின் கடனை அடைத்து விடுவேன். அப்பாவுக்கு அப்புறம் கவலையே இல்லை. ஒரு வேளை கடன் தீர்ந்த நிம்மதியில் பிழைத்து எழுந்தாலும் எழுந்து விடுவார்...ஐயா, என் உயிரை, நாணயத்தைத் தங்கள் பாதத்தில் பணயம் வைத்து உங்கள் பணத்தைக் கட்டிவிடுகிறேன்...! கருணைபுரிவீர் களா?...

இப்படிக்கு,
ராமசேகர்.

அன்றைக்கு—

ராமசேகரன் தன் தந்தையின் அறையிலுள்ள பழைய காகிதங்களைப் பிரித்துக்கொண்டிருந்தான். அந்நாளில் பெரிய தொரு 'ஷாப்' வியாபாரம் நடத்திய ஆனந்த மிகுந்த நாட்களுக்கு அவை ஞாபகச் சின்னங்களாகக் கிடந் தன எங்கோ ஓர் இடுக்கில்.

டைரி ஒன்று சிக்கியது.

''என் பால்ய நண்பன் பாலகுருவுக்கு அவனுடைய க்ஷீண நிலையைச் செம்மையாக்கவேண்டி நாலாயிரம் ரூபாய் கடனுகக் கொடுத்திருக்கிறேன் இன்றைக்கு. என் முதல் பணம் அவன் கைக்கு மாறும் வேளையாகிலும் அவனுக்கு

விடிவைக் காட்டவேண்டும். தில்லைவாசி தான் கருணை செய்யவேண்டும். அவனுக்குக் கடன் கொடுத்ததற்குப் பிராமிஸரி நோட்டு எதுவும் இல்லை. தங்கக் கம்பியாயிற்றே என் சிநேகிதன் பாலகுரு...''

குறிப்புடன் அப்பாவிடம் ஓடினன்; செய்தி பற்றி விளக்கம் கோரினன்.

''சேகர், அது எல்லாம் இப்போது பழங்கனவு! என் நண்பன் பாலகுரு தொழில் தொடங்கிய மூன்றும் மாசமே இறந்து போனன். அவனுடைய மகன் இப்போது தொழில் செய்கிருனும்; நல்ல பணக்காரனுகக் கூட ஆகிவிட்டானும். நாம் இப்போது யாரைப் பார்த்து எப்படி நம் பணத்தைக் கேட்பது? பாலகுரு கைப்பட்ட ஆதாரச் சீட்டுக் குறிப்புகூட என்னிடம் கிடையாதே; அவன் என்னிடமிருந்து நாலாயிரம் ரூபாய் கடனுகப் பெற்றுன் என்றுல் இப்போது என்னைக் கண்டு தானே எல்லோரும் சிரிப்பார்கள்...''

இளைஞனின் ஆசைத்துளிர் தோன்றிய சுவடுடனேயே கருகியது!

சற்றுக் கழித்து, யாரோ ஒரு 'பெரிய' மனிதர் வந்தார் பட்ட கடனை வசூலித்துப் போக! தாறு மாறுகப் பேசினர். அவரைத் தனியே அழைத்து ஒரு வழியாகச் சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டான் ராமசேகரன்.

இரவு அவனுக்கு விடியாத இரவு. வேதனைபற்றி எரிந்த விடியாத இரவு!

* * * *

ஐந்தாம் நாள் இருந்திருந்தாற்போல, ராமலிங்கத்திற்கு உடல் நிலை மோசமாகிக் கவலைக்கிடமாயிருந்தது; பேச்சு மூச்சில்லை. கடன் கொடுத்தவர்கள் நான்கு பேர்களும் திண்ணையை விட்டு நகரவேயில்லை. ராமசேகரன் தூண்டில் புழுவாகத் துடித்துப் போனன்.

''தம்பி, சும்மா நீ எங்களுக்குச் சமாதானம் சொல்லிப் புண்ணியமில்லை. உன் அப்பாரு கண்ணை மூடிட்டா, அப்புறம்

எங்கள் கடனை நீ நாணயமாய்க்கட்டிடுவாய் என்கிறதற்கு என்ன நம்பிக்கை இருக்குது? இதோ, உன் அப்பாவின் பேருக்குள்ள பிராமிஸரி நோட்டுக்களை உன் பேருக்கு மாற்றி யிருக்கிறது...ஜாமீனுக்கு ஓர் ஆளைக் கொண்டு வந்து நீ எல்லாவற்றிலும் கையெழுத்துப் போடு...அப்புறம் கோர்ட் இருக்கவே இருக்குது...ம்..."

''ஐயா, தயவு செஞ்சு அப்பாவின் காதுக்குக் கேட்கா மலாவது பேசக்கூடாதா?...இதோ உங்கள் இஷ்டப்படியே நான் கையெழுத்துப் போடுகிறேன்...அப்பாவின் கடனை அடைத்தால்தான் நான் நிம்மதியாகத் தூங்குவேன்; அப்போது தான் நான் நல்ல மூச்சு விடுவேன் என்பதை மாத்திரம் நீங்கள் நினைத்துக் கொள்ளுங்கள்...ஆமாம்!'' என்று குரல் குழம்ப, ராமசேகரன் சொல்லிக்கொண்டிருந் தான்.

அந்தச் சமயம் வாசலில் ஒலித்த கார் சத்தத்துடன், 'ஸார்' என்ற அழைப்பு வந்தது; வந்த நபருடன் தந்தையை நாடிச் சென்றான் ராமசேகரன்.

''ஐயா, நமஸ்காரம். என்னை உங்களுக்குத் தெரிய நியாயமில்லை: நான்தான் உங்களுடைய நண்பர் பாலகுரு வின் மகன். முன் நாளில் உங்களிடம் என் அப்பா கடனாகப் பெற்ற நாலாயிரம் ரூபாய் விஷயம் நேற்றுத்தான் எனக்குத் தெரியும். தங்கள் பணம் வந்த வேளைதான் இன்று நான் ஒரு லக்ஷாதிபதியாக இருக்கிறேன்...இதோ தங்கள் அன்புக்கு என் எளிமையான அன்பளிப்பாக ஐயாயிரம் ரூபாய்க்கு 'செக்' தருகிறேன். பெற்றுக் கொண்டு, என்னை ஆசீர்வதி யுங்கள்...'' என்று வந்தவர் மண்டியிட்டு வணங்கினார். வைர மோதிரங்கள் ஒளிவீசின.

ராமலிங்கத்தின் கண்களில் கண்ணீர் வழிந்தது. கையி லிருந்த ஐயாயிரம் ரூபாய் 'செக்'கில் நீர் மணிகள் உதிர்த் தன. ''தம்பி உனக்கு ஆண்டவன் தீர்க்காயுளையும் நிரம் பச் செல்வத்தையும் கொடுக்கப் பிரார்த்திக்கிறேன். நல்ல சமயத்தில் எனக்கு நீ உதவி செய்தாய். ராமசேகர்,

நாளையே என் கடனைப் பூராவும் தீர்த்துவிட ஏற்பாடு செய்...ஆகா...தம்பி, இனி நான் நிம்மதியாகச் சாகிறேன்... கடவுளே...எனக்குச் சாகும் போதாவது நிம்மதி தந்தாய்... நான் பட்ட கடன் என் மூச்சுள்ள போதே தீருவது என் அதிர்ஷ்டம்தான்...'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். புத்துணர்ச்சி அவர் உடலில் பரவியது.

ராமசேகரன் வெளியே வந்தான். கடன்காரர்களிடம் திரும்பி,விஷயத்தை விளக்கினான்.மறுநாள் வந்து பணத்தைப் பெற்றுப் போகும்படி சொன்னான்; அவர்கள் பிரிந்தார்கள்.

"அப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடிவந்தான் ராமசேகரன், வந்திருந்த நண்பரை வழியனுப்பி வைத்துவிட்டு.

அவன் அப்பா அப்பொழுது நிம்மதியான நீண்ட நித்திரை வசப்பட்டுக் கிடந்தார்...!

"ஐயோ, அப்பா!" என்று மகன் போட்ட கூக்குரல் ஓய, பத்து நாட்கள் பிடித்தன.

ராமசேகரன் வீட்டில் கடன் கொடுத்தவர்கள் 'க்யூ' வரிசையில் நின்றார்கள்.

"ஐயா! உங்கள் எல்லோருடைய மன்னிப்பையும் வேண்டுகிறேன். தவறாக எண்ணாதீர்கள்...அப்பாவின் பழைய கடனுக்கு ஈடாக ஐயாயிரத்துக்கு 'செக்' தந்தவர்— அந்தச் 'செக்'—எல்லாம் என் நாடகத்தின் விளைவு. சாகும் போது என் தந்தை நிம்மதியுடன் சாகவேணும்; மகனுக்கு— எனக்குத் தான் பட்டகடன் சுமையைச் சுமத்தி விட்டுச் சாகப்போவதாக அவர் ஏங்கி விடக்கூடாதே என்பதற்குத் தான் நான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன். தன் கடன் தன்னுடன் தீர்ந்தது என்ற மகிழ்ச்சியுடன், நிறைவுடன், நிம்மதியுடன் அப்பாவின் ஆவி நிம்மதி பெற்று விட்டது. அவர் கண்ணை மூடிக்கொண்டு விட்டார்...என் போக்கைக் கண்டு நீங்கள் அதிசயப்படுவீர்கள். ஐயா! என் அப்பாவின் பேரில் உங்களுக்கிருந்த நம்பிக்கை என் மீதும் குறையாதிருக்கச் செய்யுங்கள். உண்மை உழைப்பில் நம்பிக்கை உள்ளவன் நான்! என் தந்தை மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்... உங்கள் கடனைக் கட்டினால் தான் நான் பிடிசோறு நிம்மதி

யாகச் சாப்பிடுவேன்; அப்பொழுது தான் நல்ல மூச்சு விடுவேன்...ஐயா! கூடிய சீக்கிரமே உங்கள் கடனை அடைத்து விடுகிறேன்..''

ராமசேகரனின் கண்ணீர் முழுவதும் வற்றியதும் தான் கண் திறந்தான்; அப்பொழுது அவன் பார்வைக்கென்று 'இன்ஷ்யூர் கவர்' ஒன்று காத்திருந்தது.

''அன்புள்ள ராமசேகர்,

உன் கடிதத்தை இன்றுதான் நான் பம்பாயிலிருந்து திரும்பினதும் பார்த்தேன். அத்தோடு மற்றுமொரு விஷயத்தையும் அறிந்தேன். ஒரு சமயம் என் தந்தை பாலகுரு முதலியாருக்கு உன் அப்பா நாலாயிரம் ரூபாய் கடன் கொடுத்ததாக என் அப்பாவின் டைரியிலிருந்து அறிந்தேன். என் தந்தையின் திடீர் மரணத்தின் காரணமாக இது பற்றிய விபரம் இது நாள் வரை தெரியாது போய் விட்டது. அப்பாவின் உதவி தான் இன்று நான் ஓரளவு முன்னேறியிருப்பதற்குக் காரணமாகும். மேலும், உன் சோகக் கதை என்னைச் சில வருஷங்களுக்கு முன் இட்டுச் சென்றது. ஏறக்குறைய உன் கதையே தான் அப்போதைய என் நிலையும்! என் தந்தை பட்ட கடனை அந்நாளில் அடைத்து, என் அப்பா நிம்மதியுடன் சாகவேண்டுமென்று நான் பட்ட அல்லல்கள் கடவுளுக்கல்லவா தெரியும்! உன் தந்தையின் உதவிக்கு—அன்புக்கு ஈடாக என் அன்பளிப்பாக—நன்றிக் காணிக்கையாக ஐயாயிரம் ரூபாய்க்கு இத்துடன் 'டிராப்ட்' அனுப்பியிருக்கிறேன். உன் அப்பாவின் கண் முன்னுலேயே அவர் பட்ட கடன் பூராவையும் உடனே அடைத்துவிடு. நம் 'பிஸினஸ்' வருகிற மாதம் தொடங்கப் பெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி பெற்றுவிட்டன. உழைப்பு, நாணயம், நேர்மை, தன்னம்பிக்கை எல்லாம் சேமநிதியாக இருக்கையில் தெய்வம் நம்மைக் கைவிடவே மாட்டாது!

அன்புள்ள,

பா. சோமநாத்

ராமலிங்கம்—ராமசேகரனின் தந்தை நிம்மதியுடன் ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டிருந்தார்—படத்தில்!

# அலகிலா விளையாட்டு

“குபேரன் ஸில்க் எம்போரியம்” அன்றைக்கு அமளி துமளிப் பட்டுக்கொண்டிருந்தது. விடிந்தால், நாடியம்மன் வரகரிசிமாலை! புத்தம் புதிய துணிமணிகள் எடுத்து உடுத்திக் கொண்டுதான் அம்பிகையைத் தொழச் செல்வார்கள் அவ் வூர்மக்கள். தொன்று தொட்டு வந்த வழக்கமும் இதுவே தான்! ஆகவேதான், அந்தக் கடையில் அவ்வளவு பரபரப்பு!

இரவைப் பகலாக்கிக் காட்டிக் கொண்டிருந்தன மின் விளக்குகள். கல்லாப் பெட்டியைப் போலவே நாதமுனியும் விழிப்புப் பெற்றுக் கொண்டுதான் இருந்தான். வாங்கின துணிமணிகளுக்குப் போடப்பட்ட ‘பில்’ கள் அடுத்தவரால் சரிபார்க்கப்பட்டுப் பிறகு நாதமுனியிடம் அண்டின; ரூபாய்த் தாள்கள் வகை வகையாக மேஜை மீது குவிந்தன. பின்னர் அவை ரொக்கப் பெட்டியில் அடைக்கலம் புகுந்தன. சில் லறை நாணயங்கள் மட்டிலுமே மேஜை மீது வந்தமர்ந்து கொண்டன; சற்றைக் கெல்லாம் அவை திசைமாறி, திக் குத்திரும்பிச் சென்றுகொண்டேயிருந்தன.

சுவர்க் கடிகாரம் பத்துத் தவணை ஓலம் பரப்பி ஓய்ந் தது.

நாதமுனிக்குக் கொட்டாவிகள் ஒன்றன் பின்னொன்று ருகப் பரிந்தன, கண்களைக் கசக்கிவிட்டபடி அவன் கருமமே கண்ணானன். அவனது கண்பார்வையில் அவனுடைய அடுத்த தெருவுக்காரர் தென்பட்டார்; உடன் வந்த அந்தப் பெண்மணியையும் அவன் நோக்கினான். “என்னுங்க இது” நேரங் கெட்ட நேரத்திலே அண்ணியையும் அழைச்சுக்கிட்டு வந்திருக்கீங்களே?... என்று உரிமை பூண்டு பாசத்துடன் வினவினான் நாதமுனி.

'வாயும் வயிறு' மாக இருந்தவள் நிறை புன்னகை தவழ ஒதுங்கி நின்முள். அவளிடம் புடைவை ரவிக்கைத் தினுசு கள் இடம்பெற்றிருந்தன.

"மரகதம் இவ்வளவு நேரமா அசந்து தூங்கிக்கிட்டிருந்தா. இப்பத்தான் கண்முழிச்சா. அவ பார்த்து வாங்கிஞத்தான் மனசுக்கு ஒப்பும். இனி போய் ரவிக்கையைத் தைக்கக் கொடுக்கவேணும்!"

"அப்படிங்களா?...சரிங்க!"

"தம்பி வூட்டிலே புளிக்குடிச்சாச்சா?... என்ன குழந்தை?. ."

"இந்தப் பங்குனி தாங்க மாசம்!. .ரெண்டு மூணு வாட்டி வலி கண்டுச்சு; அப்புறம் நாலஞ்சு நாளா சும்மா இருக்குது நாடியாயிதான் கண் திறந்து பார்க்கணுமுங்க!"

"அதெல்லாம் ஒரு குறையும் வைக்க மாட்டா அம்பிகை, உன்னேட மங்களம் பெற்றுப் பிழைச்சுச் சொகமாயிருக்கும்!... என்னை நம்புங்க தம்பி!"

நல்வாக்குக் கிடைத்த ஆனந்தத்தில் அமைதியின் தடமும் பதிந்தது. விலைப்பட்டியலுக்குரிய பணத்தை எடுத்துக் கொண்டான் நாதமுனி; பாசத்தின் திசையமர்ந்து கைகூப்பிஞன் அவன். மனக்கண் திறந்தது; அவனுடைய மங்களம் அழகுகூட்டி விளங்கிஞள். மழலைச் செல்வத்தின் நிழலும் ஆடியது. "தாயே நாடியாத்தா!" என்று அவன் இதழ்கள் முணுமுணுக்கத் தொடங்கின.

அப்போது, "முதலாளி!... முதலாளி!" என்று அலட்டிக்கொண்டே ஓடிவந்தான் வீட்டுப்பணியாள்.

நாதமுனிக்குக் கைகால் ஓடவில்லை. "என்னுப்பா சன்முசி?" என்று கேட்டான்.

மங்களத்துக்குப் பிரசவ வேதனை மிஞ்சிவிட்டதாம்...!

'மாரிஸ் மைனர்' பறந்தது; நாடிமுத்துநகர் அண்டிக்கொண்டிருந்தது.

* * *

நாற்பது மைல் வேகம் குறைக்கப்பட்டது. கண்மண் தெரியாமல் காரைச் செலுத்திப் பறந்து வந்த நாதமுனி, பெரிய கடை வீதி முனையிலிருந்து சின்னக் கடைத் தெருவுக்குக் காரைத் திருப்பிய போது, அவனுக்கு உயிர் போய் உயிர் வந்தது. குறுக்கே பாய்ந்து மடங்கிய கிழவர் ஒருவரின் உயிரும் நமனுலகம் சென்று மீண்டது. ஆசுவாசப் பெருமூச்சுடன், 'பிரேக் போட்ட காரை மறுபடியும் செலுத்தத் தொடங்கினான் அவன். 'தஞ்சாவூர் — பட்டுக் கோட்டை' கடைசி பஸ் வழி நெடுகப் பறந்தது.

'நாடி முத்து நகர் வளைவு' நாதமுனியின் இதயத்தில் பதட்டத்தைப் பாய்ச்சிற்று. வடக்குக் கோடியில் ஒளி உமிழ்ந்துக் கொண்டிருந்த நாடியம்மனின் கோபுர தீபங்கள் அவனது சிந்தையில் ஒளிகாட்ட முயன்றன. நெஞ்சில் 'தாய்' நின்றாள். எழுந்த பிரார்த்தனையினூடே, மங்களத்தின் சிரித்த முகம் நிழலாடியது. அவனுக்குக் கண்ணீர் வந்தது. மட்டுப்பட்ட காரின் வேகம் அதிகரித்தது, திருவிழாப் பந்தல்களிலே ஜனங்கள் நடமாட்டமும் அதிகரித்தது. கவனம் பதித்தபடி, காரைத் திருப்பினான் நாதமுனி. 'மங்களம்!... மங்களம்!' என்ற பெயர் உச்சரிப்பில் அவன் தன்னையே மறந்து விட்டான் போலும்! காற்பாதங்கள், 'வேகத்தை நிர்ணயிருக்கும் மிதி'களிலே அழுந்தின. 'ஸ்டீயரிங்' துடித்தது. "சரக்!" என்ற பயங்கரச் சத்தம் புறப்பட்ட போதுதான் அவன் தன் நினைவு எய்தினான். ரத்தத் துளிகளைத்தான் அவனால் முதல் முதலாகத் தரிசிக்க முடிந்தது. நிறை கர்ப்பத்திலிருந்த பசு ஒன்று ரஸ்தாவில் சாய்ந்து கிடந்தது.

"தம்பி!... ஓடியா! — சீக்கிரமா ஓடிவாயேன்!—"

அந்தப் பங்களா அவனை விழுங்கி ஏப்பம் விட்டு விடுவதைப் போன்று அப்படி ஆடியது; அவன் அந்தப் பங்களாவின் ஆட்டத்தில் அலைக்கழிந்து அல்லாடித் தள்ளாடிக் கொண்டிருந்தான். அவனுடைய உள்ளத்தில் பிறந்த அச்சம் அவனது உயிரை உட்கொண்டு விடுவதைப் போன்று

பயமுறுத்தியது. அவன்—நாதமுனி குலை நடுக்கம் எய்தினன்.
நாடியாத்தா, தாயே!:என் பெண்சாதி மங்களத்தைக் காப்பாற்றித்தா!. .தாயையும் சேயையும் நல்லபடி யாக்கிக் கொடு தெய்வமே!. . தலைச்சன் பிரசவம்! என்னைச்சோதிச் சுப்பிடாதே, அம்பிகையே!'

ஆறு போவதே போக்கு; அதொப்பத்தான் விதியின் போக்கும்!

டாக்டர் இருவர் மாறிமாறி வந்தார்கள். லேடி டாக்டரை அழைத்துவரத் தஞ்சாவூருக்கு ஆள் அனுப்பப்பட்டிருந்தது. நாதமுனி வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டேயிருந்தான். மனப்புயல் வாசலில் விளையாடத் தொடங்கியது. நாதமுனி குத்துக் கல்லென நின்றான். வாசல் வெளியில் அவனுடைய தந்தை சந்திரசேகரன் நின்று கொண்டிருந்தார். "தம்பி, நீ போய்ச் சாப்பிடுப்பா!" என்றார் பெரியவர். நாதமுனியின் விழிகள் கலங்கின.

அப்போது வாசலைக் கடந்து சென்ற ஏழை ஒருவன் தன் பாட்டிலே கத்தினன்: ''எந்தப் பாவி எம் பசுமேலே காரை மோதினனோ தெரியலையே!...நெறைவயித் தோட பசு துடிக்குதே. . அந்தப் பாவம் சும்மாவா விடப்போவுது?...அந்தப் பாவியோட பெண்சாதி பிள்ளை விளங்குமா?...வாயில்லா ஜீவன்!. . யாரு பேரைச் சொல்லத் தெரியும் அதுக்கு!...''

உறங்கிக் கிடந்த உள் மனம் விழிப்புக் கண்டது. நாதமுனி நடந்த கதையினைப் பெரியவரிடம் சொன்னன்.

சந்திரசேகரன், "எனக்கு என்னமோ பயமாயிருக்குதே, நாதமுனி!..." என்றார்.

* * * *

நாதமுனி பச்சைக் குழந்தை மாதிரி கதறிக் கதறி அழுது கொண்டிருந்தான். 'மங்களம்!...மங்களம்!' என்று புலம்பினன்; 'தெய்வமே!...தெய்வமே!' என்று விம்மினன். பட்டுக்கோட்டையிலிருந்து புறப்பட்டு, மங்களத்தைத் தஞ்

சைப்பதி நாடி 'பெண் பார்த்து' வந்த சம்பவம் ஓடியது; ஓடிச் சென்ற இன்ப வாழ்வின் 'ஆனந்த பைரவிக் காட்சிகள்' நெஞ்சில் ஆலாபனம் செய்து கொண்டிருந்தன. 'ஆண் குழந்தையானால் நாடிமுத்து; பெண்ணானால் நாடியம்மை என்றுதான் பேர் வைக்க வேணும்!' என்று தன்னைக் கொண்டவள் தெரிவித்த ஆசையையும் அவன் அப்போது எண்ணத் தவறவில்லை.

ஒரு விநாடி அவன் மலைத்து நின்றான். அந்தச் 'சாப ஒலி' பூதாகாரமாக ஒலியெழுப்பிற்று: "வாயில்லாச் சீவன் நிறைவயிறோடு இருந்திச்சே?...அதைச் சாகடிச்ச நீ மட்டும் சிரிச்சுக்கிட்டு இருக்க முடியுமா?...அதான் தெய்வம் உன்னோட பெண்டாட்டியையும், பிள்ளையையும் கூண்டோடு கைலாசம் சேர்த்துப்பிடுச்சு!..."

நாதமுனி மண்டையில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டான்: "ஐயையோ!...இனிமே நான் என்ன செய்யப் போறேன்?" என்ற அவல ஓலம் தேயு முன்னம், ஒரு கை வந்து அவன் இடது தோளைத் தொட்டது. சுய உணர்வு கூடிவந்தது. வழிந்த வெள்ளத்துக்கு வகை சொல்லத் தெரியாதவனாக, அவன் அலங்க மலங்க விழித்து விழித்துப் பார்க்கலானான்!

"நாதமுனி!...உன் பெண்சாதிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்குது!...மங்களமும் பெற்றுப் பிழைச்சிடுச்சு, தம்பி!... உங்க அப்பா புது டாக்டரைத் தேடிப் போயிருக்காங்களோ, என்னமோ தெரியலே! போய்ப் பார்த்து நல்ல சேதியைச் சொல்லிட்டு வாரேன்!...என்ன அப்படி விழிச்சுப் பார்க்கிறே தம்பி?..." என்றார் வந்தவர்.

நாதமுனியின் விழிகளிலே கண்ணீர் முன்னைக் காட்டிலும் இப்போது அதிகமாக ஊற்றெடுத்தது. முதற் குழவியின் முதற் குரல் முதல் தடவையென அவன் இதயத்தில் எதிரொலித்தது!

* * * *

புனர் வாழ்வு எடுத்தாள் மங்களம்! நாதமுனி தன் தந்தையைக் காணுமல் தவியாய்த் தவித்தான். காரை எடுத்துக் கொண்டு தேட எண்ணி, காரைத் தொட்டான். அது சுட்டது! அவனது மனச்சாட்சிதான் அவ்வாறு சுட்டுப் பொசுக்கியிருக்குமோ? நிறைவயிற்றுடன் வந்து விழுந்த பசுவின் காட்சி தெரிந்தது.

'வாயில்லாச் சீவனைச் சாகடிச்ச நீ மட்டும் சிரிச்சுக்கிட்டிருக்க முடியுமா?...அதுதான், தெய்வம் உன் பெண்டாட்டியையும் பிள்ளையையும் கூண்டோடு கைலாசம் சேர்த்திருச்சு?...'

நாதமுனியின் உயிர் நடுங்கியது. அவனுக்கு எண்ணவே தெம்பில்லே; கடந்த காலமும், எதிர்காலமும் விதியின் சிரிப்புக்குப் 'பிணை' நின்றனவா?

ஏழை ஒருவன் ஓடி வந்தான். ''சின்ன எசமான்!...எந்தப் பாவி மகனே என்னோட பசுமாட்டு மேலே காரை மோதிப்பிட்டானுங்க, அது நெறை கர்ப்பமாயிருந்திச்சு. எனக்கு உசிரே துடிச்சிருச்சுங்க. மருந்து, மாயம் எதுவும் பலிக்கலே. கடைசியிலே ஆத்தாளை வேண்டிக்கிட்டு, கால் நடை ஆசுபத்திரி டாக்டர் ஐயாவைச் கூட்டியாந்து காட்டினேனுங்க. கிடாரிக்கன்று போட்டிருக்குதுங்க; தாய்ப் பசுவும் பிழைச்சிருந்தா நல்லா இருந்திருக்கும். அது இந்த மண்ணிலே தங்கலீங்க!...'' என்று செருகினுன் அவன்.

''மூக்கப்பா!...இந்தா நூறு ரூபாய் இருக்குது; அந்தக் கன்றுக்குட்டியை நல்லபடியாகக் காப்பாத்து! பாவம்!'' என்று 'ஆறுதல்' சொன்னுன் நாதமுனி. அந்த நூறு ரூபாய்த் தாள், அவனுடைய 'மனத்துக்கு ஆறுதல் புகல வழியின்றித் 'திருட்டு விழி' விழித்தது.

வந்தவன் மறைந்தான்.

நாதமுனியின் கையிலிருந்த அக்கடிதம் நடுங்கிக் கொண்டிருந்தது.

"அன்புள்ள மைந்தன் சிரஞ்சீவி நாதமுனிக்கு, ஆசீர் வாதம்."

"நிறை வயிற்றுடன் இருந்த பசுவின் மேல் நீ காரை மோதிய சேதியைக் கேட்டதும், என் மனசு அடைந்த துன் பம் கொஞ்சமில்லை! முன்பு, உன் தாயார் உன்னை வயிற்றில் சுமந்து நிறை கர்ப்பிணியாயிருக்கையில், இதே மாதிரியான ஒரு சம்பவம் நிகழ்ந்தது என்னுடைய வாழ்க்கையிலும்! இதே போன்று, நிறை வயிற்றுடன் இருந்த பசு ஒன்றின் மீது நான் ஓட்டிவந்த கார்மோதி, அந்தப் பசு அவ்விடத்திலேயே இறந்து விட்டது. உயிருக்கு உயிர் பலிவாங்கிவிடலாகாதே என்று நான் பயந்து கொண்டிருந்தேன். என் பயம் வீண் போகவில்லை. நான் செய்த பாவத்துக்கு நான் தண்டனையை அனுபவித்து விட்டேன். நீ பிறந்தவுடன், உன் தாய் கண் களை மூடிவிட்டாள்.

அப்படி ஒரு தீவினை 'வாழ்க்கையில் சம்பவித்துவிடலா காது!...பாவம், அந்தப் பசு, உன் கார் மோதிய தொல்லை பொறுக்காமல் இந்நேரம் இறந்துபட்டிருக்கும். மன மறிந்தோ, மனம் உணராமலோ எந்தத் தவறு நிகழ்ந்தா லும், அதற்குத்தக்க பரிகாரம் உடனடியாகச் செய்துதான் தீரவேண்டும்; அதற்கான ஈடும் அவ்வப்போதே செலுத்தி யாக வேண்டும். இதுவே தான் வாழ்வின் உயிர்த் தத்து வம்!...நீ செய்த குற்றத்திற்கு இதோ நான் பிராயச் சித்தம் செய்து விடுகிறேன். இனி, உன் மனைவிக்கும் சுகப்பிரசவம் ஆகிவிடும். நாடியம்மாள் உன்னைக் கைவிடமாட்டாள்! நீ உன் மனைவி மக்களுடன் பல்லாண்டு காலம் வாழ்வாய்!

"எனக்காக நீ வருந்தாதே!...என்னை நீ நித்தமும் நினைத்துக் கொண்டிருப்பாய்!...உனக்கு ஆண் குழந்தைதான் பிறக்கும். இப்போது புரிகிறதல்லவா? படைத்தவனின் திரு விளையாடலுக்கு நாம் என்ன ஈடு கட்டிப் பேசமுடியும்?

இப்படிக்கு,
"சந்திரசேகரன்."

''அப்பா! அப்பா!'' என்று கூக்குரல் பரப்பியவாறு வீட்டினுள்ளே வெறிகொண்டு ஓடிஞன் நாதமுனி. ஐம்புலன்களின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டவன் போன்று அவன் அலறிஞன். 'சின்ன ஐயா! வூட்டுக் கூடத்திலே இருந்திச் ஙிங்க இந்தக் கடுதாசித் துணுக்கு!' என்று சொல்லியவாறு வேலேக்காரன் நீட்டிய நிகழ்ச்சியை நினைக்க அவனுக்கு உணர்வு ஏது? வீட்டுக் கூடம் வந்தது; ஆனால் அங்கே அவனது தந்தை சந்திரசேகரன் இருந்தால்தானே? அவருடைய பெரிய நிழற் படத்தை ஏறிட்டு நோக்கிஞன் நாதமுனி! நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான்; கேவிக் கேவி அழுதான்.

'பெரிய ஐயா'வைத் தேடிச் சென்றவர்கள் வெறுங்கையுடன் திரும்பிஞர்கள்.

''பெரிய முதலாளியேதான் இப்ப இந்த வூட்டிலே மறுபிறப்பெடுத்திருக்காங்க!'' என்று அங்கிருந்தவர்கள் முணமுணத்தார்கள்.

நாதமுனியின் கண்களில் ரத்த நரம்புகள் அறுபட்டு, குருதி வழிந்தது. ''எனக்குக் கெட்ட கோபம் வருது. எல்லாரும் வாயை மூடிக்கிட்டு இருங்க. என் அப்பாவை வாயிலே போட்டுக்கிட்டுப் பிறந்திருக்கிற என் பிள்ளேயின் லட்சணத்தைப் பத்தி எனக்கு நல்லாப் புரிஞ்சிருச்சுது! தூ!...'' என்று வீடு அதிரச் சத்தமிட்டான் நாதமுனி.

அப்போது, ''டே தம்பி! உன் மகன் பிறந்த நேரந்தான், காசாங் குளத்திலே குதிச்சு மடியப் போன என்னுேட உருவம் நம்ம தமிழ் வாத்தியார் கண்ணிலே தென்பட்டிருக்குது; ஓடியாந்து காப்பாத்திப்பிட்டாங்க. பச்சை மண்ணு அது. உலகத்தை நல்லா முழிச்சுப் பார்க்கிறதுக்குள்ளாற, நீ அதைப் பயமுறுத்திப்பிடாதேடா!...'' என்ற குரல் கேட்டது.

நாதமுனி திரும்பிஞன்.

அல்கிலா விளேயாட்டில் திளேத்து விட்டிருந்த பிரபஞ்சம், இரவின் மோனத்தவத்தை நக் கண்டும், காணுதது போல், விஷமப் புன்னகையுடன் பணி இயற்றிக் கொண்டிருந்தது!

# கூடுவிட்டுக் கூடு

'ரெமிங்டன்' இயந்திரம் ஒரே ஓட்டமாக ஓடிக்கொண்டிருந்தது.

வெள்ளைக் கடுதாசியில் நீல நிற எழுத்துக்களைப் பதிக்க, நிமிஷங்கள் ஏழெட்டுப் போதும்போலும்.

தளிர் விரல்கள் இயங்குவதை நிறுத்திக் கொண்டன. உருளையை இயக்கி, வெள்ளைத் தாளை எடுத்து, அசலும் நகலும் சரியாக ஒத்து இருக்கிறதாவென்று மேலோட்டமாகப் பார்வையிட்டு, பிறகு 'கார்ப்பன் பேப்பரை' அதன் யதாஸ்தானத்தில் சேர்த்தானதும், பெருமூச்சைக் கரையேற்றிய கடனுடன், 'டைப்' செய்யப்பட்ட தாளுடன்-தாள்களுடன் அவள் எழுந்தாள். ஸ்டூலில் இருந்த குஷன் திண்டு நழுவியது. அந்த ஹாலை ஒரு முறை ஜாடை பதித்துப் பார்த்தபடி, கீழே குனிந்து திண்டை எடுத்தாள். இடது கையில் டைப் செய்யப்பட்ட தாள்கள். வலது கை திண்டை எடுத்தது. இதற்கிடையில் மார்பகச் சேலையின் முன்தானைப் பகுதி நழுவியது. பதட்டம். உயிர்த் துடிப்பு. அவள் சேலையைச் சமன் செய்து நிமிர்ந்தாள். திண்டு ஒரு பக்கமும் தாள்கள் இன்னொரு பக்கமுமாகச் சிதறின. திண்டை எடுத்து வைத்தாள். பேப்பர்த் தாள்களை எடுக்க முனைந்த போது, அவை காற்றில் பறந்தன. கடற் காற்று போதாதென்று, மின் விசிறி வேறு சுற்றிக் கொண்டிருந்தது. அவள் ஓட, பேப்பர்த் தாள்களும் ஓடின. மூன்று நிமிஷப் போராட்டம் கழிந்த பிறகு, அவளது ஆத்திரப் பிடியில் சிக்கின அந்தத் தாள்கள். அப்புறம் தான் அவள் நெற்றி மேடு, கழுத்துப் பகுதி, மூக்கின் நுனி போன்ற இடங்களின் வேர்வையைத் துடைத்துக் கொள்ள வேண்டுமென்கிற நினைவு ஓடியது.

அதற்குள் ஓடிவந்த சிரிப்பொலி அவளைத் திடுக்குற வைத்து விட்டது.

அவள் ஒயில் சேர்த்துத் தலையை உயர்த்தினாள். மேலாக் கைச் சீர் செய்தபடி பார்வையைச் சுழல விட்டாள். மெல்ல நடந்தாள்.

"மிஸ்டர் பஞ்சநதம்!... என்ன இப்ப நடந்திட்டுது; எதுக்கு இப்படிச் சிரிச்சீங்க இப்படி...எதிலும் ஒரு 'எட்டிகசி' வேணும். சும்மா தமிழ்ப் பண்பாடு, தெலுங்குப் பண்பாடுன்னு லெக்சர் அடிச்சு, ஆபீஸ் டயத்தை வீணாக்கிறதிலே, பைசா புண்ணியமில்லே!... நீங்க யார்? நான் யார்?... மேலைநாடுகளிலே அவங்க அவங்க காரியம்தான் அவங்களுக்குக் குறி. ஆனால் இந்த அருமைத் தமிழ்நாட்டிலே, ஏன் நம்ம பாரதத் திருநாட்டிலே முதல் கவலை பிறத்தியாரைப் பத்தித்தான்!...சே! மிஸ்டர், இது உங்களுக்குக் கடைசி 'வார்னிங்'!.. இனியொரு தடவை என் வழிக்கு நீங்களோ உங்க சிரிப்புக்களோ வந்துச்சோ; அப்புறம் விஷயம் எஸ். ஓ. மூலம் டைரக்டர் கிட்டே போய்ச் சேர்ந்திடும்!.. பி.. கார் புல்..ஐ..சே!?'

குண்டூசி நழுவினால் சத்தம் கேட்கும், அப்படி இருந்தது ஹால்.

அவளுடைய கோல விழிகள் கோடிட்டுச் சுற்றி நிலைக்கு வந்தன. நெடுமூச்சைப் பிரித்தபடி பிரித்திருந்த தாள்களை இணைத்துக்கொண்டு அங்கிருந்து நகன்ற போது, மிஸ்டர் பஞ்சநதம் வழிந்து கொண்டிருந்த அசடுகளை கைச் சவுக்கத்தால்வழித்துவிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு, அக் காட்சியையே தன்னுடைய பெண்மையின் வெற்றிக் கடமையாகக் கொண்டு, நாசுக்காக ஸ்லிப்பர்களைப் பிரித்து நடந்தாள். நைலக்ஸ் புடவையின் கொத்துப் பூ குஞ்சங்கள் பூந்தென்றலில் அலைந்தன.

ஆபீஸரின் அறைக் கதவடியில் நின்றாள் அவள். கதவுக் கண்ணாடியில் முகம் பார்த்தாள். சுருள் அலை பறந்த கேசங்

கள் சில தறி கெட்டுக் கிடந்தன. நெற்றிப் பொட்டு வெகு துல்லிதம். கதவு ஆடி அசைந்தது.

திரும்பினாள் அவள்.

கையில் கற்றைக் காகிதங்கள்.

சுவர்க் கடிகாரம் ஐந்து அடித்தது.

அவள் தன் கடிகாரத்தைப் பார்த்தாள்.

அவ்வளவு பெரிய ஆபீஸ் கடிகாரம் இதற்குத்தானா பொய் சொல்லப் போகிறது?

அவரவர்கள் கடையைக் கட்டி, நடையைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

மிஸ்டர் பஞ்சநதம் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசையாமல், 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்ற பாவனையில் பூட்ஸ் ஒலியைக்கூட அழுத்தியபடி மறைந்தார். அந்த ஆளை மறைத்த புண்ணியம், பாவம் அந்த ஒடிசல் சைக்கிளுக்கே போய்ச் சேரட்டும்!

அவள் தயங்கினாள்.

நெஞ்சம் தத்தளித்திருக்க வேண்டும்.

எம்பி எம்பி இறங்கியது. மார்புப் புறத்தே வெளியில் தலை நீட்டிய மஞ்சள் தாலிக் கயிற்றை உட்புறம் இழுத்துச் செலுத்தினாள். 'ஊம்' என்ற ஒலி — தன்னுள் தனக்குத் தானே எழுந்து அடங்கிய ஒலி—அவளுள் எழுந்த ஒரு முடிவினைப் பிரகடனப்படுத்திய போக்கில் ஓசைப்படுத்தியது. அவள் ஸ்டூலில் அமர்ந்தாள். கடமையின் வைராக்கியம் அவளது அழகு விரல்களிலே வைரம் பாய்ந்தது.

மருதாணி நகங்கள் ஒயில் சேர்த்துச் சிரித்துக் கொண்டிருந்தன.

அவள்: சுந்தரி!

*　　*　　*

ஆம், அவள் சுந்தரி!

''அம்மா...!'' என்ற கனிவுக் குரல் கேட்டது. கனவு கண்டு விழிப்பவள்போல விழித்து நிமிர்ந்தாள். ஆபீஸ் நேரம் கனவு காண்பதற்கல்லவே!..

டவாலிச் சேவகன் நின்றான் குழல் விளக்கு வெளிச்சத்தில் அவன் காப்பித் தம்ளருடன் நிற்பது தெரிந்தது.

''அம்மா...காப்பி!''

''அப்படியா? நானே உங்களை அழைச்சு வாங்கிவரச் சொல்லணும்னு இருந்தேன்! ரொம்ப சந்தோஷம்!.. அம்மம்ம! தலைவலி தாளல்லே!..''

மேஜை இழுப்பை இழுத்தாள்.

''துட்டு இருக்கட்டும்...காப்பி குடியுங்க...உங்களுக்குத் தான் சூடு வேணுமே...ஆவி பறக்குது..சாப்பிடுங்க!...

சுந்தரி காப்பித்தம்ளரை விரைவுடன் வாங்கினாள்.

''எஸ். ஓ..தந்தாங்க..உங்களுக்கு!...'' என்று மெல்ல இதழ் பிரித்தான் பியூன்.

''அவருக்கு வீட்டிலேருந்து வந்த காப்பியிலே எனக்கு வேறு எதுக்கு?—'' தயக்கமும் வெட்கமுமாகக் குறிப்பிட்டாள்.

''அவருக்கு இன்னும் கல்யாணமே ஆகல்லே. இது ஹோட்டல் டிக்ரிகாப்பி. அன்போடு தாரதைத் தட்டப்படாதுங்கம்மா.''

செக்ஷன் ஆபீஸர் தினமூர்த்தி வந்து சொற்ப தினங்கள் தாம் ஆகின்றன. என்றாலும், அவரது அன்பும் பண்பும் அவள் வரை ரொம்பவும் உயர்ந்ததொரு கருத்தை உண்டாக்கி இருந்தது மட்டும் உண்மையே. நிதிமிக்க குடும்பப் பிள்ளை அவர். அலுவலகத்திற்குக் காரில்தான் வருவார். உழைத்துச் சாப்பிட வேண்டுமென்னும் 'தலைவிதி' இல்லை

அவருக்கு. ஆனாலும் உழைப்பின் மகிமையை மதித்துச் சாப்பிடுவதையே ஒரு நடைமுறை 'விதியாகக் கைக் கொண் டிருந்தார். இல்லையென்றால், சேட் ஒருவரின் கம்பெனியிலே விடிய விடிய இப்படி அவர் உழைப்பாரா என்ன!'

"சாப்பிடுங்கம்மா!"

"ம்!"

அவள் இதழ்க் கங்குகளைத் துடைத்துக் கொண்டாள்.

நன்றியின் கசிவு உதடுகளின் உள்வளைவில் பொசிந்தது.

வெறும் தம்ளருடன் விரைந்தான் ஏவலாளன்.

விரல்களைச் சொடுக்கிக் கொண்டு சிறு பொழுது ஓய்வு கொண்டாள். அந்நேரத்தில் எதையோ நினைத்துக்கொண்ட வளாக, ஏனோ அப்படிக் கண் கலங்கிப் போனாள். நொண்டிப் பிச்சைக்காரன் ஒருவன் கடற்கரை ஸ்டேஷனில் அலைந்து திரிந்தான்.

'ஊம்!'—மறுமுறை 'அத்த வைராக்கியம்' வைரம் பாய்ந்தது. விரல்கள் எழுத்துப் பொத்தான்களை யந்திர கதியில் இயக்கின. 'பாலன்ஸ் ஷீட்' இதோ முடிந்து விடும்!. டென்மார்க்கின் இறக்குமதி வியவகாரம் பூர்த்தி.

மணி ஏழு.

"இன்னுமா பாக்கி இருக்கிறது?"

குரல் கேட்டதும் அவள் நிமிர்ந்தாள்.

எஸ். ஓ. நிற்கக் கண்டு, மரியாதைக்காக எழுந்தாள்.

"இன்னும் கால்வாசி இருக்குங்க!"

"வீட்டுக்குப் போகணுமில்லே!"

"ம்!"

"அங்கே?..."

அவரது வினாவுக்கு 'நிதர்சனமான' விடையாக அவளது தாலி உருக்காட்டி மார்பகத்தில் விளையாடியது.

ஓஹோ...உங்கள் ஹஸ்பெண்ட் இருப்பார்...உங்களுக்காக எதிர்பார்த்துக்கிட்டு! இல்லே!...எனக்கு இது முன்னமே தெரிஞ்சிருந்தால், உங்களை வீட்டுக்குப் போகச் சொல்லியிருக்கலாம் நேரத்தோடே!''

''பரவாயில்லிங்க!?...''

''நோ...நோ...அது அப்படியில்லே, ஆமாம், உங்க ஹஸ்பெண்ட் எங்கே வேலை பார்க்கிறூர்?''

''போர்ட் ட்ரஸ்டில் வேலை பார்த்தார். காஷ்டிபார்ட்மெண்ட்...இப்போ சிக் லீவிலே இருக்கிறூர்!...''

''ஐ...ஸீ!... சரி...சரி...புறப்படுங்க; உங்களை வீட்டிலே ட்ராப் பண்ணிட்டு நான் போறேன். .''

''வேண்டாங்க! உங்க அன்புக்கு ரொம்ப தாங்ஸ் ஸார்; நீங்க போங்க!

''சும்மா வாங்க! இதிலே ஒண்ணும் தப்பில்லே;உங்க ஹஸ்பாண்ட் ஒண்ணும் தப்பா நினைக்கமாட்டார்னே நெனைக்கிறேன்!. .?'

''அவர் ரொம்ப நல்லவர். அன்புக்கு உங்க மாதிரி கட்டுப்பட்டவர்!''

பெருமையுடன் பேசினுள்.

பின் ஆசனத்தில் அமர்ந்தாள் சுந்தரி.

கார் சிந்தாதரிப்பேட்டையில் வெங்கடேசகிராமணித் தெருவில் நின்றது.

அக்கம் பக்கத்தில் குழந்தைகள் கூடினர்.

அமர்ந்தபடி சுந்தரி கைப்பையுடன் காரின் கதவைத் திருகி, பிடியை அசைத்துத் திறக்க முயற்சி செய்தாள். முடியவில்லை.

இதைக் கண்டார் தீனமூர்த்தி.

இறங்கி வந்து சுவாதீனமாக அவளைபார்த்து முறுவல் இழைத்தவராக, கதவினைத் திறந்தார்.

அவள் இறங்கிக் கொண்டாள். பையினின்றும் எலிஸ பெத் டெய்லர்—ரிச்சர்ட்பார்ட்டன் ஜோடி கன்னம் பாய்ச்சி எட்டிப் பார்த்தனர்!

''போய் வரட்டுமா?"

அவர் புறப்பட எத்தனம் புரிந்தார்.

அவள் நன்றி சொல்லிப் பூங்கரம் கூப்பினாள். பிறகு வாய்ப்பேச்சோடு, ''உள்ளே வந்திட்டு கொஞ்சம் காப்பி அல்லது ஹார்லிக்ஸ் சாப்பிட்டுப்பிட்டு', என்று கூறி, வார்த் தைகளின் தடுமாற்றத்தை பதட்டத்துடன் கட்டுப்படுத்தி விட்டு ஒதுங்கி நின்றாள்.

"வந்தது வந்தாச்சு. .அப்படியே உங்க ஹஸ்பெண்டை யும் இன்ட்ரட்யூஸ் செஞ்சுகிட்டுப் பேசலாம்; ஆம்; அது தான் சரி! அதுவே முறை!"

தீனமூர்த்தி அவளைத் தொடர்ந்தான்.

உள்ளே:

சிறிய கூடத்தில், தரை மீது விரிக்கப்பட்டிருந்த மெத் தையில் சுந்தரியின் புருஷன் படுத்துக் கிடந்தான். எலும்புந் தோலுமாகக் காணப்பட்டான். கண்கள்; மூடியிருந்தன.

அவன் மனைவி அவனை அண்டி அமர்ந்தாள். விழிகளின் கலக்கத்தைத் தடுக்க மாட்டாமல், அவள் கணவனின் நெற் றியைத் தொட்டுப் பார்த்தாள். "அத்தான்; இவுங்க தான்.." என்று சொல்ல ஆரம்பித்தாள்.

அதற்குள் அவனுக்கு வெட்டி வெட்டி இடதுகையும் வலது காலும் இழுக்கத் தொடங்கிவிட்டன.

சுவர் மாடத்தில் இருந்த மருந்துப் புட்டிகளைத் தட வினுள். அதற்குள் எஸ். ஓ. ஒற்றைக்காலில் நின்று கொண் டிருப்பதை அறிந்து தடுமாறினுள். சுற்றிச் சூழ நோக்கினுள்.

நாற்காலிக்காகத் தேடினுள்.

அது அங்கு ஏது?

தீனமூர்த்தி இதயம் உள்ளவர். புரிந்துகொண்டார். என்னைப்பத்தி இப்போ முக்கியமில்லே! முதல்லே உங்க கண வரைக் கவனியுங்க!...ஆமாம், நல்ல ட்ரீட்மெண்ட் கொடுப் பதுதானே?'' என்று அனுதாபமும் ஆதரவும் பின்ன கேட் டார்.

''எல்லாம் பார்த்தாச்சுங்க...'' அவள் விம்மினுள்.

இப்போதுதான் சுந்தரியின் கணவனுக்கு 'வலிப்பு' நின் றது. லேசாக விழிகளைத் திறந்தான்.

அதே தருணம்.

சுந்தரியின் விம்மலைக் கேட்டதும், தீனமூர்த்தி மனம் கசிந்தார். அவர் கண்களும் கலங்கித் துளும்பின. உணர்ச்சி வசப்பட்ட நிலையிலே நடந்து சுந்தரியை நெருங்கி அவளது கரங்களைப் பற்றியவாறு, ''சுந்தரி! உங்களுக்காக நான் ரொம்பவும் அனுதாபப்படுகிறேன்!...பகவான்தான் உங் களுக்காக மனம் இரங்கிக் கருணை செய்ய வேணும்!'' என்று தேம்பினுர். அடுத்த இமைப்பில், கைகளை விடுவித்துக் கொண்டார், ''கைண்ட்லி எக்ஸ்க்யூஸ்மி...சுந்தரி!''

தீயைத் தீண்டியவள் போல அப்படியே வெந்து துடித் தாள் சுந்தரி. ''உங்க தூய்மையான பாசத்துக்கு நன்றிங்க ஸார்!...'' என்று கை கூப்பி வணங்கினுள்.

சுந்தரியின் கரம் பற்றியவனை மீண்டும் நோக்கிய தீன மூர்த்தி இன்னமும் விழி திறக்காமல் இருக்கக் கண்டு, விடை பெற வாசலுக்கு வந்தார். ஒரு நூறு ரூபாய்த் தாளை எடுத்து நீட்டி''அவசரத்துக்கு இதை வைத்துக்கொள்ளுங்க...

இது கடன்தான்...இனுமென்று நினைக்கக் கூடாது. இனு மென்று சொன்னால் நீங்க தவருக நினைச்சுக்கக் கூடும்னு கரு தித்தான் உஷாராய் இப்படிச் சொல்றேன். மேலும் உங் களைப் பத்தியும் நான் கேள்விப்பட்டிருக்கேன்!...''என்று சொல்லி நின்ருர்.

சுந்தரி துயரப் புன்னகையுடன் காட்சி தந்தாள். ''இதெல்லாம் வேண்டாங்க...எனக்கும் இதிலெல்லாம் நாட் டம் இல்லே...என் அத்தானும் இம்மாதிரிப் பட்டதுகளை வெறுப்பவர்!...இயல்பாகவே அவர் ரொம்ப ஸ்ட்ரிக்ட்!... என்னமோ, எங்க கெட்ட காலம், வினைப்பயன் அனுபவிக்கி ருேம். என் சம்பளம், என்னிடமுள்ள மீதி நகை, இந்த வாட்ச் இதெல்லாம் எப்பவும் எங்களைக் கைவிடாதுங்க!... உங்க அன்பு எப்போதும் இருந்தால், அதுவே போதும் ஸார்!..'' தீவிரமான வைராக்கியப் புன்னகையுடன் பேசி ஞள்.

ரூபாயை தன் 'ஸ்லாக்' பையில் திணித்தார் தீன மூர்த்தி. ''மறுபடியும் வந்து பார்க்கிறேன், சுந்தரி!'' என்று கூறி விடை பெற்ருர்.

சுந்தரியின் கைத்தலம் பற்றியவனுடைய கண்கள் இப் போது நன்ருகத் திறந்தன!

அவன்: மாதவன்.

* * * *

எட்டு மணிச் சங்கு முழங்கியது.

ஹார்லிக்ஸ் கலந்தாள். சாத்துக்குடிப் பழங்களை உரித் துச் சுளைகளைத் தட்டில் வைத்தாள். சுந்தரி தன் கணவனின் படுக்கைக்கு வந்து எல்லாவற்றையும் தரையில் வைத்து விட்டுக் குந்திஞள். விளக்கு மெல்லியதாக எரிந்தது.

''அத்தான்!''

பரிவுமிக்க—பாசம் தழைத்த—அன்பு மேவிய குரலைத் தூவிஞள்.

எங்கோ வீசிய நிலாப்பிஞ்சு இங்கே வந்து ஓட்டை முகட்டின் வழியே விழுந்து அழகுணர்ச்சியைத் தூண்டிவிட்டது.

''அத்தான்!...''

வந்தவள் உடை களைய வில்லை; முகம் கழுவ வில்லை அலுவலகத்திலிருந்து கொணர்ந்த தலைவலி இப்போது இரட்டிப்பாக வளர்ந்து விட்டதாகப்பட்டது அவளுக்கு.

அத்தானையே இமைக்காமல் பார்த்தது பார்த்தவாறு இருந்தாள் சுந்தரி.

முகத்தில் மண்டியிருந்த ரோமங்களும் உறுப்புக்களை முற்றுகையிட்ட நோயும் விலகி, மாதவனை—தன் அன்புக்குரிய காதலனை மன்மதனாகக் கண்டாள்; அவ்வாறு கற்பனை செய்து கொண்டாள். ஏன், அவனே இந்நோய் வசப்படுமுன்னம், அப்படி இருந்தவன்தானே?...

இல்லையென்றால், அவனும் அவளும் மனத்தோடு மனம் கலந்து, ஒரு மனத்தில் மறு மனத்தை அழுத்திப் பதித்து, கருத்துக்களின் சந்திப்பில் கனவுகளைப் பரிவர்த்தனை செய்து, அவர்களிருவரும் தங்களுக்குத் தாங்களே ஆதரிச சித்தாந்த விளக்கம் போல்வும், தங்களது காதல் வெற்றியே நாடு கடந்த—மொழி கடந்த—இனம் கடந்த ஓர் ஒருமைப்பாட்டு உண்மையின் நடப்புப் போலவும் எண்ணி, நடந்து, பின் திருமணம் செய்து கொண்டிருப்பார்களா?

அவர்கள் காதலே ஒரு கதை!

சென்னை அவர்களை வாழ்த்துவதற்கென்றுதான் தொடக்கத்தில் வரவேற்றிருக்க வேண்டுமோ?

தஞ்சாவூரில் அவளுக்கும் திருச்சூரில் அவனுக்கும் சொந்தம், ஓரளவு சொத்து சுகம் எல்லாம் இருந்தும், இருதரப்புப் பெற்றோர்களும் தங்கள் தங்கள் லட்சியமே முடிவு என்று சொல்லி, அவ்விருவரையும் 'கையைக் கழுவி' விட்டாற்

போலவே இருந்து விட்டதால், குடி ஒன்றும் முழுகிப் போய் விடவில்லை.

இரண்டு பேரும் முந்நூறு ருபாய்க்கு கிட்டத் தட்டச் சம்பாதித்தார்கள்.

இந்நிலையிலே, மண்ணில் விண்ணும் விண்ணில் சொப்பன லோகமும் உருவாகத் தடை ஏதும் இருக்கவில்லை.

கணவனும் மனைவியும் தேநிலவுப் பயணம் போய் வந்தார்கள். கடல் மல்லைக் காற்று அவர்கள் மேனிகளைத் தாலாட்டிற்று.

அவன் தமிழில் பாட, அவள் மலையாளத்தில் பாடுவாள்!...

பாட்டு என்றுமே இனிக்கவா செய்ய முடியும்?—

என்னவோ, அவர்களது பாட்டின் கலப்பு, விதிக்கு ரசனை தட்ட வில்லையோ?

ஏன் அப்படி?

அதுதான் அவர்களது இன்பத்தின் எல்லைக்கு வாய்த்திட்ட வரம்பா?

அன்று ஆபீஸ் சென்றவன், மீளும் தருணம், தன்னை மீளாத நரகத்தில் தள்ளிக் கொண்டு டாக்ஸியில் வந்து சேர்ந்து, அவளையும் மீட்கமுடியாத நரகத்தில் மறைமுகமாகத் தள்ளவும் செய்து விட்டானே!

பாவம்!...

வந்தணைந்த பாவத்தின் அணையாத புண்ணியம் போல, அதோ அவனும் அவளும் புது மணப் பூக்களாக புன்னகையும் புது நிலவும் போல போட்டோவில் காட்சி தருகின்றார்கள்!...

"அத்தான்!..." விளித்தாள்.

கண்ணீரின் அழுத்தம் குரலையும் அழுத்திவிட்டிருக்கக் கூடும்.

அவன் நெற்றியில் கையை வைத்துத் தடவி ஆயத்தம் செய்தான்.

அதற்குள், அவன் விழிப்புக் கொண்டு விட்டான். வெளுத்திருந்த முகத்தில் செந்நிறத்தின் சாயல் ஒட்டியது.

''அத்தான்!...'' அச்சமும் அன்புமாக அழைத்தாள்.

''எங்கே அந்த நூறு ரூபாய்?...எங்கே அந்த மனிதர்?... ஆசைதீர இன்னும் சுற்றிவரக் கூடாதா இருவரும்?...வந்து ரெண்டு மணிக்கு வரக் கூடாதோ?...'' சினமும் துயரமும் கூவின.

பேசிக் கொண்டே வந்தவனுக்கு திடுதிப்பென்று வேர்த்துக் கொட்டியது.

வலிப்பு வந்து விட்டது.

''ஐயோ! அம்மம்மா;...ஐயப்பசாமி...சரணம் சாமி ஐயப்பா; முருகா!..''

மண் புழு துடித்தது; துடியாய்த் துடித்தது.

இடது கையும் வலது காலும் வெட்டி வெட்டி இழுத்தன.

அவள் வீசினாள்.

அவன் புழுவானான்; அவளையும் புழுவாக்கினான்.

''அத்தான்!...அத்தான்!'' அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். சுவரில் முட்டி மோதிக் கொண்டு கதறினாள். 'தெய்வமே...அத்தான்!...'' ரத்தத் திவலைகள் சிதறின.

வலிப்பு நின்றது.

வேர்வை பெருகியது. நரகத்தினின்றும் விடுபட்ட பாவனையில் மாதவனின் முகம் இருந்தது.

டவல் கொண்டு சுந்தரி தன் அத்தானின் மேனியைத் துடைத்தாள். அவளுக்குத் தன் கண்களின் நீரை மாத்திரம் துடைத்துக் கொள்ள முடியவில்லை ''அத்தான்!. ..ஏன் இப்படி புதிசாக என்னவெல்லாமோ பேசுறீங்க?...வந்தவர் எங்க ஆபீஸ் செக்‌ஷன் ஆபீஸர்!. ..இதயமுள்ள அபூர்வ மனிதர் அவர்;...நீங்களா என்னைச் சந்தேகப்படுறீங்க?. ..அன்புடன் நம்ம ஆபத்துக்கென்று பணம் கடனைகத் தருவதை அட்ரிடமிருந்து வாங்கிஞல் அது தப்பா, அத்தான்;... ஆனலும், நான் வாங்கவில்லை! என் கவுரவத்தை—உங்க கவுரவத்தைக் கட்டிக் காக்க எனக்குத் தெரியாதா!. ..அவசரமாக சில பேப்பர் டைப் செய்யச் சொல்லிட்டார்!. ..பாவம். அவருக்கு நம் நிலைமை அப்போ தெரியாது! உங்களுக்கு உடம்பு சரியில்லேங்கிறது தெரிஞ்சு, பதறிப் போய் என்னை இங்கே ட்ராப் செய்துட்டுப் போக வந்தார்;...அத்தான்!...நான் எப்போதும் உங்க சொத்துத்தான்!...இதை நினைப்பூட்ட வேண்டிய தலைவிதி கூட எனக்கு வந்திட்டுதே!. . .'' கதறினள். மூச்சு இரைத்தது.

நடுங்கிக் கொண்டிருந்த அவன் கைகள் அவள் திசைக்குத் தாமாகவே குவியலாயின. வெளுப்புத் தட்டியிருந்த நகக் கண்களிலே சுடு நீர்ச் சரம் படர்ந்தது. ''ஐயோ... நான் உனக்குச் சுமையாகி விட்டேனே!. ..'' ஓலமிட்டான்!

''ஐயையோ!. ..குருவாயூரப்பனே!. ..'' தெய்வத்தைத் துணைக்கு அழைத்தாள் சுந்தரி.

''அத்தான் அப்படிச் சொல்லாதீங்க. தர்மம் பொறுக்காது!...நாம் ரெண்டு பேரும் ஒருவர் உயிரிலே இன்னெருவராக கூடு பாய்ஞ்சிருக்கிற உண்மை நமக்கு மட்டுமேதானே தெரியும், அத்தான்!''

* * * *

விடிந்ததும், சுந்தரியால் எழுந்திருக்க முடியவில்லை. எங்கும் அசதி, அடித்துப் போட்ட மாதிரியாக அப்படிப் பட்ட அசதி. எழுந்தாள். மார்பகப் பகுதியில் லேசாக எரிச்சல் இருந்தது. குனிந்து நோக்கினள். ஓரிரு இடங்களிலே

நகத் தழும்புகள் மெல்லிய வரிக் கோடுகளாக அப்பியிருந்தன. எதிரே நோக்கினாள். மாதவன் ஸ்மரணை யற்றவன் போல-அப்படி காட்டுப் புலி போல் தூங்கிக் கொண்டிருந்தான். எப்போதாவது முன்பு இப்படித் தூங்குவான்! ஆனால், நோய் வசப்பட்ட இந்த ஏழெட்டு மாதங்களிலே இப்படி ஒருநாள் கூட 'இருந்தது' கிடையாது. கொட்டாவி பறிந்தது. உடம்பை வளைத்து முறித்து, நெட்டி பறித்தாள். 'அம்மாடி' என்று முனகினாள். 'ம்!'—நுட்பமான-அந்தரங்க பூர்வமான முரல் அவளுக்கு மட்டுமே புரியும்படியான—அவளுக்கு மட்டுமே புரிய வேண்டிய பாஷையில் நெளிந்தது. ''சு...ந்...!''—அவன் முணுமுணுக்கவே, அவள் அண்டினாள். அப்புறம் அவன் அசைந்தால் தானே?...

அவள் உள்மனம் அழுதது.

எதை நினைப்பாள்?...

எதை மறைப்பாள்?...

சுந்தரி எழுந்தாள்.

பொழுது ஏறியது.

அரிசியை உடைத்துக் கஞ்சி காய்ச்சினாள். இறக்கி வைத்தாள். சால் சட்டியில் பாலை ஊற்றினாள். அடுப்பு பற்றி எரிந்தது. நெருப்பு ஜ்வாலை கண்களில் அடித்தது. பால் பொங்கியது.

'எல்லாம் தயார்'...

கணவனைப் பார்க்க எண்ணி எழுந்தாள். சுவரில் தொங்கிய கண்ணாடி தெரிந்தது. காதுச் சிமிக்கிகளைத் தேடின அவள் விரல்கள். காணவில்லை. 'ம்...அத்தானுக்கு ட்ரீட்மெண்ட் பண்ணின வகையிலே உண்டான கடனுக்கு என் நகை நட்டு, கடிகாரம் அது...இது எல்லாம் அடைஞ்சிடும்!..' நடந்தாள். வெள்ளைக் காகிதம் ஒன்றை எடுத்து எழுதினாள். மடித்து வைத்தாள். 'இனி நான் ஆபீஸ் வேலை பார்ப்பதை இவர் விரும்பமாட்டார்!...என்னவோ, நோய் உபாதையால்

அவர் மூளை குழம்பியிருக்க வேண்டும், பார்க்கலாம் பின்பு...! நிலை சீர்ப்படலாம்!''

''அத்தான்!..''

மாதவன் மெல்ல விழி மறுகித் திறந்தான். எழுந்து உட்கார்ந்தான். அடித் தொண்டையால் இருமினான். முகத்தைத் தடவிக் கொண்டான்.

அவனுடைய நெஞ்சைத் தடவி விட்டாள் அவள்.

இதயத்தினின்றும் கிளம்பிய ஓலம் அவளுக்குக் கண் மூலைகளில் தேங்கித் துடித்தது.

''அத்தான், பல் தேயுங்க!...''

பதிலிசாக அவன் 'ம்' கொட்டி எழுந்தான். முற்றத்தை நெருங்கினான்.

அவன் திரும்பினான் டவலுடன். திருநீறு பூசினான்.

அதற்குள் கஞ்சி, பால் சகிதம் அவள் வந்து சேர்ந்தாள். கிளாஸில் ஊற்றி ஊற்றிக் கொடுத்தாள். 'சூடு வெள்ளம்' காத்திருந்தது.

அவன் அனுபவித்துக் குடித்தான்.

அவளுக்கு ஏகப்பட்ட குதூகலம், ஆறுதல்.

ஒரு சொல் அவன் சொல்ல வேண்டுமே!

சமயம் கணித்து, மெல்ல அந்தத் துண்டுக் கடிதத்தைக் கணவனிடம் கொடுத்தாள்.

கடிதத்தைப் பார்த்துவிட்டு, அவளைப் பார்த்தான். ''எஸ். .நானே இப்ப உங்கிட்டே சொல்லணும்னு இருந்தேன்! அனுப்பிடு சுந்தரி, ரெஸிக்னேஷனை!..'' வைராக்யத்தின் எழுச்சி அழுத்தமாகப் பதிந்திருந்தது. தலையணையைத் தூக்கினான்; சிகரெட் டப்பாவுக்காக கைகள் பரபரத்தன. சிகரெட் சிக்கியது. எடுத்துப் பற்ற வைத்தான். ஒரு வகைப்

பட்ட வெறியுடன் இழுத்து இழுத்து ஊதினான். ''எஸ்...ஐ ஆம் ரைட்!...யூ டூ..!'' புகை வளையங்கள் சக்கர வியூகம் அமைத்தன.

அவள், திக்குமுக்காடினாள். எதிர்காலம் அவளுக்கு பூச்சாண்டி காட்டியது. மேனி குலுங்கியது. ''இனிமேல் நம்மள் எதிர்காலம் எப்படி ஓடுமுங்க?'' பயந்து பயந்து கேட்டு விட்டாள்.

சிகரெட் சுடவில்லை, ஆனால் அதை அரைகுறையாக வீசி விட்டான். ''அதைப்பற்றிக் கவலைப்பட எனக்குத் தெரியும்!...'' வெகு ஆத்திரமாகப் பேசினான் அவன்.

கேட்டது தவறு என்று அவளது விழிகள் கெஞ்சுதலாக அவனைப் பார்த்தன. ''சரி..ங்க...!நீங்க ரெஸ்ட் எடுத்துக் கங்க..''

அவளது குழற்கற்றையை அவன் நீவி விட்டான். செவ்விதழ்களின் குறுக்குக் கோட்டை நீம்பினான். இமைகளை லேசாக வருடினான்.

அவள் நாணம் பூத்தாள், நகை பூத்தாள். சிறுகச்சிறுக அவளது பெண்மனம் மலர்ந்தது, எதையும் சாரும், எதையும் எதிர்கொள்ளும் நெஞ்சுரம் அவளுள் சிரித்தது போலும்!

''நீ என் சுந்தரி!...''

அவன் தன் உதடுகளின் ஈரத்தை இடது கைவிரல்களால் துடைத்துக் கொண்டான்.

அவள் மேனி புல்லரித்து நின்றாள். அவனது வெளுத்த உதடுகளைச் சீண்டி விட்டாள், ஆதரவுடன!

மறுபடியும் ஒரு சிகரெட் புகைந்தது.

அவன் அவளை மீண்டும் ஆராயத் தொடங்கினான்.

அவளுக்குப் புரிந்தது.

கடனுக்கு அடைக்க வேண்டிய திட்டத்துக்குக் கை கொடுக்க பைக்குள்ளே தவம் கிடந்த நகை நட்டுக்களின் உதவியை விளக்கினாள் சுந்தரி.

''வேலை செய்தமட்டும் சாலரி எப்ப தரும்?...''

''அதுக்கு மிச்சம் டயம் ஆகும்!''

''ஓஹோ!''

''ம்!...பக்கத்து மார்க்கெட் வரைக்கும் போயிட்டு வந்திட்ரேன்!...''

குலை சரிந்திருக்கும் செவ்வாழைக் கென்று தனித்தொரு கவர்ச்சி இருக்காதா?

அவளையே இமைக்காமல் பார்த்தபடி இருந்தான் மாதவன். இருமலைக் கட்டுப்படுத்த மாட்டாமல் திணறினான்—அதே போராட்டத்தின் அரிப்புடன், ''துட்டு?'' என்றும் வினவினான்.

''இருக்கு!''

''ஏது?''

அவள் தீப்பட்டாற் போல நடுங்கினாள். கண்கள் பொடித்தன.

அவளுக்கே உகந்த நேர்கொண்ட பார்வையால் தன் பதியை நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கென்று பண்பட்டு விட்ட ஒரு வைராக்கிய எழுச்சியுடன்!..''ரெண்டு நாள் டியன் சாப்பிடலே!...அந்தப் பணம் மிச்சம்!...பட்டு கத்தரித்த பாவனையாக பேசிவிட்டாளே!

அவன் சிரம் கீழ்ப்பார்வையில் இருந்தது.

புகையும் புகைச்சல் இருமலும் சூழ்ந்தன. ''ம்.... புறப்படு!...'' தாடி மீசையைத் தடவிக் கொண்டான்!

அவள் புறப்பட்டாள்; அங்கிருந்து புறப்பட மனமில்லாமலே புறப்பட்டாள்.

"'சுந்தரி!...டியர்!.."

மீண்டும் வந்தாள்.

பார்த்தான்!..

'..கல்யாணச் செக்கன் உண்டே!...!கீழ் வசத்தில், பாட்டின் இறுதிக்குரல் மிதந்தது.

ஜோடிச் சிரிப்புக்குப் பின், அவள் புறப்பட்டாள்!

சிறு பொழுதுக்குள் எத்தனை பெரிய அலுவல்கள் பூர்த்தியாகி விட்டன!..

மார்க்கெட் வேலை முடிந்தது.

கடன் அடைந்தது.

பஞ்சநதம் ஆபீசுக்குப் போய்க் கொண்டிருந்தான். "நேத்து ஆபீஸ் விட்டதும் உங்க வீட்டுக்கு வந்தேன். உங்க கிட்டே தனியே மன்னிப்பு கேட்க!'' என்றான்.

ஆபீஸ் ப்யூன் எதிர்ப்பட்டான். ''இப்ப உங்களைத் தேடிப் பார்த்திட்டுத் தான் உங்க வீட்லேருந்து வாரேன் அம்மா!...முடிஞ்சால், சீக்கிரம் ஆபீசுக்கு உங்களை வரச் சொன்னாங்க ஐயா!..ரொம்ப அவசர வேலையாம்!" என்றான்.

எல்லாவற்றுக்கும் தலையை உலுக்கிவிட்டு நின்றாள். பதில் பேசாமல், தன்னுடைய ராஜினாமா கடிதத்தை கிழவனிடம் நீட்டிவிட்டு, திரும்பிக் கூடப் பார்க்காமல் நடந்தாள்.

முச்சந்தித் திருப்பம்.

"ஹல்லோ!.."

சுந்தரி திரும்பினாள். அவளது அத்தானின் 'தோழன்'. ஒருவன் ஒயிலுடன் சிகரெட்டும் கையுமாக அவளை மறித்து நின்று ''பிரதருக்கு எப்படி இருக்கு?'' என்று கேட்டு 'பரவாயில்லீங்க!' என்ற பதிலைப் பெற்றுக் கொண்டும் நிம்மதிப் படாதவன் போல், சென்ற திக்கையே முறைத்துப்

பார்த்துக் கொண்டே நின்று விட்டு எப்போது நகர்ந் தாளோ, என்னவோ?. .

வேறொருவன் அடுத்த வீதியில் குறுக்கிட்டான். ஒரே ஆபீஸில் வேலை பார்ப்பவன். "உங்க புஸ்தகத்தைத் திருப் பித் தர உங்க வீட்டுக்கு வந்தேன். ஆமா உங்க புருஷனுக்கு என்ன அப்படி பராலிஸிஸா?. .இல்லே, ருமான்டிஸிஸமா?. .. பாவம்!. ."

அவள் புத்தகத்தை வாங்கிக் கொண்டாள். ''எல்லாம் எனக்கு என்ன தெரியும்?...பகவானுக்குத் தெரியும் மிஸ்டர் சாரநாத்!''

அதோ, செக்ஷன் ஆபீஸர் சார்!. .

'அட கடவுளே!'—சுந்தரி விசுக்கென்று பின்னுக்கு வாங்கி ஒளிந்து கொண்டாள். கண்கள் தளும்பின. ''என்னைக் கண்டுதான் காரை டர்ன் பண்ணி வந்தார் எஸ். ஓ!''

வெயில் நெற்றியை ஒட்டியது.

மனச் சுமை ஏறிவிட்டது.

ஒரு சுமையை இறக்கினால் இன்னொரு பளுவா?

தெய்வமே!

நடந்தாள்!...

காலத்தைச் சாரும் திட்சண்யமிக்க வல்லமை கைவரப் பெற்றவள் போல கைவீசி நடந்தாள்!

சுந்தரி வீட்டினுள் நுழைந்தாள்.

முதல் வேலையாக, தன் அத்தானைப் பார்க்க விரைந் தாள். கையில் பன்னீர்த் திராட்சைப் பொட்டலம் இருந் தது.

''அத்தான்!..."

கூவி விரிட்டாள் அவள்.

மாதவன் எங்கே?...

"அத்தான்!...

பெருங் குரலெடுத்து விளித்தாள்.

அவன் எங்கே?...

அவள் தவித்தாள். பதறினாள். துடித்தாள்.

மாதவன் எங்கே?...எங்கே மாதவன்?

ஓரிடத்தில் வட்டியைத் தள்ளிக் கொண்டார்கள்.

ஆனால் இங்கே முதலுக்கே ஆபத்து வந்துவிடும் போலிருக்கிறதே!...

எங்கெல்லாமோ தேடினாள்.

இன்னமும் மாதவன் மீளவில்லை.

இருட்டு வந்தது.

ஒளியைக் காணோமே!

"அத்தான்!...அத்தான்!...

மயங்கிச் சுருண்டாள். வாசல் தூணில் சார்ந்தபடி, கண்ணீர் பெருக்கினாள். தாலி எம்பி எம்பித் தணிந்தது.

கைவண்டி ஒன்று வாசலில் வந்து நின்றது. தெருவிளக்கு வெளிச்சம் மங்கலாக இருந்தது.

மாதவனை கைத்தாங்கலாகத் தூக்கி வந்து உள்ளே மெத்தையில் போட்டார்கள். வாயில் ரத்தம் நுரை கக்கின சுவடு காய்ந்து கிடந்தது.

"வழியிலே இவரு அடிப்பட்டுக் கெடந்தாரம்மா!... இவரை எனக்குத் தெரியும்!...பாவம்!..கையிலே இந்தப் பை இருந்திச் சம்மா!...நீ கொடுத்து வச்ச புண்ணியம் அவ்வளவுதாம்மா...தாயே!..."

ஆசையுடன் அவள் கையால் பூப்போட்டுப்பின்னிக் கொடுத்திருந்த பை அலங்கோலமாய்க் கிடந்தது.

அந்தப் பையினின்றும் வகை வகையான அரிசி மணிகளும், சில பைசா காசுகளும் சிதறி இறைந்திருந்தன!...

*   *   *   *

மாதவனின் புகைப்படம் மணந்தது.

சுந்தரி சூன்யமாகி நின்ருள்.

‘..அத்தான்! கடைசியில் நான்தான் உங்களுக்குச் சுமையாகி விட்டேஞ? ஊஹூம், அப்படி நான் கருதமுடியாது. ஏனென்ருல், நம் இருவர் உயிர்களும் ஒன்றில் ஒன்ருக உயிர் மாற்றம் பெற்றிருக்கையில், நம் இருவர் உடல்களும் ஒன்றுக்கொன்று சுமப்பதென்ருல், அப்புறம் நம் இருவர் கதையும் வெறும் கதையாகி விடாதா?..ஆம்; நம் முடிவும் அப்படி வெறும் கதையாக ஆகிவிடக்கூடாதேயென்றுதான், என் கோரிக்கையை நிறைவேற்ற காத்திருந்த இந்த விஷக் குப்பியைக் கூட நிராகரித்து விட்டேன்!...நாள் உங்களுடன் வாழ வேண்டிய வாழ்வு இன்னும் குறை விட்டிருப்பதாகவே என் உள்மனம்—என் மனத்தின் உங்கள் மனம் எச்சரிக்கை செய்கிறது!...ஆகவே உங்கள் சுந்தரி—என் மாதவனுடைய சுந்தரி உங்களுடன் மனத்தால், மாண்பால், மதியால், வைராக்கியத்தால் இந்த பயங்கரமான உலகத்திலே தானே ஒரு அதி பயங்கரமாகி வாழ்வாள்!...ஆஹா! இப்படி நீங்கள் மனம் விட்டுச் சிரிப்பதை அனுபவித்து எவ்வளவு நாட்கள் ஆகிவிட்டன!...இனி நானும் சதா சிரித்துக்கொண்டேயிருப்பேன், அத்தான்! ம்!..’

விடியவில்லை!...

பூப்போட்ட அந்தப் பையுடன் அதோ, புறப்பட்டு விட்டாள் சுந்தரி!